
# கொட்டியாரக் கதைகள்



வ.அ. இராசரெத்தினம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த. [illegible]

25/7/99

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொட்டியாரக் கதைகள்

(சிறுகதைத்தொகுப்பு)

ஆசிரியர்

வ. அ. இராசரெத்தினம்

வெளியீடு

கலை இலக்கிய ஒன்றியம்

மூதூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| நூல் | : கொட்டியாரக் கதைகள் (சிறுகதைத்தொகுதி) |
| ஆசிரியர் | : வ. அ. இராசரெத்தினம் மூதூர் |
| முதற்பதிப்பு | : 1999 வைகாசி |
| பிரதிகள் | : 600 |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| எழுத்து | : 12 புள்ளி |
| பக்கங்கள் | : VI + 143 |
| அட்டை | : திரு. சுவானிதாஸ் |
| வெளியிடுவோர் | : மூதூர் கலை இலக்கிய ஒன்றியம் |
| அச்சிட்டோர் | : சென். யோசப் கத்தோலிக்க அச்சகம், மட்டக்களப்பு |
| விலை | : ரூபாய் 120/= |

| | |
|---|---|
| Title | : Koddiyarak Kathaigal |
| Author | : V. A. Rajaratnam, Mutur |
| I[st] Edition | : May 1999 |
| Copies | : 600 |
| Types | : 12 Points |
| Pages | : VI + 143 |
| Cover Design | : Mr. Suwanithas |
| Publishers | : Union Of Literature & Arts, Muthur. |
| Printers | : St. Joseph's Catholic Press, (Off Set) Batticaloa. |
| Price | : Rs. 120/= |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமர்ப்பணம்

ந. சிவஞானசுந்தரம்

என்ற இயற்பெயர்கொண்ட

ஈழத்துச் சிறுகதை மூலவர்களில்

ஒருவரான

என் இலக்கியக் குருநாதர்

'இலங்கையர்கோன்'

அவர்களுக்கு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

மகாவலி கங்கையின் இரு கிளைகளான குருக்கள் கங்கைக்கும் வெருகல் கங்கைக்கும் இடைப்பட்ட பிரதேசத்தைக் கொட்டியாரப்பற்று என்று சரித்திர நூல்கள் குறிப்பிடுகின்றன. இப்பிரதேசத்தின் பேரூர் கொட்டியாரம் என்றே வழங்கப்பட்டுவந்தது. 17ம் நூற்றாண்டிற்குப் பின்னர் தான் அதற்கு மூதூர் என்ற பெயர் வந்தது. அந்த மூதூர் தான் நான் பிறந்த மண்.

இந்த மண்ணிற் பிறந்தமைக்காக நான் பெருமைப்படுகின்றேன். ஏனென்றால்

'மாவலியின் பேரால் வழங்கு மணிநதியும் காவும் பொழிலும் கழிமுகமும் புள்ளணிந்த ஏரியும் மல்கி ...........'

என்று விபுலானந்த அடிகளார் பாடியிருக்கும் அடிகளுக்கு அச்சாவாகப் பொருந்துவது இப்பிராந்தியமே. நீர்வளமும் நிலவளமும், கடல் வளமும் உடையது எனது மண். இந்த மண்ணின் மகள் என்ற உணர்வே என் எழுத்துக்களின் அடிநாதம். இம்மண்ணின் வனப்பையும் வளத்தையும் நேசிப்பதே என் யோகம்! இம் மண்ணின் மக்களது வாழ்வை இலக்கியமாக்குவதே என் நோன்பு. நான் எழுத ஆரம்பித்த நாட்களிலிருந்தே இத்தவத்தை இயற்றி வருகிறேன்.

இக்கதைத் தொகுப்பில் 1952 தொடக்கம் 1997 வரையும் எழுதியுள்ள பதினாறுகதைகள் இடம் பெறுகின்றன. ஆனாலும் இத் தொகுப்பில் வெருகலாற் றங்கரையை அண்மிய ஈச்சிலம்பற்றுக் கதைகள் இடம் பெறவில்லை. அக் கிராமங்களின் சூழ்நிலையிலும் பலகதைகளை எழுதியே இருந்தேன். ஆனால் அவை தற்போது என் கைவசம் இல்லை!

உள்நாட்டுப் போரின் போது என்னிடமிருந்த என் எழுத்துக்கள் எல்லாமே தீக்கிரையாகின. அதன்பின் கொழும்பு சென்று தேசிய சுவடித் திணைக்களத்தில், மிக்க சிரமத்துடன் என்கதைகள் சிலவற்றைத் தேடி எடுத்தேன். அவைகளில் ஈச்சிலம்பற்றைக் கதைகள் இல்லை. என்தேடுதல் இன்னமும் தொடர்வதால் அடுத்து வரும் தொகுதிகளில் அவை இடம்பெறும்.

ஆனால் எத்தனை சிறுகதைகளையும் நாவல்களையும் எழுதினாலும் கூட, என் பிரதேசம் எனக்கு அள்ள அள்ளக் குறையாத அட்சயபாத்திரமாகத் தான் இன்னமும் இருக்கிறது.

ஈழத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும். உள்நாட்டுப் போரினால் என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசமும் உருக்குலைந்து போயுள்ளது. முப்பது ஆண்டுகளுக்கு முன்னாற்கண்ட அமைதியையும், வளத்தையும், வளப்பையும் இன்றைக்குக் காணமுடியவில்லை. மாறாக வறுமையையும், விரக்தியையும், வேதனையையுமே இப்போது காண்கின்றேன். அவலங்களையே பார்த்துக் கொண்டிருப்பதால் மனம் மரத்துப் போய்விட்டது. போக்கு வரத்து வசதியீனங்கள், தபால் கிடைப்பதிலுள்ள சிரமங்கள், அயலிலே சிறந்த நூலகங்களின்மை, உலகத்துச் சமகால இலக்கியங்களை அறிந்துகொள்ள முடியாத இருள், எல்லாவற்றிற்கும் மேலாக ஓட்டாண்டிகளாகிவிட்ட ஊரவர்களதும் என்னுடையதுமான அவலநிலை, என் வயோதிபத்தின் நெருக்குதல் இத்தனைக்கும் தாக்குப்பிடித்து நின்றே இலக்கிய வாதியாக வாழ வேண்டியுள்ளது. இந்த நிலையிற்தான் இத்தொகுப்பை வெளியிடுகின்றேன்.

அப்படிச் செய்கையில் மனதிலே ஒரு நிறைவும் ஏற்படுகின்றது. இன்னமும் சில நூறு ஆண்டுகளுக்குப் பின்னால் வரும் சரித்திர மாணவன், இருபதாம் நூற்றாண்டின் பிற்கூறுகளிற் கொட்டியாரப்பற்று எப்படியிருந்தது என்பதைத் தெரிந்து கொள்ள என் கதைகளைப் படித்தே ஆகவேண்டும் என்ற மன நிறைவுதான் அது. ஆனால் அந்த நிறைவு மட்டும் இலக்கிய வெற்றியாகி விட முடியுமா?

என்வரையில் அது வெற்றியேதான்!

இத்தொகுதியை வெளியிட எனக்குப் பண உதவி புரிந்த என் மருமக்கள் யோகேஸ்வரன், சௌந்தரராஜன், ஜெயசீலன் ஆகியோருக்கும்,

இந்நூலை வெளியிட எனக்கு உந்துதல் தந்த மூதூர் கலை இலக்கிய ஒன்றியத்தினருக்கும்,

இதனை அழகுறப் பதிப்பித்த மட்டக்களப்பு சென். ஜோசப் கத்தோலிக்க அச்சகத்தினருக்கும்,

சரவை பார்த்த கவிஞர் குணரெத்தினம் அவர்களுக்கும்,

இக்கதைகளைத் தம் பத்திரிகைகளில் வெளியிட்ட அதன் ஆசிரியர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி.

வணக்கம்!

திரிகூடம் — வ. அ. இராசரெத்தினம்
மூதூர்
25.05.1999



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

உள்நாட்டுக் கலவரங்களினால் ஏற்பட்ட அனர்த்தங்களின் பின்னால் சமீபத்திற்தான் மூதூர் கலை இலக்கிய ஒன்றியம் மீண்டும் இயங்கத் தொடங்கியது. கடந்த நான்கு ஆண்டுகளில் பல இலக்கிய விமர்சனக்கூட்டங்களை நடத்தினோம். மறைந்த கவிஞர்கள் மூவரின் கவிதைகளைக் "கங்கைக் காவியம்" என்ற நூலாக வெளியிட்டோம். வாழும் கவிஞர் மூதூர் முகைதீனின் "பிட்டும் தேங்காய்ப்பூவும்" என்ற கவிதைத் தொகுதியையும் வெளிக்கொணர்ந்தோம்.

எம்மூரின் முதுபெரும் எழுத்தாளரான திரு வ. அ. இராசரெத்தினம் அவர்களுக்குப் பொன்னாடைபோர்த்தி, தங்கப் பதக்கம் அணிவித்துக் கௌரவித்துப் பாராட்டினோம். அதனைத் தொடர்ந்து அன்னாரது கதைத் தொகுதியொன்று தற்போது வெளியிடுகிறோம். மூதூர்ப் பிராந்திய மண்ணின் மணம் கமழும் பதினாறு கதைகள் இத்தொகுதியில் அடங்கியுள்ளன. தென்பாண்டி நாட்டு திருநெல்வேலி மாவட்டத்தின் கரிசல் கதைகள் போல வ. அ. வின் கொட்டியாரக் கதைகளும் இலக்கிய உலகில் சிரஞ்சீவியாக வாழும் என்பது எம் நம்பிக்கை.

வாசகப் பெருமக்கள் எம் முயற்சிக்கு ஆதரவு தருவார்கள் என்ற நம்பிக்கையும் எமக்குண்டு.

நன்றி

நொக்ஸ் வீதி
மூதூர்

மூதூர் கலை இலக்கிய ஒன்றியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே ...........


| | | பக்கம் |
|---|---|---|
| 1. அந்த விருந்து | ஈழகேசரி 1952 | 1 |
| 2. நம்பிக்கை | வீரகேசரி 1961 | 5 |
| 3. நியதி | வீரகேசரி 1964 | 13 |
| 4. தாய் | வீரகேசரி 1966 | 26 |
| 5. காட்டுப்பூ | மலர் 1968 | 33 |
| 6. அடக்கம் | வீரகேசரி 1968 | 43 |
| 7. அபிஷேகம் | சிந்தாமணி 1968 | 57 |
| 8. சீதேவிக்காக | வீரகேசரி 1978 | 65 |
| 9. ஓர் ஆமைக்கதை | வீரகேசரி 1982 | 76 |
| 10. கௌரவப் பிச்சை | வீரகேசரி 1982 | 85 |
| 11. இந்தனம் இறக்கி | வீரகேசரி 1988 | 93 |
| 12. இரசிகன் | வீரகேசரி 1988 | 101 |
| 13. எங்கள் கடன் காரருக்கு | வீரகேசரி 1989 | 111 |
| 14. சங்கிலி | களம் 1996 | 121 |
| 15. துணிச்சல் | சரிநிகர் 1997 | 129 |
| 16. தியாகி | தினக்குரல் 1997 | 137 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த விருந்து

அந்த இரவு விருந்திற்காக அந்த வீடே தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டிருந்தது. விருந்திற்காக அம்மா அடுக்களைக்குள் விதம் விதமான .கறிகளைத் தயாரிப்பதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாள். ஆர்வத்தோடும் குறுகுறுப்போடும் மகள் அவளுக்கு உதவி செய்து கொண்டிந்தாள். விருந்திற்கு வரப்போகும் அத்தான் தரவிருக்கும் நத்தார்ப் பரிசுகளுக்காகத் தம்பிமார் ஆவலோடு காத்துக் கொண்டிருந்தனர். பொறுப்பு, கவலை என்ற நியதிகளற்றுச் சுழலும் அக்கிரக மண்டலத்தைத் தன் தலையிற் சுமந்து கொண்டிருந்த அப்பா முன் வராந்தாவிற் கதிரைக்குள் அமர்ந்து யோசித்துக் கொண்டிருந்தார்.

அந்த விருந்து இன்றைக்கு மட்டுமல்ல. கடந்த நான்கு ஆண்டுகளாக நத்தாரை ஒட்டிய நாட்களில் அந்த வீட்டில் நடந்து கொண்டேயிருக்கிறது. விருந்துக்குரியவர் கொழும்பில் உத்தியோகம் பார்க்கிறார். வீட்டுத் தலைவர் அவரது தாய்மாமன். ஒவ்வோர் நத்தாருக்கும் அவர் விடுமுறைக்கு ஊருக்கு வரும்போது, ஏதாவது ஒரு நாளில் அவருக்கு அந்த வீட்டில் விருந்து நடக்கும். சில மணித்தியாலங்கள் மாமனார் வீட்டில் இருந்து விட்டு, விருந்தினர் போய்விடுவார்.

மாமனாருக்கு ஒரு நம்பிக்கை!
மகளுக்கும் கூட அது இருந்தது. இருக்கிறது!

இன்று மாலையும் ஏழுமணியான போது அவர் வந்தார். அவரைக் கண்டதும் முன் வராந்தாவில் அமர்ந்திருந்த மாமனார் எழுந்து "வாருங்க தம்பி" என்று அவரை வரவேற்றார். அவர் தம் மருமகனோடு என்றைக்குமே அதிகமாகப் பேசியவரல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரது வருகையைத் தெரிந்து கொண்ட மகள், அவசர அவசரமாக வீட்டுக்குள் வந்து, கதவோரம் நிலையிற் சாய்ந்து கொண்டு தன் முந்தானைச் சேலைத் தலைப்பை முறுக்கிக் கொண்டு திரைக்கூடாக அவரைத் தன் ஓரக் கண்களாற் பார்த்துக் கொண்டிருந் தாள். அவளும் 'சமைந்த' பிறகு அத்தானோடு 'அளகொளப்பாக'ப் பேசியறியாத கிராமப்பெண்!

இருபத்தந்தைக் கடந்தாலும் அவளுக்கு ஒற்றை நாடியான உடம்பு. பளிச் சென்ற வட்டமானமுகம். என்றாலும் அதிற் கவலையின் ரேகைகள். கண்களில் ஒரு ஏக்கம், இந்த நத்தாரோடாவது தனக்கு விடிவு காலம் வராதா என்ற ஒரு தாபம்.

விம்மி நிற்கும் மார்பிற்குமேலே ஒற்றைப் பின்னல் சாட்டையாய் நெளியக் கதவு நிலையருகில் ஒருக்களித்து நின்று கொண்டு அவரையே கடைக் கண்களாற் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அடுக்களையிலிருந்து அம்மாவின் அழைப்பு!

நிலையடியில் நின்றவள் புறுபுறுத்துக் கொண்டு போனாள் அடுக்களைக்கு.

மீண்டும் போனகையோடு வந்தாள். தன் யதாஸ்தானத்தில் நின்றபடியே மீண்டும் திரையை விலக்கிக் கொண்டு கடைக்கண்க ளால்...........

கதைத்துக் கொண்டிருந்த அப்பாவிற்கு அலுப்பு! மேலும் மருமகனோடு எவ்வளவுதான் கதைப்பது? செருமிக் கொண்டு வெளியே போனார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா எப்போது போவார் என்று காத்துக் கொண்டிருந்த தம்பிமார் அத்தானிடம் போய் அவர் மடியிற் புரண்டு செல்லங் கொஞ்சிக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் அவளாற் தம்பி மாரைப் போல அவரோடு போய்க் கொஞ்சிக் குலாவ முடியுமா?

அவருந்தான் எழுந்து வந்து இரண்டு வார்த்தைகள் பேசினால் வாய் முத்துதிர்ந்து விடுமா? அவள் ஒருத்தி இருக்கிறாள் என்ற நினைப்பே இல்லாமல் மச்சான் மாரோடு சரளமாடிக் கொண்டிருக்கிறார்!

அவளுக்கு எரிச்சலாகவும் இருந்தது. ஆயினும் அவ்விடத்தை விட்டுப் போக மனமின்றி நின்றாள்!

வெளியே சென்ற அப்பா அடுத்த வீட்டிலிருந்த தன் தம்பியின் மகனோடு வந்தார். வந்தவன்

"எப்ப அத்தான் வந்தீங்க?"

"நான் வந்து நான்கு நாட்கள். உனக்குத் தெரியாதா?"

"அது தெரியும் அத்தான். இங்க எப்ப வந்தீங்க?"

"ஏழு மணியிருக்கும் வரக்க"

"அப்படியா? இப்பதான் பெரியப்பு வந்து சொன்னார்"

எட்டு மணியாகிக் கொண்டிருந்தது. அடுக்களைக்குள்ளிருந்து வெளியே வந்த அம்மா வராந்தாவின் எதிர் மூலையிலிருந்த சாப்பாட்டு மேசையை ஆயத்தப் படுத்தினாள். விதம் விதமான கறிகள், பச்சடிகள், சம்பல், வறுவல், பொரியல்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சாப்பிடுங்க தம்பி. நேரமாகுது. அத்தானோட சேர்ந்து நீயும் சாப்பிடு மகன்" என்கிறார் அப்பா என்ன தான் இருந்தாலும் வர இருக்கும் மருமகனோடு சரிநிகராக இருந்து சாப்பிடப் பக்குவப்படாத கிராமவாசி அப்பா!

விருந்தினர் தன் ஒன்றுவிட்ட மைத்துனனோடு சாப்பிட அமர்கிறார். "சும்மா வெக்கப்படாமச் சாப்பிடுங்க" அம்மாவும் திரைக்குப் பின்னால் நின்றுதான் சொல்கிறாள்.

இருவரும் ரசித்துச் சாப்பிடுகின்றனர். பத்து மணியாகிக் கொண்டிருந்தது. விருந்தும் முடிந்தது விருந்தினரும் போய்விட்டார்.

அப்பா, அம்மாவிடம் சொன்னார்.

"வாற வருடத்திலயும் அவரால முடியாதாம். தன் தங்கச்சிர கல்யாணத்திற்குப் பட்ட கடன் இன்னமும் இருக்காம். நம்ம கையிலயும் அவருக்குக் கூடக் குறையக் கொடுக்கவக்கில்ல."

"நீங்கதான் உங்கட ஆசமருமகன் என்று நம்புறீங்க."

"நம்பாம எப்படி?"

"எனக் கென்னவோ நம்பிக்கையில்ல. விட்டிற்று விரலுக்குத் தக்க வீக்கமாப் பாருங்க"

மகள் கண்களில் நீர் முட்டுகிறது. அவள் இன்னும் எத்தனை வருடங்கள் அழவேண்டுமோ?

**ஈழகேசரி 1952**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கை

பெய்யாமழையும் பெருமழையுமாக மாரி முழுக்கக் கொட்டியது. காடு கொள்ளாத சாதுவாக மிரண்ட மகாவலிகங்கை கரைபுரண்டது. ஊரின் அயலிலுள்ள நீர்ப்பாய்ச்சற் குளங்கள் எல்லாமே அணைகளை உடைத்துக் கொண்டன. ஊரே–கொட்டியாபுரப்பற்று முழுவதுமே வெள்ளக்காடாகியது.

கதிருங்குடலையுமாகக் காற்றிலசைந்து கொண்டிருந்த நெற்பயிர்கள் வெள்ளத்தில் ஆழ்ந்தன. நெற்கழனிகளுக்கு அப்பால் திடர்களிலே விம்மி விளைந்து சென்ற சேனைப் பயிர்கள் சோளன், இராசவள்ளி, மரவள்ளி, கச்சான் என்ற எல்லா வான்பயிர்களுமே வெள்ளத்தில் ஆழ்ந்தன.

மாவலிகங்கைக் கரையிற் பட்டியில் நின்ற கால்நடைகள் வெள்ளத்தில் அள்ளுண்டன. ஊரிலே பட்டி, பட்டியாக நின்ற வெள்ளாடுகளும் மழைக் கூதலிலேயே கொடுகிச் செத்தன.

வெள்ளத்திற்குத் தாக்குப் பிடிக்க முடியாத காட்டுமிருகங்கள் கூட்டங்கூட்டமாக ஊருக்குள் வர ஊரவர்களுக்கு வேட்டை. எல்லாரது அடுப்புகளிலும் மான் இறைச்சியும் மரை இறைச்சியும் அள்ளுவார் கொள்ளையாக மலிந்தன.

பள்ளப் பகுதிகளில் வாழ்ந்த ஊர்மக்கள் தத்தம் தட்டுமுட்டுச் சாமான்களோடு திடரை நோக்கிப் பயணித்தனர். பாடசாலைகளும் கோயில்களும் சரணாலயங்களாயின.

ஊர் முழுக்க வெள்ளக்காடு! அழிவு! அரசாங்கம் வேண்டுகோள் விடுத்ததினால் இந்தியக் ஹெலிக்கோப்ரர்கள் உயரப் பறந்து வெள்ளப் பகுதிகளில் உணவுப் பொட்டலங்களை வீசின. அப்பொட்டலங்களில்லா விட்டால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவலிக்கரையின் வளங்கொழிக்கும் கொட்டியாபுரப்பற்றிற் கூடப்பட்டி னிச்சாவு ஏற்பட்டிருக்கும்!

ஆனால் திருக்கொட்டியாபுரப்பற்று கட்டை பறிச்சானைச் சேர்ந்த ஆறுமுகம் சித்திராவி என்ற சித்திரவேலுக்கு உணவுப் பஞ்சம் இல்லை. தன் வீட்டுக்குள்ளேயே உயரமாகப் பலகைகளால் அட்டாளை போட்டுப்பத்து மூட்டை நெற்சாக்குகளை அடுக்கியிருக்கிறார். அவை அடுத்து வரும் ஆறுமாதங்களுக்குத் தாக்குப் பிடிக்கும்.

ஆனால் இறையால் தீவு வெளியில் அவர் செய்கை பண்ணிய பத்து ஏக்கர் நீர்ப்பாய்ச்சல் கண்டம் வெள்ளத்தில் ஒரு கிழமைக்கு முன்னரே ஆழ்ந்து விட்டது. குறவன்வெட்டையில் அவர் சேனைக் காட்டை நேற்றுத்தான் வெள்ளம் மூடிக்கொண்டது. அங்கிருந்து தோணி மூலம்தான் அவர் வீட்டிற்கு வந்து சேர்ந்தார். வீட்டுத் தோட்டத்திற் பயிரிட்டிருந்த இராசவள்ளிக் கொடிகளும், வெள்ளைக் கிழங்குகளும் கூட நீருக்குள்ளேயே நின்றன. அவைகள்கூட அழிந்துவிடும் என்ற எண்ணத்தில் தண்ணீரில் நின்றபடியே அவைகளைக் கிண்டினார். முற்றாத கிழங்குகளைக் கையில் எடுத்தபோது அவருக்கு அழுகையே வந்து விட்டது. பிடுங்கிய கிழங்குகளையும் கொடிகளையும் தொழுவத்திற் கட்டப்பட்டிருந்த வண்டி மாடுகளின் தொட்டியிற் போட்டுவிட்டு அவைகளைத் தடவிக்கொடுத்தபோது கயமுந்தான் குளத்தருகே பட்டியில் நின்ற அவரது நான்கு பசுக்களதும் மூன்று நாம்பன்களதும் நினைவு வந்தது. அந்த வாயில்லாப் பிராணிகள் இந்த வெள்ளத்தில் எங்கு அள்ளுப்பட்டுப் போயிற்றோ?

அழிவு! ஒரே அழிவு!

ஊரே அழிந்ததைப் பற்றிச் சித்திராவி சிந்திக்கவே இல்லை. ஆனால் தனது அழிவுகளுக்கெல்லாம் காரணம் வீட்டுக்கு வந்த தன் மருமகள் தான் என்று அவர் நம்பினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய மூத்தமகன் அம்பலவாணனை அவர் மூதூர்ப் பட்டினத்திற்கனுப்பிப் படிக்க வைத்தார். ஆனால் அவன் இடையிலேயே படிப்பைக் குழப்பிக் கொண்டு வந்துவிட்டான்.

அதையிட்டும் சித்திராவி கவலைப்பட்டது கிடையாது. "படிச்சு வாத்தியாப் போய்த்தான் என்ன பிரயோசனம்? இந்த ஊரில வாத்திமார் படுறலோலாயத்தைக் காணவில்லையா? இஞ்சேக்கர் வெள்ளாமைச் செய்தான் எண்டால் அவண்ட சோத்த நாயுந்தின்னாது" என்றெல்லாம் சித்திராவி சொல்லிக் கொண்டார்.

மகன் அம்பலவாணனும் அவரது நம்பிக்கையைப் பங்கப்படுத்த வில்லை. திறமான விவசாயியாக உழைப்பாளியாகத்தான் இருந்தான். தன் உழைப்பிலேயே புத்தம் புதிய றலி சைக்கிள், ரேடியோ– ஏன் புத்தம் புதிய மாட்டு வண்டியும் ஒரு சோடி நாம்பன் மாடுகளும் கூட வாங்கிக் கொண்டான்.

நாளாந்தம் தன் சைக்கிளைத் தள்ளிக்கொண்டு மூதூருக்குப் படம் பார்க்கச் செல்லும் சோக்காளியான தன் மகனுக்குக் கால் கட்டுப்போட்டு வைக்க எண்ணினார் சித்திராவி.

அயலட்டையில் பெண்பார்ப்பதை விளங்கிக் கொண்ட அம்பலவாணன் "தான் சௌந்தரத்தைத் தான் கல்யாணம் பண்ணிக் கொள்வேன்" என்று தன் காதலை வெளிப்படுத்தினான்.

சித்திராவிக்கு அதிர்ச்சியாக இருந்தது

ஆனால் அவரின் மனைவி தெய்வானை அவரைச் சாந்தப்படுத்தினாள். "அவனுக்குத்தானே பெண் தேவை. அந்தப் புள்ளையும் என்ன நமக்குத்தூரமா? எல்லாம் ஒண்ணுக்கு ஒண்ணு. நீங்க சும்மா புறுபுறுத்துக் கொண்டிராம அவன விடுங்க" என்றாள் அவள்.

தெய்வானையின் வேண்டுகோளுக்குக் கட்டுப்பட்ட சித்திராவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் மூலமாகவே சௌந்தரத்தின் சாதகத்தையும் பெற்று இருவரது சாதகத்தையும் விசுவலிங்கச் சாத்திரியாரிடம் கொடுத்துப் பார்த்தார்.

விசுவலிங்கச் சாத்திரியாருக்கும் அம்பலவாணன் மேல் ஒரு கண். அவனைத் தன் தம்பியின் மகளுக்குக் கேட்டுப் பார்க்கலாம் என எண்ணியிருந்தவர் சாதகங்களைக் கண்டபோது ஏமாற்றமடைந்தார். ஆனாலும் தன் ஏமாற்றத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல் சாதகங்களைப் பார்த்தார். சித்திராவி அவர் முன்னால் அமைதியோடும் ஆர்வத்தோடும் அமர்ந்து கொண்டிருந்தார்.

கூறுகுறிப்பாகச் சாதகங்களைப் பார்த்துக் கொண்டிருந்த விசுவலிங்கத்தார் தன் மூக்குக் கண்ணாடியை மூக்குத் தண்டின் நுனிக்குத்தள்ளிவிட்டு" சாதகங்கள் பொருந்தித்தான் இருக்கின்றன. ஆனால் .... என்று இழுத்தார்.

என்ன ஆனால்...... சித்திராவி கேட்டார்.

ஒன்றுமில்லை, ஆனால் இந்தச்சாதகர்களுக்குக் குறையில்லைத் தான். ஆனால் இந்தப் பெண் புகுந்த வீட்டுக்குத்தான் சில குறைகள் ஏற்படும்.

அப்படியா? என்ற சித்திராவி சாதகங்களை வாங்கிக் கொண்டு வீட்டுக்குச் சென்றவர் "இந்தா பிடி சாதகத்தை இப்பவே கொண்டு போய்க் கொடுத்துவிடு. அவ்வளவு நல்லாப் பொருந்தல்ல என்று சாத்திரியர் சொல்றார்" என்று பெண்ணின் சாதகத்தை விட்டெறிந்தார்.

இந்தக்கல்யாணம் நடக்காது. நடக்கக்கூடாது என்று ஒற்றைக் காலில் நின்றார் சித்திராவி.

ஆனால் அவர் என்ன சொல்லியும் அவர் மகன் கேட்கவேயில்லை. அப்பாவை வழிக்குக் கொண்டுவர முடியாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதைத் தெளிந்து கொண்ட அம்பலவாணன் அந்த ஆண்டு ஆவணிமாத முகூர்த்த நாளில் எவருக்கும் தெரியாமற் பெண் வீட்டுக்குச்சென்று பிள்ளையார் மடைக்கு முன்னாற் பெண்ணின் கழுத்தில் தாலி கட்டிக் கொண்டான்.

சித்திராவி குமுறினார்! கொதித்தார்! ஆனால் எப்படியோ அடங்கிப் போயும் விட்டார்.

புரட்டாதிமாத முடிவில் மழை கொட்டத் தொடங்கியது. சித்திராவி தன் இளைய மகனை மட்டும் கூட்டிக்கொண்டு போய் இறையால்தீவு வயலைப் பரம்படித்துச் சேறாக்கி விதைத்தார். தலை மழைக்குப் பயிர் கிசு கிசு வென்று வளர்ந்தது.

ஆனால் மார்கழியிற் பேய்மழை கொட்டியது. கங்கைகரை புரண்டது. குளங்கள் உடைப்பெடுத்தன. ஊரே வெள்ளக்காடாகி ஒரே அழிவு

ஊருக்கு வந்த அழிவைப் பற்றிச் சித்திராவி சிந்திக்கவில்லை. ஆனால் தன்னிடம் உள்ளது உடையது எல்லாவற்றையும் துடைத்துக் கொண்டு சென்றதற்கெல்லாம் ஒரே காரணம் தன் மருமகளின் வரவுதான் என்று அவர் நம்பினார். விசுவலிங்கச் சாத்திரியார் அந்த நம்பிக்கையை நன்றாகவே விதைத்திருந்தார்.

* * *

ஊருக்குள் வெள்ளம் வடிந்து விட்டது. வெள்ளம் நின்று அழுகிய பயிர் பச்சைகளின் நாற்றமும், வெள்ளத்தில் இறந்துபோனகால் நடைகளின் பிணவாடையும் கூட அற்றுப்போய் விட்டன.

அரசாங்கம் கொடுத்த வெள்ள நிவாரணப் பணத்தைப் பெற்றுக்கொண்ட விவசாயிகள் மீண்டும் மண்ணைக் கிண்டத் தொடங்கினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைந்த பாலங்களையும் மதகுகளையும் அரசாங்கம் புனர் நிர்மாணம் செய்யத் தொடங்கியது. அதன் காரணமாக ஊரிலே காணியற்றவர்களுக்குக் கூட வேலை வாய்ப்பு ஏற்பட்டது. ஊரிலே பணப்புழக்கம் ஏற்பட்டபோது வெள்ளம் பொய்யாய்ப் பழங்கதையாய்ப் போயிற்று.

சித்திரை பிறந்ததும் சித்திராவியார் தன் இறையால்தீவு வயலைச் சேறாக்கி விதைத்தார். ஆனாலும் அவர் மனதிலே அவநம்பிக்கை. மருமகள் வந்த நேரகாலம் சரியில்லையே. வயல் எப்படிப் போகுமோ என்று பயந்து கொண்டேயிருந்தார்.

இறையால்தீவு வயல் வெளியிற் கூய் என்று வீசிய சோழகத்தில் முற்றிய நெற்கதிர்கள் தரையோடு படுத்துவிட்ட போது ஆவணிமாதம் பிறந்து விட்டது. சித்திராவி அறுவடைக்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தார். அவர் தன் வேலைக்காரன் கம்புகளை எடுத்துத் துடைத்து அவைகைளைத் தரையில் அடித்த முளைகளில் வளைத்து வைத்துக் கொண்டிருந்த போதுதான் அயல் வீட்டுக்காரி அவர் மனைவியிடம் சொன்னாள் "தெய்வானை உன்ர மூத்தமகன்ர மனுசிக்கு வயிற்று நோ எடுத்திட்டாம், ஆனாப் பேறு கொஞ்சம் கஸ்டமாயிருக்காம்."

அந்தச் செய்தியைக் கேட்ட தெய்வானை "நான் மகன் வீட்ட போயிற்று வரட்டா?" என்று கேட்டாள்.

அவள் கேட்டதையே காதில் விழுத்திக் கொள்ளாதவராகத் தன் வேலைக்காரன் கம்பை வளைக்கும் பணியில் மும்முரமாக இருந்தார் சித்திராவி.

"இந்தாங்க உங்களுக்குப் புடிச்சா என்ன புடிக்காட்டி என்ன? நான் பெத்தமகனில இன்னமும் வெட்டினவாளில வெண்ணெய் எடுத்துக் கொண்டு இருக்கேலா. நான் வாறன்" என்று சொல்லிவிட்டு அம்பலவாணன் வீட்டை நோக்கி நடையைக் கட்டினாள் தெய்வானை.

சித்திராவி அப்போதும்கூட ஏதும் பேசாமலே இருந்தார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது தான் கடைக்குப் போய் வந்த அவர் இளைய மகன் "அப்பா வியாபாரியார் கடை பூட்டியிருக்கு. இன்று ராவைக்குத் திருவோணம் பிறக்குதாம், அவங்கட ஊரில திருவோணம் பெரிய திருவிழாவாம், அதனால அவர் இன்றைக்குக் கடையே திறக்கமாட்டாராம். அதனால நான் சைக்கிளில மூதூருக்குப் போய் உங்களுக்கு வெத்திலை வாங்கிற்று வாறன்" என்றான்.

சரிதாண்டா, உனக்கு மூதூரில வேல இருந்திருக்கும். சும்மா உலாத்தீற்று வந்து எனக்குக் கதை விடுறா.

"இல்லப்பா, நீங்க வேணுமெண்டா யாபாரியாரிட்டப் போய்க் கேட்டுப் பாருங்க. அவர் தன்ர வீடு கடையெல்லாம் கழுவித்துடைத்துச் சாம்பிராணி புகைத்து, ஊதுபத்தி கொளுத்தி... அப்பா, இன்றைக்குத்தான் மாண்டுபோன மாவலிச் சக்கரவர்த்தி மீண்டும் ஊருக்கு வாறாராம். மலையாளத்தில் இந்தப் பெருநாளை அஞ்சாறு நாளைக்குக் கொண்டாடுவாங்களாம் எண்டு அவர் சொன்னார்."

"சரிடா எத்தனை மணிக்குடா திருவோணம் பிறக்குது எண்டு கேட்டியாடா?"

"நான் கேக்கல்லப்பா. இராவைக்குப் பிறக்கும்" என்று அவர் மொட்டையாச் சொன்னார்.

"அப்படியா?" என்ற சித்திராவி திருவோணத்தில பிறந்தவன் ஒரு கோணத்தை ஆள்வான் என்று முணுமுணுத்தார்.

"சித்திரவேலண்ணா உங்களுக்குப் பேரன் பிறந்திற்றானாம், சரியா எட்டு நாப்பத்தொன்றாம் பிறக்கக்குள்ள" என்று வேலிக்கப்பால் நின்று கொண்டே மகிழ்ச்சி வாங்கச் சொன்னாள் அடுத்த வீட்டுப்பெண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"திருவோணம் பொறந்திற்றோ என்னவோ"
என்று தந்தை தனக்கத்தானே பேசியதைக்
கேட்டு, அவரது இளைய மகன் சைக்கிளைத்
தள்ளிக் கொண்டு "நான் போய் யாபாரியாரி
ட்டக்கேட்டிற்று வாறன் அப்பா" என்று
கொண்டே ஓடினான்.

அவன் கடைக்கே போகவில்லை. இடையிலே நின்று யோசித்தான்.

'அப்பா, அண்ணாவின் மனைவிதான் தன் கஷ்டங்களுக் கெல்லாம் காரணம் என அகாரணமாக நம்பிக் கொண்டு ஏங்குகிறார். ஆனால் அவரது பேரன், அவர் வெறுக்கும் மருமகளின் மகன், திருவோணத்திலேயே பிறந்திருக்கிறான் என்று அப்பாவை நம்ப வைப்பம். திருவோணத்தில் பிறந்தவன் ஒரு கோணத்தை ஆளுவான் என்று அவரே சொல்கிறார். தன் பேரன் திருவோணத்திலேயே பிறந்திருக்கிறான். அவனால் அவன் குடும்பத்திற்கும் தனக்கும் நலம் வரும் என்று அவரும் நம்புவார். அவர் கவலையும் ஒழியும்.'

என்று எண்ணியவனாக மலையாளத்தானின் கடைக்குப் போகாமலே திரும்பி வந்து தன் தந்தையிடம் அப்பா சரியா எட்டு முப்பத்தொன்பதுக்குத் திருவோணம் பிறந்து விட்டதாம் என்று யாபாரியார் சொன்னார் என்று புளுகினான்.

"அப்படியா? என்ர பேரன் திருவோண நட்சத்திரத்திற் தான் பிறந்திருக்கிறான். இனி இந்தக் குடும்பத்திற்கு எந்தக் குறைச்சலும் இல்ல. திருவோணத்தில பிறந்தவன் ஒரு கோணத்தை ஆளுவானல்லவா" என்று சொல்லி மகிழ்ந்தவர் "டேய்மகனே, இந்தாடா எங்கெண்டான போய் ரெண்டுறாத்தல் கற்கண்டு வாங்கி வாடா" என்று சொல்லித் தன் இளைய மகனிடம் பத்து ரூபாத் தாளை நீட்டினார்.

**வீரகேசரி 21–05–61**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியதி

திடீரென எங்கள் ஊரவரெல்லாம் போதி மாதவனைப் போல ஞானம் பெற்று விட்டார்கள்! காரணம் செல்லன் செத்துப் போனது தான்.

எங்களூர் பெரிய கிராமந்தான் என்றாலும் அக்கிராமத்தின் ஒரே ஒரு தெருவிற்தான் எங்கள் குடியிருப்பு. ஆகவே அந்தத்தெருச் செல்லனை விலாசம் ஒட்டாமலே தெரிந்துகொள்ளலாம். அவனுக்குமிஞ்சிப் போனாற் பத்தொன்பது வயதுதானிருக்கும், ஆனால் நீண்டு வளர்ந்து தன் கன்னிப்பாளையை அரும்பவிட்டுக் கொண்டு நிற்கும் கிணற்றடிக் கமுகுபோல, அரும்பிக் கொண்டிருக்கும் மீசையோடு கம்பீரமாக இருப்பான்.

வாழவேண்டிய வயதிலே வெம்பி விழுந்த மாம்பிஞ்சைப் போன்று, அகாலத்தில் நினையாப் பிரகாரமாய் இறந்து விட்டால் யார் மனந்தான் துணுக்குறாது? அவன் தாய், தன் எதிர்காலம் முழுவதையுமே தோற்று விட்டவளாய், தலையிலும் மார்பிலும் அறைந்து கொண்டு ஓலமிட்டு அழுதாள். அக்கைம்பெண்ணின் பிரலாபத்தைக் கண்டு ஊரே அழுதது.

செல்லன் என் பள்ளித்தோழன், அதற்கும் மேலால் நெருங்கிய உறவினன், மச்சான். அடுத்த வீட்டுக்காரன்.

அதிகாலையில் அவன் வீட்டிலிருந்து அழுகைச் சத்தம் கேட்டது. விழித்துக் கொண்ட அம்மா, அண்ணன் வீட்டிலேதான் அழுகிறார்கள்' என்று சொல்லிக் கொண்டே ஓடினாள். விழித்துக் கொண்ட நானும், அவள் பின்னால் ஓடினேன்.

செல்லன் தன் வீட்டு விறாந்தையிலே கிடந்த ஒற்றை வாங்கிலே நீட்டி நிமிர்ந்து படுத்துக்கொண்டிருந்தான். கூப்பிய அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகளுக்குள்ளே சிலுவை ஒன்றிருந்தது. அவன் தலைமாட்டில் இரண்டு மெழுகுதிரிகள் எரிந்து கொண்டிருந்தன.

அம்மா அவன் சடலத்தின் மேல் விழுந்து ஓவென்று அழுதாள். அவள் அழுவதைக் கண்டு நானும் அழுதேன்.

பிரேதத்தின் மீது வீழ்ந்து அழுத அம்மா களைத்துப் போனவளாகத் தரையிற் குந்திக் கொண்டு 'அண்ணன் மகனாரே, ஆசை மருமகனே' என்று ஒப்பாரி சொல்லிப் புலம்பினாள்.

ஒப்பாரி சொல்லி அழும் பெண்கள் கூட்டத்தை விலக்கி வழிசமைத்துக்கொண்டு நான் செல்லனின் அருகிற் செல்கிறேன். நேற்றுப்பின்னேரம் நானும் செல்லனும் மாவலிகங்கையின் சங்கமத்திட்டிலமர்ந்து கொண்டு நீண்ட நேரமாக எதையெதையோ பேசிக் கொண்டிருந்தோம். ஆனால் இப்போது அவன் நீட்டி நிமிர்ந்து கட்டையாய்ப் படுத்துக் கொண்டிருக்கிறான். ஆனாலும் அவன் முகத்தில் இன்னமும் அந்தப் புன்னகை சாகவில்லை. புன்னகை தவழும் அவன் முகத்தையே நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். மரணம் என்ற கருந்திரையைக் கிழித்துக் கொண்டு, மீண்டும் உயிர் பெற்றவனாகச் செல்லன் என்னோடு சல்லாபிப்பதான நினைவு...

இருவரும் இரண்டாம் வகுப்பிற்படிக்கிறோம். கார்த்திகை மாதம் கொட்டிய மழையில் எமது பாடசாலையையும் வீடுகளையும் அண்டியிருந்த காணிகளில் தகரைப் பற்றைகள் முளைத்துவிட்டன. தும்பைச் செடிகள், குட்டை குட்டையாய் எழுந்து அவற்றின்தலைகளில் வெள்ளை வெள்ளைப் பூக்கள். அந்தப் பூக்களில் வண்ணாத்திப் பூச்சிகள் மொய்க்கின்றன. கருநீலச்சிறகுகளில் செம்புள்ளிகள் வீழ்ந்த அழகான வண்ணாத்திப் பூச்சிகள், நானும் செல்லனும் காய்ந்த தென்னம்பாளையை எடுத்துக் கொண்டு, தும்பைப் பூக்களில் மொய்க்கும் வண்ணாத்திப் பூச்சிகளைப் பதுங்கிப் பதுங்கித் தென்னம்பாளைகளால் விசிறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுக்குகிறோம். தென்னம்பாளை நெட்டிகளிடையிற் சிக்கிக் கொண்ட வண்ணாத்திப் பூச்சிகளைப் பிடித்து, பச்சைத் தென்னோலைகளின் அருகே நூலாகத் தடித்தோடும் நரம்புகளைக் கிழித்து, அந்நரம்புகளால் வண்ணாத்திப் பூச்சியின் உடம்பைப் பிணிக்கிறோம். ஓலை நரம்பின் அடுத்த அந்தத்தில் கடதாசித்துண்டொன்றையும் கட்டி வண்ணாத்திப் பூச்சிகளை மேலே பறக்க விடுகின்றோம். எங்கள் கடிதங்களைத்தூக்கிக் கொண்டு வண்ணாத்திப் பூச்சிகள் பறப்பதைக் கைகொட்டி ரசிக்கிறோம்.

தேங்காய் உரித்த மட்டைகளைப் பொறுக்கி அவற்றின் உட்பக்கத்தில் நெருப்புத் தணலைக் கொட்டித் தீய்க்கிறோம். தீய்ந்த உரிமட்டைகளின் உட்புறத்தை போத்தல் ஓட்டுத் துண்டுகளால் வழித்தெடுத்து மட்டையைக் கோது ஆக்குகிறோம். அக்கோதின் பின்புறத்தின் கீழ்ப்பக்கமாக விறகுச்சிராய் ஒன்றை அறைந்து சுக்கானாய்ப் பொருத்துகிறோம். மட்டைக் கோதின் தலையில் சுக்கானுக்கு எதிர்ப்பக்கமாக ஈர்க்கிற் செருகப்பட்ட கண்டல் இலையை நிறுதிட்டமாகப் பொருத்திப் பாய் விரிக்கிறோம். பின்னர் எங்கள் படகுகளைக் கொல்லன் ஆற்றில் ஓடவிடுகிறோம். எங்கள் படகுகள் கொல்லன் ஆற்றில் ஓடிக் கொண்டிருக்கையிற் கவிழ்ந்து விட்டன! இருவரும் ஆற்றில் இறங்கி அவைகளை எடுத்து வருகிறோம். செல்லன் "ஞானப்பாரம் காணததாற் தான் அவை கவிழ்ந்தன்" என்று சொல்லிச் சிறுச்சிறு கற்களைப் பொறுக்கிப்படகிலே சுக்கானுக்கு மேலாக வைக்கிறான். நானும் அவன் செய்தது போலவே செய்கிறேன் மீண்டும் இருவரும் படகுகளை ஆற்றில் விடுகிறோம். எங்கள் படகுகள் எந்த விக்கினமுமின்றி ஆற்றிற் பிரயாணிக்கின்றன.

இன்னும் ஒரு நாள் செல்லன், 'வாடா ஒருத்தரும் வராத ஒரு இடத்திற்குப் போவோம்' என்று கூப்பிடுகிறான். நான் அவன் பின்னாற் செல்கிறேன். பாடசாலையின் வடக்குப் பக்கமாகக் கிழக்கு மேற்காக நீண்டு செல்லும் மட்டக்களப்பு வீதியைக் கடந்து ஒழுங்கையிலிறங்கி இருவரும் நடக்கிறோம். ஒழுங்கையிலிருந்து கவர்பிரிந்து செல்லும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றையடிப்பாதையில் சுண்டான் மரங்களும் பன்னீர்ப்புதர்களும் மண்டிக்கிடந்த காட்டினூடே சென்று ஒருபாலை மரத்தடியில் அமர்ந்து கொள்கிறோம். செல்லன் மெதுவாகத் தன்சாரத்துக்குள், மறைத்து வைத்திருந்த சிறிய புத்தகத்தை எடுக்கிறான். 'அதிவீரராம பாண்டியன் எழுதிய கொக்கோகம் அப்டோன் படங்களுடன் கூடியது' என அதன் அட்டையில் எழுதப்பட்டிருந்தது. செல்லன் புத்தகத்தைப் பிரிக்கிறான். உத்தம ஜாதி, மத்திம ஜாதி, அதமஜாதிப் பெண்களைப் பற்றியெல்லாம் படிக்கிறோம். மனத்திலே ஒரு கிளர்ச்சி! எனது பாலியற்கல்வியின் ஆரம்பகுருநாதர் செல்லன்தான்!.

என்கண்களில் கண்ணீர் முட்டுகிறது. செல்லன் போனால் வராத இடத்திற்குப் போயே விட்டான் என்ற நிதர்சனமான உண்மை என்மனதில் உறைக்கிறது. மனமடிவோடு நான் விறாந்தையிலிருந்து வெளியே இறங்கி முற்றத்திற்கு வருகிறேன்.

முற்றத்தில் ஊரே திரண்டு நின்றது. என் தம்பிமாரும் அவர்களின் வயதொத்த அயலட்டைச் சிறுவர்களும் கூட நின்றார்கள்.

"பள்ளிக்குப் போறதில்லியாடா? நான் என் தம்பிமார்களைக் கேட்டேன்.

அவர்கள் மறுகினார்கள்.

வெளியிலே வந்த அம்மா சொன்னாள் "இன்றைக்கு ஒருத்தருமே பள்ளிக்குப் போகவேணாம்"

என்தம்பிமாரும் மற்றச்சிறுவர்களும் குதூகலித்துக் கொண்டு ஓடினார்கள். செல்லன் அவர்கள் எல்லோருக்கும் லீவு கொடுத்து விட்டான்!

நான் அசமந்து நிற்கிறேன். செல்லனின் சித்தப்பாவைச் சுற்றி ஒரு கூட்டம். அவர் சொன்னார், "நடுச்சாமத்தில மச்சாள் வந்து எழுப்பினா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய்ப்பார்த்தாச் செல்லன் தலையைப்பிடிச்சுக் கொண்டு இருக்கான். தலைசுத்துறாப்போல இருக்குது என்டான். எனக்கு ஒண்ணும் வெளங்கல்ல. கறுத்தப் பரியாரி மாரிலயும் எனக்கு நம்பிக்கையில்ல. அவர்களைத் தேடிக் கொண்டு அக்கரையால போகவேணும். நான் மார்க்கெட் ஒழுங்கையால ஓட்டஓட்டமாஓடி ஆஸ்பத்திரி டாக்டரைக் கூப்பிட்டன். அந்த நல்ல மனிசனும் ஓட்டஓட்டமா உடன வந்திற்றார். குழாய் வைச்சிப் பார்த்து இன்ஜெக்சனும் அடிச்சார்– ஆனால் செல்லன்ர தல விழுந்திற்று. அறிவு இல்ல. மறுபடியும் மறுபடியும் சோதித்துப்பார்த்து டக்ரர் உதட்டைப் பிதுக்கினார்.

பிறகு தலையைக் குனிந்து கொண்டு தன்பையையும் தூக்கிக் கொண்டு போய்விட்டார்.

"அவர் என்ன வியாதி எண்டு சொன்னார்? யாரோ கேட்க சித்தப்பா மீண்டும் சொன்னார். அவன்ர வியாதிக்கு என்னமோ நீளமான ஒரு லத்தீன் பேரைச் சொன்னார். மூளைக்கு இரத்தம்போற நரம்புக் குழாய் வெடிச்சிற்றுது என்று சொன்னார்".

"விசித்திரமான வியாதி! என்னவோ பிள்ளையிர காலம் முடிஞ்சுது. விதி அவ்வளவுதான். சாட்டில்லாமற் சாவில்ல" என்று பெருமூச்சுவிட்டார் கறுவல் குஞ்சப்பா, அதைச் சொன்னவர் "வாடா போய் சவப்பெட்டி செய்யப்பலகை வாங்கிற்று வருவம்".

அவரோடு மூன்று பேரும், நானும் போனோம். எங்களது வேதக்காரத் தெருவைக் கடந்து பெரிய பள்ளிவாசலுக்குப் போனோம். அங்கே ஆறுபலகைகளை வாங்கித் தோளில் வைத்துச் சுமந்து கொண்டு வந்தோம். ஒரு பலகையை நானும் சுமந்து வந்தேன்.

சுமந்து கொண்டு வந்த பலகைகளைத் தொப்பென்று முற்றத்திலே போட்டபின்னர், என்னிடம் ஐம்பது ரூபாத்தாளை நீட்டிக் குஞ்சப்பா சொன்னார், "டேவிட்சில்வாட பெரிய கடைக்குப்போய் கால்றாத்தல் அரை இஞ்சி ஆணி, ஒரு இஞ்சி ஆணி கால்றாத்தல், மூணாம் நம்பர் உப்பு த்தாள் ஒன்று, ஒரு வாணிஷ்போத்தல் வாங்கிக் கொண்டு கெதியா வா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் காசைவாங்கிக் கொண்டு கடைக்குப் போனேன். அதுவரை நான் என்கையில் ஐம்பது ரூபா வைத்துப் புழங்கவில்லை. என்னைச் செல்லன் பெரிய மனிதனாக்கி விட்டான்!.

கடையிலே ஆணிகளும், சான்ட்பேப்பரும் வாணிஷ் போத்தலும் வாங்கிக் கொண்டு வந்தபோது ஊர்த்தச்சர்கள் எல்லோரும் முற்றத்துத் தென்னைமர நிழலில ஒதுங்கிப் பிரேதப் பெட்டி செய்து கொண்டிருந்தார்கள்.

முற்றத்திற் பார்த்த இடமெல்லாம் பனை ஓலை வெற்றிலைப் பெட்டிகள் கிடந்தன. முற்றத்தில் நின்ற எல்லோருமே வெற்றிலையை அரைத்துக் கொண்டிருந்தார்கள். நானும் செல்லனைப் பறிகொடுத்த ஆதங்கத்திற் தாம் பூலந்தரித்துக் கொண்டேன்!.

என் வாய் நன்றாகச்சிவந்து விட்டது. ஆனாற் புதுப்பழக்கம். பச்சைப்பாக்கு தலையைக் கிறுக்க வைத்தது!.

பெரிய குடத்திற் சுமந்து கொண்டு வரப்பட்டுத் தென்னை மரத்தடியில் வைக்கப்பட்டிருந்த தென்னங்கள்ளைப் பெட்டி செய்பவர்கள் வார்த்துக் குடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்களுக்குக் கள்ளின்போதை
எனக்குப் பச்சைப்பாக்கின் கனிமயக்கம்!

குஞ்சப்பா என்னை நெருங்கித் தண்டிகையைச் சோடிக்க வாணிஷ் கடதாசிகளும் பட்டுக்கடுதாசிகளும் வாங்கவேணும்.
நீயேபோய் அவைகளையும் வாங்கி வா. மிச்சக்காசிருக்கல்லவா? எவ்வளவு இருக்கு?

"இன்னம் இருபது ரூபாவும் சில்லறையும் இருக்கு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சொல்லிக் குஞ்சப்பா பத்து ரூபாய் தந்தார் வாங்க வேண்டிய சாமான்களின் பட்டியலை என்னிடம் தந்தார். அந்தக்காசையும் வாங்கிக் கொண்டு நான் கடைக்குப் புறப்பட்டுக் கொண்டிக்கையில் என்தம்பியும் செல்லனின் தம்பியும் என்னை நெருங்கி "காசுதாங்கண்ணா ஐஞ்சு சதம்தாங்க" என்று கேட்டார்கள். இருவருமே பாலர் வகுப்புப் படிக்கும் சிறுவர்கள். என்னிடம் காசு புழங்குவதைக் கண்டு விட்டார்கள்!.

நான் என் பைக்குட்கைவிட்டு பெரிய மனிதத்தோரணையோடு ஆளுக்குப் பத்துப் பத்துப் சதம் கொடுத்தேன். வாங்கிக் கொண்ட இருவரும் தம்மொத்த சிறுவர்களையும் சேர்த்துக்கொண்டு குதூகலத் துடன் ஓடினார்கள். செல்லனின் சாவு அவர்களிடையே எந்தத்தாக்கத்தை யும் ஏற்படுத்தவில்லை.

கடைக்குப் போய்க் கொண்டிருக்கையில் குஞ்சப்பா சொன்னார் "பசைகிண்டவேணும் மறந்து போகாமல் அரைறாத்தல் கோதுமை மாவும் வாங்கிற்றுவா"

நான் கடைக்குச் சென்று பட்டியலிலுள்ள கடதாசிகளையும் கோதுமை மாவையும் வாங்கிவருகையில் மதியமாகி விட்டது.

தென்னைமர நிழலில் பிரேதப் பெட்டி செய்யும் வேலை மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. வேலியோரப் பூவரசுகள் விழுத்தும் நிழலில் வாலிபர்கள் தண்டிகை கட்டிக்கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவன் என்னிடம் சொன்னான். "கட்டுறதிற்கு இரண்ட வுண்ஸ் சணல் வேணும்"

நான் பக்கத்திலிருந்த கடைக்குச் சென்று சணலும் வாங்கிவந்து கொடுத்து விட்டுக் கோதுமைமாவை எடுத்தக் கொண்டு குசினிப் பக்கம் சென்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுப்படி நிராதரவாகக் கிடந்தது. அடுப்பு மூட்டிய தடமே இல்லை. பிரேதம் எடுக்கும்வரை இந்தவீட்டு அடுப்பே எரியாது. ஏன்? நெருங்கிய உறவினர் வீடுகளிலும் அயல் வீடுகளிலும் அடுப்பே எரியாது.

நான் எதிரேயிருந்த தேத்தண்ணீர்க்கடையில் ஒரு மண் சட்டியிற் கொதிநீர் பிடித்து, அதிற்கோதுமை மாவைக் கொட்டிப்பசை கிண்டினேன். அந்தக்களைப்பில் மீண்டும் வெற்றிலை போட்டுக் கொண்டேன்.

மதியந்திரும்பி மூன்று மணியானபோது பிரேதப் பெட்டி வேலை முடிந்து விட்டது. பெட்டிவேலையை முடித்தவர்கள் புளித்த தென்னங்கள்ளின் கிறக்கத்தில் வாழ்வின் நிலையாமை பற்றி 'ஞானம்' பேசினார்கள். அவர்களில் ஒருத்தர் விட்டேத்தியாகச் சொன்னார், "செத்தவன் வாயில மண்ணு, இருக்கிறவன் வாயில சோறு, சும்மா விட்டிற்று வேலையைப் பாருங்கடா".

தண்டிகை கட்டிக்கொண்டிருந்த வாலிபர்கள் தங்களின் கைவண் ணத்தை எல்லாம் வெளிக்காட்ட ஆசைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். தண்டிகைக் கால்களிலும், பிரேதப் பெட்டி கிடத்தப்படவிருந்த குறுந்தடி களிலும் வெள்ளைச் சீலையைச்சுற்றி, அதன் மேற்பிரிபிரியாக வெள்ளை தெரியக்கூடியதாக நீலக்கடுதாசிகளை நீளமாக வெட்டிச்சுற்றினார்கள். தண்டிகைக்கு மேலே பெட்டிக்கும் மேலே இருந்த வெள்ளைப்படுதாவில் நீலக்கடதாசியில் சிலுவை ஒன்றைப் பல்வேறு சித்தரிப்புகளுடன் வெட்டி ஒட்டியிருந்தார்கள். சிலுவையின் இருமருங்கிலும் பட்டுக்கடதாசியாலான வானதூதர் இருவர் கைகூப்பித்தொழுது கொண்டிருந்தார்கள்.

வெளியே இந்தக் கிருத்தியங்கள் நடந்து கொண்டிருக்கையில் வீட்டினுள்ளே விட்டுவிட்டு அழுகையும் ஒப்பாரியும் விசும்பலும் கேட்டுக் கொண்டிருந்தது. புதிதாக யாரும் இழவு விசாரிக்க வந்த போது அழுகை வெடித்துப் புரண்டு வரும். சில நிமிடங்களுக்கு ஒப்பாரி! அதன்பின்னர் வெற்றிலையைச் சுவைத்துக்கொண்டே சளசளவென்று பேச்சு! அந்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சுகளுக்குமேலால் என் அம்மாவினதும், செல்லனின் தாயாரதும் விசும்பல் மட்டுமே கேட்டுக் கொண்டிருக்கும்!.

நான்கு மணியானபோது செல்லனைக் குளிப்பாட்டி உடைய ணிவித்து முற்றத்துத் தற்காலிகப் பந்தரின் கீழ் கொண்டுவந்து வளர்த்திரு ருந்தார்கள். அவனைக் குளிப்பாட்ட வீட்டின் பின்புறமாக மறைவிற்குக் கொண்டு போனபோது நானும் உடன் சென்றேன். ஆனாற் குஞ்சப்பா "நீ வரவேணாம் போ" என்று என்னை விரட்டிவிட்டார். மனமடிவோடு திரும்பி வந்தநான் செல்லனைப் பந்தலுக்குட் கொண்டு வந்து வைத்ததும் அருகிற் சென்று பார்த்தேன்.

சேலம் பட்டு வேஷ்டி சால்வைக்குட்கை நீளமான சில்க் ஷேட்டோடு செல்லன் ஆணழகனாகத்தான் இருந்தான். அவன் முகத்திலே அந்தப் புன்னகை இன்னமும் சாகாமற்தானிருந்தது. அவனைச் சுற்றி வளைத்திருந்த ஆண்களும் பெண்களுமான உறவினர்கள் செபமாலை செபித்துக் கொண்டிருந்தார்கள். நான் செபத்தை மறந்து அவனையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

தெருவாசலைத்தள்ளிக் கொண்டு சிலுவையையும் மெழுகுதிரித் தண்டுகளையும் கொண்டுவரும் மூன்று சிறுவர்க்குப் பின்னால் குரு வந்து கொண்டிருந்தார். அவர் வருகையைக் கண்டதும் செபமாலை சொல்லிக்கொண்டிருந்த பெண்கள் மீண்டும் பெரிய சத்தமாய் அழத்தொடங்கினார்கள்.

அவர்களின் அழுகையூடே குஞ்சப்பாவும் இன்னும் சிலரும் செல்லனுக்கு அணிவிக்கப்பட்டிருந்த தங்கநகைகளைக் கழற்றிக் கொடுக்கவேண்டியவர்களிடம் கொடுத்துவிட்டுச் செல்லனைத் தூக்கிப்பிரேதப் பெட்டியுள் வைத்தார்கள். சுவாமியார் அவன் கட்டையை ஆசீர்வதித்த பின்னர் பிரேதப்பெட்டியை மூடி அதன் மேல் ஆணி அடித்தார்கள்.

அழுகையும் ஓலமும் வானைப் பிளந்தது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரேதப் பெட்டியைக்கட்டியபும் பெண்களை விலக்கிப் பெட்டியைத் தண்டிகையிற் கொண்டு வைத்தபின் சிலுவையையும் கத்திசார் என்ற மெழுகுதிரித்தண்டுகளையும் தூக்கிமுன்னே சென்ற சிறுவர்களின் பின்னால் சுவாமியர் சென்றார். அவரைத் தொடர்ந்து பிரேதப் பெட்டியைத் தூக்கியவர் செல்ல ஊர்மக்கள் பின் தொடர்ந்தார்கள்.

தலைவிரி கோலமாகத் தொடர்ந்து அழுகையோடு வந்த பெண்கள் தெருப்படலையிற் தரித்துவிடப் பிரேத ஊர்வலம் கோயிலை நோக்கிச் சென்றது. நான் பிரேதப் பெட்டியைக்குழியில் இறக்க உதவியான கயிற்றைக் கையில் எடுத்துக் கொண்டு ஊர்வலத்தோடு நடந்தேன்.

கோயிலை அடைந்ததும் அங்கே பிரேதப் பெட்டியைத் திறந்து வைத்துச் சுவாமியார் பிரார்த்திக்க, நாங்கள் எல்லோருமே மீசறேறேறே மேஇ டேயுஸ்... என்ற லத்தீன் பாடலை மிக உருக்கமாகப் பாடினோம்.

கோயிற் சடங்கு முடிந்ததும் மீண்டும் பிரேத ஊர்வலம் சேமக்காலையே நோக்கித் தொடர்ந்தது. சுவாமியார் இலத்தீனிற் சொல்ல, நாங்கள் அதன் பின்னால் 'மீசறேறே மேஇடேயுஸ்' என்று பாடினோம்.

பிச்சைக்காரனின் முதுகெலும்பைப் போல மேடும் பள்ளமுமாகக் கிடந்த கிரவல்றோட்டில் பிரேத ஊர்வலம் ஆடி அசைந்து சென்று கொண்டிருந்தது. ஒரு பெர்லாங்குூரம் சென்றதன் பின்னர் சுவாமியார் தன் செபத்தை நிறுத்திக்கொள்ள, ஊரவர் ஒருவர்

சாதாரணமான லோக சாவில் ஏனோக் எலியாசை
சாகாமல் நீர் மீட்டது போல'

என்று பாட

உந்தமது தாசனான சொந்த இவன் ஆத்துமத்தை
உத்தமமாய் மீட்டுரட்சிப்பீரே சுவாமி

என்று ஊரவர் எல்லோருமே பாடினோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரேத ஊர்வலம் சேமக்காலையை அடைந்தபோது நன்றாகப் பொழுது சாய்ந்துவிட்டது.

பிரேதப்பெட்டியைத் தண்டிகையிலிருந்து இறக்கி குழியின் அருகே குவிந்த மண்ணைச் சமப்படுத்திய திட்டியிலே வைத்தார்கள்.

சுவாமியார் தன் கைப்புத்தகத்தைத் திறந்து சில லத்தீன் செபங்களை வாசித்தபின் 'பாஸ்தர் நொஸ்ரே' என்று சொல்ல, நாங்கள் எல்லோரும் கைகளை மேல்நோக்கி விரித்து பரமண்டலங்களிலே இருக்கிற எங்கள் பிதாவே என்ற செபத்தை மிக உருக்கமாகச் செபித்தோம். சிலர் மிகுந்த போதையிலிருந்தாலும் வலுத்த போதத்தோடு செபித்தார்கள்!.

செபம் முடிந்ததும் நான் கொண்டு வந்த கயிற்றைப் பெட்டியினடியிலே திணித்து, நான்கு முனைகளையும் பிடித்துக்கொண்டு சாவதானமாகக் குழியிற் பெட்டியை இறக்கினார்கள். "அருகே நிற்கவேண்டாம், குழி இடியும்" என்று சிலர் எச்சரித்துக் கத்தினார்கள்1,

பிரேதப் பெட்டி குழியின் யதாஸ்தானத்தில் அமர்ந்ததும், சுவாமியார் மீண்டும் செபித்து மண்வெட்டியில் இருந்த மண்ணைக்குழியில் மூன்று தடவையிற், போட்டார். அவரைத் தொடர்ந்து எல்லோரும் 'மூன்றுபிடி' மண்போட்டோம்.

சுவாமியாரும் பரிசாரகப் பையன்களும் போய்விட்டார்கள்! நாங்கள் மண்வெட்டியாலும் கைகளாலும் மண்ணைத் தள்ளிக் குழியை மூடினோம். குழி அரைவாசி நிறைந்ததும், கபிரியேல் பீற்றர் பாய்வா எனச், செல்லனது பெயர் எழுதப்பட்ட மரச் சிலுவையையை நட்டுக் குழியை மூடி மண்ணை மேடாக்கிக் குவித்தோம். மரச்சிலுவையடியில் மெழுகுதிரிகளையும் கொழுத்தி வைத்தோம். கொண்டு வந்திருந்த குரோட்டன்தடிகளையும் நட்டோம். எல்லாம் முடிந்து சேமக்காலையை விட்டு வெளியேறுகையில் இருட்டிவிட்டது.

வெளியேறி வருகையிற் சிலர் மட்டக்களப்பு வீதி வழியே கள்ளுக்கடையை நோக்கிச் சென்றார்கள். மீதியானவர்களோடு கோயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீதி வழியாக வந்து கொண்டிருக்கையில் ஒருவர் சொன்னார், "நெடுக நெடுக இந்தக் கள்ளைத்தானே குடிக்கிறோம். பாதிரி கோயிலடியில வண்ணாத்தி சாராயம் விக்கிறாள், அசல்ச்சரக்கு. இண்டைக்கு இதில ஒரு டோஸ் அடிப்பம்".

சிலர் அவரோடு சாராயத்திற்குப் போனார்கள். மீந்திருந்தவர்கள் வண்ணாபாலத்தடியில் கொல்லனாற்றில் முழுக்குப் போட்டுவிட்டுச் சாவீட்டையடைந்தோம். இருட்டியேவிட்டது!

வீட்டுமுற்றத்தில் தற்காலிகமாகப் போடப்பட்டிருந்த பந்தலில் ஆண்களும் பெண்களுமாக உறவினர்கள்! பெண்கள் தலை முழுகிவிட்டு தங்கள் நீண்ட கூந்தலைப்பின்புறமாகப் பரத்திஅலையவிட்டு வளைய வந்தார்கள். இளம் பெண்கள்கூட 'என்னைப்பார், என் அழகைப்பார்' என்று சொல்லிய 'மதனகாமராசன் கதைப்பெண்களைப்போல வளைய வந்தார்கள். செல்லன் செத்துப்போனதான சோகத்தின் எந்தத்தடத்தையும் நான் அவர்கள் முகங்களிற் காணவில்லை!.

கனகம் முருங்கையிலை போட்டுக் காச்சிய 'உரிமைக்கஞ்சி'யைக் கோப்பையோடு என்முன் நீட்டினாள். நான் அதை வாங்கிக்கொள்கையில் வேண்டுமென்றே அவள் கைகளையும் தீண்டுகிறேன். அவள் புன்முறு வலோடு அதனை ஏற்றுக்கொள்கிறாள். அந்தக்கிழவர் சொன்ன 'செத்தவன் வாயில்மண், இருக்கிறவன் வாயிற்சோறு' என்ற வார்த்தைகள் என் மனதிற் பளிச்சிடுகின்றன. இன்றுவரை நெருக்கமாகப் பழகிக் கொள்ளச் சந்தர்ப்பம் கிடைக்காத கனகத்தோடு நான் ஒட்டிக்கொள்கிறேன்! எவருமே கண்டு கொள்ளவில்லை.

எல்லாருக்குமே சாப்பாடு பரிமாறப்படுகிறது. கனகம் எனக்கும் சோற்றுப் பீங்கானை நீட்டுகிறாள்.

நான் சாப்பிடுகிறேன்.

சாப்பாடானதும் எல்லாரும் பந்தலுக்குக் கீழும், விறாந்தையிலும் வீட்டுக்குள்ளும் படுக்கிறார்கள். பந்தலின் கீழே சில கிழடுகள் பெற்றோமக்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கொளியில் 'கித்தேரியம்மாள் அம்மானை' பாடுகிறார்கள். இன்னமும் பொச்சந் தீராத கிழடுகள் கள்ளுக்கடைப்பக்கம் போகிறார்கள்.

என் சாப்பாட்டுப்பீங்கானைக் கனகம் வாங்கிக் கொள்கிறாள். வாங்கிக் கொண்டவள் மெதுவாகக் கேட்கிறாள் "எங்கே படுக்கப் போகிறீர்கள்?'

"நீ எங்கே? என நான் கேட்கிறேன்".

"இப்போதே படுக்கவில்லை. மனை வைத்துத்தாயம் போடப்போகிறேன்".

"நானும் வரவா?

அவள் ஆம் என்று சொல்லவில்லை. இல்லை என்று சொல்லவும் இல்லை, நிற்கிறாள்– செல்லனின் கொக்கோகத்திற் படித்த பத்மினிப் பெண்ணாய்...........

எனக்கு நினைவிற் தட்டுகிறது "நாளைக்கு அந்த ஐந்து பாடல்களையும் ஓப்பியாவிட்டால் தமிழ் ஆசிரியர் புரட்டி எடுத்து விடுவார்!.

நான் வீட்டுக்குச் சென்று என்பாடப்புத்தகத்தை எடுத்துக் கொண்டு வருகிறேன்.

பந்தற்கப்பிற் சார்ந்து அமருகிறேன். பந்தலுக்குள்ளும், வீட்டினுள்ளும் சிரிப்பும் கும்மாளமும், என் கண்கள் கனகத்தைத் தேடுகின்றன.

'சோணாலு இருத்தாயம், ஐஞ்சு மூன்று' என்று சொல்லிக் கொண்டு கனகம் தாயமனையிற் தன் காய்களை நகர்த்துகிறாள்! நகர்த்திக் கொண்டே என்னைப் பார்த்துச் சிரிக்கிறாள்.

நான் புத்தகத்தை விரித்து நாளைக்கு ஒப்புவிக்க வேண்டிய பாடலை மனத்துட் படிக்கிறேன்.

ஊரைக்கூட்டி ஒலிக்க அழுதிட்டுப்
பேரை நீக்கிப் பிணம் என்று பேரிட்டுச்
சூரையங்காட்டிலே கொண்டுபோய்ச் சுட்டபின்
நீரில்மூழ்கி நினைப் பொழிந்தார்களே.

**வீரகேசரி 30–08–64**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்

என்னடா தம்பி, சுரிக்குள்ள மாட்டிக்கொண்டியா? ஓம், சைக்கிள் முழுக்க நல்லாச் சேறு புடிச்சிற்று. சில்லுக்கம்பிக்குள்ள, மட்காட்டில எல்லா இடத்திலயுமே சேறு நல்லாஒட்டிக் கொண்டிருக்கு, அதுதான் சைக்கிள் ஸ்ராண்டில வைச்சிற்று கம்புக்குச்சியால சேற்றைத் தட்டுறியா? மெதுவாத்தம்பி மெதுவாத்தட்டு. உன்ர வெள்ளை வெளேர் என்றிருக்கிற வேட்டியிலயும் சட்டையிலும் சேறுபட்டா அசிங்கமாயிருக்கும். அதன் பிறகு நீ பள்ளிக்குப் போகேலா.

ஆமாம் உன்னைப் பார்த்தா, உன்ர உடுப்பைப் பார்த்தா வாத்தியார் போலத்தான் கிடக்கு. எங்க ஊருக்குப் புதுசா வந்திருக்கியோ? அதுதான் இந்த றோட்டில சுரி இருக்கும் எண்டு தெரியாம ராசா ஏறின குதிரை மாதிரிச் சைக்கிள விட்டுக் கொண்டு வந்திருக்கா. கொட்டியாரத்திலிருந்து தார் றோட்டில ஓடிவந்த மாதிரிச் சந்தியில இருந்து மல்லிகைத்தீவுக்குப் போயிரலாம் என்று நெனைச்சியா. சரிதான். மெயின் றோட் சந்தியில இரு ந்து மல்லிகைத்தீவு போறவரையுமுள்ள ஒண்ணரைக்கட்டைக்கும் இன் னமும் நல்ல றோட்டுப்போடல்ல. கோட, கொண்டல் காலத்தில இந்த களித்தரை நல்லாக் கெட்டிச்சுப்போயிரும். அந்தக்காலத்தில கல்றோட்டில ஓடுறமாதிரிச் சைக்கிள் ஓடலாம். ஆனா மழை பெஞ்சா இந்தத் தரை சக்கரை மாதிரிக் கசியத் தொடங்கிரும். ஈரத்தரையில எருமை மாடெல்லாம் போகும். மாட்டுவண்டி போகும். அதுகள் போறதால றோட்டுச்சேறு சந் தணம் மாதிரிக் குழைஞ்சிபோயிரும். அதுவும் எங்க ஊர் மண் நல்ல பசையுள்ள மண், எங்க ஊர் அரிசியும் தான்தம்பி. அதுவும் பசையுள்ள அரிசிதான். சாப்பிட்டவனைப்பிரிய விடாது எங்கள் ஊர் அரிசி. அது மாதிரித்தான் சந்தனக்குழம்பாட்டம் இருக்கிற எங்கள் ஊர்ச்சுரியும் நல்லா ஒட்டிக் கொள்ளும். நீதான் பாரன், உன்ர சைக்கிள் றோதைக்க, சைக்கிள் கம்பிக்க, மட்காட்டில, றோதை அச்சில, புடிச்சிருக்க களி எப்படி ஒட்டிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருக்கு? சைக்கிளை உருட்டக்கூட ஏலா. ஏலாமத்தான் அப்பிக் கொண்டிருக்கிற சுரியை கழட்டி எடுக்கக்குந்திற்றா. மெதுவாத்தட்டுதம்பி. உன்ர உடுப்பில எல்லாம் சுரிபட்டிடும் பாவம்! வெள்ளை வேட்டி எல்லாம் பழுதாப்போயிரும்.

என்னைப் பைத்தியக்காரி என்று நெனைக்கிறியா? எனக்கென்ன? நீ எப்படியெண்டான நெனைச்சிக் கொள். எனக்கொண்ணும் கொறைஞ்சி போகாது. ஆனா வாத்தியாரான உனக்குச் சொல்றன் நான் ஒரு வாத்தியார்ர அம்மா, ஓம் மகனே என்ர மகளும் ஒருவாத்தியார்!.

உன்ரசைக்கிளில ஒட்டியிருக்கிற சேற்றையெல்லாம் கம்புக்குச் சியால தட்டிப்பிறகு சைக்கிள்க் கம்பிய, சைக்கிள் சட்டத்தை எல்லாம் சுரண்டி, வாய்க்காலில கொண்டு போய்க்கழுவியெடுக்க இன்னமும் எவ்வ ளவு நேரஞ்செல்லும்! உன்ர நல்ல காலம் மழையில்ல வானம் இருக்கிற நெலையைப் பார்த்தா இன்றைக்கு மழையும் வராது. அப்படிவந்தாலும் தைத்தூத்தல் தலைநனையாது என்று சொல்வாங்க. மழைக்குப் பயப்ப டாமல் சேத்தைத்தட்டி எடு. நீ சேத்தைத் தட்டி எடுக்குமட்டும் நான் உனக்கு ஒருகதை சொல்றன். எங்க ஊர்க்கதை தான் தம்பி. என்ர கதை யுந்தான் சொல்றன் கேக்கிறியா? நீ பேசவேமாட்டா, உன்ர சைக்கிளில் ஒட்டிக் கொண்டிருக்கிற சேத்தைக் கிளீன் பண்றவரைக்கும் நீ பேசவே மாட்டா, பேசாட்டி என்ன நான் சொல்ற கதையைக் கேள்.

எங்கட மல்லிகைத்தீவு ஊர வளைச்சு ஒரே வயல் வெட்ட, பெரியவெளி, வடிச்சல்சேனை, சக்கரைவெட்ட, சிறுக்குளம் என்று எவ்வளவு வயல்வெட்ட? எல்லாம் ரெண்டுபோகம் செய்ற நீர்ப்பாய்ச்சல்பூமி. பெருவெளிக் குளத்தில் நெறைஞ்சி, மகாவலிகங்கைத் தண்ணி வயலுக்கெல்லாம் பாயும். எங்கஊர் ஒண்ணும் பெரிய ஊர் இல்ல. வயல் வெட்டைக்கு நடுவில இருக்கிற திட்டிதான் எங்க ஊர். அந்தத் திட்டியில எல்லா வளவுக்குள்ளயும் தென்னமரம் நிக்கி, பென்னம் பெரிய இலுப்பை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரம் ஒண்ணும் ஊருக்க நடுவில் றோட்டோரத்தில் இருக்கு. அந்த இலுப்பமரத்தடியில தான் பள்ளிக்கூடமும் இருக்கு. அந்தப் பள்ளிக்குத்தானே நீ வாத்தியாராப்போறே, ஆனால் முதல் நாளிலேயே இப்படிச் சேத்தில புதைஞ்சிற்றா, பாவம்! இன்னமும் முன் றோதையில் இருக்கிற கழியையே கழற்றிமுடியல்ல. எங்க ஊர் மண் பசையுள்ள மண் என்று சொன்னனே. தொட்டா ஒட்டிக்கொள்ளும். சைக்கிள் றோதையில ஒட்டியிருக்கிற கழியைக் கம்புக்குச்சியால சுரண்டி எடுத்தாக் கம்பில ஒட்டியிருக்கிற கழியைத்தட்ட எவ்வளவு கஸ்டமாயிருக்கு? என்ன செய்றது? உன்ர கஸ்டகாலட சுரண்டு.

எங்க ஊர் வயல் வெட்டைக்கு நடுவில் இருக்குதெண்டல்லவா சொன்னன்? நாய்க்கு நடுச்சமுத்திரத்திலயும் நக்குத் தண்ணிதான் எண்டு சொல்வாங்க. வளைச்சு வளைச்சு வயல் வெளியா இருந்தாலும் எங்க ஊரில எவனுக்கும், சொந்த வயற்காணி இல்ல. இந்த வயல்களுக்கெல்லாம் சொந்தகாரர்கள் திருக்கிணாமலையிலயும், கிண்ணியாவிலயும், மூதூரில யுந்தான் இருக்காங்க. அவங்கட வயல ஆயத்துக்கு எடுத்துத்தான் எங்க சனம் செய்யும். வயற்காணி எங்கட்ட இல்லாட்டியும் சோத்துப் பஞ்சம் இல்ல. ஆனா வெள்ளாம வெட்டுக்காலத்தில எங்க ஊருக்கு வந்தியெண்டாத் தண்ணிகுடிச்சிக்கமாட்டா. ஏனென்டா எல்லாக் கிணத் தடியிலும் மணச்சவுக்காரத்தை மேலில தேய்ச்சித் தேய்ச்சிக் குளிக்கிறதால கிணத்து தண்ணியெல்லாம் சவுக்காரமணமாத்தான் இருக்கும். அப்படியாப்பட்ட பவிசு எங்க ஊருக்கு.

எவனிட்டயும் வயல்காணி சொந்தமாக இல்லையெண்டல்லவா சொன்னன். என்ர புருசனும் எகுத்தார் ஹாஜியார்ர வயலில பத்து ஏக்கர ஆயத்துக் கெடுத்துத்தான் செய்தார். அந்தக ஹாஜியாருக்கு திருக்கிணாமல டிஸ்கிறிக் முத்திலாக்காணி கணக்குப் பாக்கேலா. அதனால ஆயக்காசும் கறாராக வாங்கிறதில்ல. எங்க காலம் நல்லாத்தான் போச்சு. மூத்த மகளத்திருக்கிணாமல வேம்படிப்பாடசாலைக் கனுப்பித்தான் படிக்க வச்சார் என்ர புருஷன். ஆனாத் திடீரென்று அவர் செத்துப்போனார். வயலுக்குப் போய்த் தண்ணிகட்டிற்று வந்தவர் மம்பட்டிய ஊட்டுமூலையில சாத்திற்றுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திண்ணையில் குந்தினார். நெஞ்சுக்க நோவுதெண்டார். அவ்வளவுதான். வயல்வெட்டைக்குள்ள இருந்த நாரையும் கொக்கும் குருவியும் எங்க ஊர்த் தென்னைமரங்களில் இருட்டினப்பொறகு வந்து குந்தக்குள்ள அவர்ர சீவன் போச்சு! அவர் போனப்பிறகு நான்பட்ட பரயத்தைச் சொல்லேலா. அப்ப என்ர மூத்த மகள் எஸ்.எஸ்.சி பாஸ் பண்ணிட்டு வீட்டோட வந்து இருந்தா. அவளுக்குப்பிறகு ஒரு பொடியன்தான் அவனுக்குப்பத்து வயது இருக்கும். அந்தச் சின்னஞ்சிறுவனால வயல் வாய்க்காலப் பார்க்க ஏலுமா? என்ர மகளும் படிச்சிற்றாள். அதனால கையைக்கால ஆட்டமாட்டா. நான்தான் நெல்லைக்குத்தி மாவிடிச்சி எப்படியோ என்ர புள்ளைகளைக் காப்பாத்தினன்.

வெள்ளாம வெட்டுக்காலத்தில அப்பஞ்சுடுவன். வெட்டுக் காரங்களுக்கு வாடிக்கையா அப்பம் கொளுக்கட்டை என்று குடுப்பன். வெட்டுமுடியிற காலத்தில அப்பம், கொளுக்கட்டை குடுத்த கணக்கால எப்படியும் ஒரு அவணம் நெல்சம்பாதிச்சிடுவன். பெரும்பாடுதான் என்டாலும் சோத்துப்பஞ்சமில்லடா தம்பி, எங்கட ஊர் காவிரிபாயுற நாடுடா மகனே, மாவலிகங்கையைத்தான் நாங்க காவிரி எண்டு சொல்றம். இந்தக் காவிரிபாயுற நாட்டில சோத்துப்பஞ்சம் இருக்குமாடா தம்பி.

அவர் செத்து ரெண்டு வருசத்துக்குப் பொறகு என்ர மகளுக்கு றெயினிங் பள்ளிக்கு முடிவு வந்தது. நான் அசந்து போகல்ல. என்ர கையில் கெடந்த காப்பு ஜோடிய வித்திற்று மகளுக்குப் புத்தகம், சேலை, சூட்கேஸ் என்று எல்லாச் சாமானும் வாங்கிக் கொடுத்தன். மகள் மட்டக்களப்பு வஸ்ஸில ஏறிற்று றெயினிங் ஸ்கூலுக்குப் போனா. நான் பூரிச்சிப்போனன். ரெண்டுவருஷத்தில என்ர மகள் வாத்தியாரா வந்திடுவா அதுக்குப் பிறகு எனக்கென்னகுறை? காலுக்குமேல கால்போட்டுக்கொண்டு சாப்பிடுவன்.

றெயினிங் ஸ்கூலுக்குப்போய் மகள் எனக்குக் கடிதம் எழுதினா, அரசாங்கம் மாதம் இருபது ரூபா அவக்கு எலவன்ஸ் கொடுக்குமாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனா இங்க இருக்கிற செலவுகளுக்கு அந்தக்காசு காணாதாம். மேலதிகமாக மாதம் நாப்பது ரூபாயாவது வேணும் என்று எழுதினா.

நான் எங்க ஊர்த்தலம வாத்தியாரிட்டச் சொல்லி அவளுக்குப் பதில் எழுதினன். என்ரபதிலில 'மாதம் நாப்பது ரூபாக்காசு எனக்குப் பெரிய பொருட்டில்ல மகள், என்ர சதுரத்தச் சாறாப்புழிஞ்சென்றாலும் நான் உனக்குப் பணம் அனுப்புவன். நீ கவலைப்படாமற் கவனமாப்படிபுள்ள' என்று எழுதச் சொன்னன்.

கூலிக்குக் குத்தி, கோழிவளர்த்து, அப்பஞ்சுட்டு வித்து எப்படி யெப்படியெல்லாமோ சம்பாதித்து மகளுக்குக் காசு அனுப்பினன். மகளும் கவனமாகத்தான் படித்தாள். ரெண்டு வருஷம் முடியறதுக்கு இன்னமும் ரெண்டுமாசந்தான் இருக்கு, அப்ப மகள் எனக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதினா "இந்த மார்கழி மாதத்தில எனக்குக் கடைசிப்பரீட்சையிருக்கு. பரீட்சை முடிந்ததும் பாடசாலையில பிரியாவிடை வைபவம் இருக்கு, அந்த வைபவத்துக்கு உடுக்கிறதுக்கு என்னட்ட நல்ல சேலஇல்ல. சேல ஒண்ணு நல்லதா வாங்கவேணும் எனக்குக் காசு நூறு ரூபா எப்படியும் அனுப்புங்க அம்மா".

நான் தெகைச்சிப்போனன். கார்த்திகை மாசத்து அடைமழைக் காலம், என்ர கையில மடியில ஒரு காசும் இல்ல, ஊரில ஒரு தொழிலும் இல்ல, எல்லாரும் தைப்பொறந்த பொறகு வாற வெள்ளாம வெட்ட நம்பி கடன்பட்டுத்தின்ற பஞ்சகாலம். இந்தப் பஞ்ச காலத்தில எப்படி நான் நூறு ரூபாய் பெரட்றது, எதை நம்பிக்கடன் வாங்கிறது? யோசிச்சு யோசிச்சு அசந்து போன நான், வெள்ளாம வெட்டுக்காலத்த நம்பி அறாவட் டிற்குக் கடன்பட்டன். என்ர காதுத்தோட்டையும் விற்றன். எப்படியோ நூறுரூபா புரட்டிற்றன். இதுக்குள்ள கெதியாக்காச னுப்பச் சொல்லி மகளிட்ட இருந்து அடுத்த கடிதமும் வந்தது.

காசைப்புரட்டிய நான் காசைத்தபாலில அனுப்பாம நேரில கொண்டுபோய் மகளிட்டக்குடுப்பம் எண்டு எண்ணிக் கொண்டு பஸ்ஏறுறன். மல்லிகைத்தீவுச் சந்தியில இருந்து மட்டக்களப்புக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரெண்டரை ரூபா தான் வஸ்ஸுக்கு, இண்டைக்குப்போய் நாளைக்கு வாறதானே. பத்துரூபாக்காசு எனக்கு மாலோகமாக் காணும் என்றெண்ணிக் கொண்டு பஸ் ஏறினன்.

என்ன பின்றோதையில ஒட்டியிருந்த கழியையும் கழட்டிற்றியா? அச்சிலயும் மட்காட்டிலயும் ஒட்டிக் கொண்டிருக்கிறதையும் கழற்று, அதுக்குள்ள என்ர கதையும் முடிஞ்சிடும். பஸ்ஸில ஏறினனா? பத்து மணிக்கு பஸ் ஏறின நான் மூணு துறையையும் கடந்து பின்னேரம் ஐஞ்சு மணிபோலத்தான் புளியந்தீவுப்பாலத்தடியில ஸ்ராண்டில எறங்கினன். என்ர கையில சீலைப் பைக்குள்ள ஒரு சோத்துப்பார்சல், பஸ்ஏற முதல் வாய்க்காலில வெள்ளத்தில எதிரேறின பனையான் மீன் ஊருக்கு வந்துது. அதில வாங்கிச் சிலதைப் பொரிச்சுக் குழம்பும் ஆக்கிச் சோறு கட்டிப் போனன். புழுங்கரிசில கட்டுச்சோறு கட்டினாப் பழுதாப்போனாலும் போகும் எண்டு பச்சரிசி பொங்கிக் கட்டுச்சோறு கட்டினன். அந்தச் சோத்து முடிச்சோடதான் நான் கேட்டுக் கேட்டு றெயினிங் ஸ்கூல நோக்கிப் போறன். சிங்கள வாடியில ஆஸ்பத்திரிக்குக்கிட்ட இருக்குதாம் அந்தப் பெண்கள் பாடசாலை. நான் ரவுணுக்கால போறன், கடைசியாக் காவியடிச்ச அந்தச் கட்டிடத்தக் கண்டு பிடிச்சன்!

கட்டிடத்துக்குள்ள ஏறி விறாந்தையில இருந்த மணிய அடிச்சன். ஒருத்தி வந்து கேட்டா, நான் மகள்ர பேரச்சொல்லி, அவளப்பாக்க வந்திருக்கன் என்று சொன்னன். அந்தப் பெண் உள்ளே போனாள். நான் விறாந்தையில கிடந்த வாங்கில இருக்கன், கொஞ்ச நேரத்தால என்ர மகள் வந்தா அவ இன்னொருத்தியோட வந்தா. அவளோட படிக்கிற வளாயிருக்கும். ஆனா அவளைவிடவும் என்ரமகள் அழகி. கையால குத்தின பச்சரிசித் தவிட்டு நிறம், ஆனா உதடெல்லாம் எப்பவுமே அவளுக் குச் சிவந்திருக்கும். நீளமா ஒடிசலா இருப்பா. நடக்கக்குள்ள இடுப்பு முறிஞ்சு போயிருமோ என்று நினைக்கவேணும், ஆனா பெரு வெளிக்குளத் துக்குள்ள பொழுது படக்குள்ள கூம்பிநிக்கிற தாமரைப்பூவைப்போல அவள் தாவணிக்கு மேலால நெஞ்சு நிமிர்ந்திருக்கும். என்ர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையைப்பாத்தவன் சீதனம் இல்லாமலேயே அவளைக் கொண்டு போய்விடுவான் என நான் எண்ணுவன்.

அவள் என்னைக் கண்டதும் அவள்ர முகம் நல்லால்ல, ஊரில இருந்து அம்மா வந்திருக்காளே என்று அவசிரிக்கவும் இல்ல, முகத்தை உம்மெண்டுவச்சிக் கொண்டு வந்தா.

அவளைக்கண்டு நான்சிரிச்சன்.

"ஏன் நீவந்தனி? என்று எரிஞ்சு விழுந்தா அவ. இதுக்கு நான் என்னத்தைச் சொல்றது? என் சேலைத் தலைப்பு முடிச்ச அவிழ்த்து நூறுரூபாயையும் கொடுத்தன், நாலாமடிச்சு முடிஞ்சி வைச்சிருந்த பத்துப் பத்து ரூபாத் தாள்கள். அத வாங்கின உடன மகள் திரும்பிக் கொண்டு நடந்தா.

நான் அவ்விடத்திலேயெ தெகைப்பூண்ட மிரிச்சவள் போல நிக்கன். மகள் போகக்குள்ள தன்னோட வந்தவளிட்டச் சொல்றா "எங்கம்மா இந்த வேலைக்காரிட்டக் காசக் குடுத்து அனுப்பியிருக்கா"

எனக்குப் பூமிபிளந்து என்னைவிழுங்கினாப் போல இருக்கு. அதுக்குப் பிறகு நான் ஊருக்கு வரல்ல. நேற்றுத்தான் வந்தன். என்னை பைத்தியம் என்று ஊருக்க சொல்றாங்க மகனே! நீ சொல்லுடா எனக்குப் பைத்தியமாடா?

உன்சைக்கிளில ஒட்டியிருக்கிற கழியெல்லாம் கழட்டிற்றியா? அப்ப இனி நீபோப்போறா.

என்ரகதையும் முடிஞ்சிடா மகனே. ஏண்டா உனக்கும் ஒரு அம்மா இருப்பா நீயும் ஒரு வாத்தியார் என்னைப்போல உன்ர அம்மாவையும் நீ பைத்தியக்காரியாக்கிவிடாத போய் வாடாமகனே போ. நானும் போறன். என்ர சாதிசனம் ஈச்சிலம்பத்தையிலையும் இருக்கு. பஸ்வந்தோடன நானும் போகப்போறன் அங்க.

வரட்டாடா மகனே.

வீரகேசரி 22-10-61

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்டுப்பூ

கணக்காக?

ஆரம்பப் பாடசாலையின் ஐந்து வகுப்புக்களையும் வைத்துக் கொண்டு தன்னந்தனியனாக மாரடிக்கும் நான், கரும்பலகையிற் கணக்குகளை எழுதிமுடித்து அடுத்த வகுப்பிற் பாடத்தைத் தொடங்குகையில் அவள் அத்தனை கணக்குகளையும் செய்துவிடுவாள். எழுத்தா?

குண்டு குண்டாகத் தூக்கி நிறுத்தினாற் போல ஒவ்வோர் எழுத்துமே 'என்னைப்பார் என் அழகைப்பார்! என்று அழைப்பது போலப் பளிச்சென்று சுத்தமாய்............

ஐந்தாம் வகுப்புப் பாடப்புத்தகமான 'தமிழ்' அவளது அசுர வேகத்தைத் தாக்குப் பிடிப்பதாக இல்லை பாடசாலை தொடங்கித் தைமாதம் முடியுமுன்னரே அவள் அப்புத்தகத்தை வாசித்து முடித்து விட்டாள்.

என் இருபது வருட ஆசிரிய அனுபவத்தில் அத்தனை விவேகமுள்ள மாணவியை நான் சந்தித்ததே இல்லை. சரோஜா என்ற அந்த சின்னஞ்சிறுமி எதிர் காலத்தில் ஒரு சரோஜினி நாயுடுவைப் போலவோ அல்லது தனக்குத்தானே நிகரான சரோஜாவாகவோ திகழ்வாள் என நான் எண்ணிக் கொள்வேன். அவளுக்கு ஆரம்பவகுப்பு ஆசிரியனாக இருக்க எனக்குக் கிடைத்த வாய்ப்பை எண்ணிப் பெருமைப்பட்டுக் கொள்வேன்.

ஆயினும் அந்தக் குக்கிராமத்தில் எவருமே அதிலும் பெண்கள்– ஐந்தாம் வகுப்பிற்கு மேற் படிக்க எவருமே அனுமதிக்கமாட்டார்களே என்ற கவலையும் எனக்குண்டானது.

அவ்வூருக்குக் கிழக்கே மாவலித்தேவி சலசலத்து ஓடிக் கொண்டி ருந்தாள். தைப்பூசத்தின் பின்னாற் பெரும் போக அறுவடை தொடங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது முடிவடைந்ததும், ஊரவர்கள் எல்லாருமே கங்கைக்கரையில் மிளகாய்த் தோட்டம் செய்யப்போய் விடுவார்கள். தண்ணீர் இறைத்தல் பாத்திகட்டல், களைபிடுங்கல், காய்பறித்தல், அதைச் சந்தைக்குக் கொண்டு போய் விற்றல் என்று அடுத்த ஆறேழு மாதங்களுக்கு ஆண், பெண் குழந்தைகள் எல்லோருக்குமே வேலை இருக்கும். மேற்படிப்பைப் பற்றி அவர்கள் எவருமே எக்காலத்திலும் கவலைப்பட்டதில்லை. வேலையில்லாத் திண்டாட்டம் என்பது அவர்கள் கேள்விப்பட்டிராத ஒரு சங்கதி!

ஆனாலும் நான் நாளும் பொழுதும் சரோஜாவின் தந்தையிடம் பேசி, அவர் மனதைக் கரைத்து இந்த ஆண்டுப் பரீட்சை முடிந்தவுடன் பக்கத்தூரிலுள்ள மகாவித்தியாலயத்திற்கு அவளை அனுப்பி வைத்தேன். கிராமத்திலிருந்து செல்லும் இரண்டு ஆண்களோடு சரோஜா மகா வித்தியாலயம் சென்று கொண்டிருக்கிறாள். அவ்வித்தியாலய அதிபர் வாயிலிருந்து சரோஜாவின் விவேகத்தையும் கெட்டித் தனத்தையும் அறிந்து பெருமிதப்பட்டுக் கொண்டிருந்தேன்.

ஆயினும் என் மனதில் உள்ளூர ஒரு கவலை, இருந்து கொண்டேயிருந்தது, 'பெரியவளான' பின் அவளைப் பாடசாலைக்கு அனுப்புவார்களா?

இந்தக் கவலையில் நான் பட்டினத்துப் பெண்பாடசாலை விடுதி ஒன்றில் அவளுக்கு இடம் தேடிக் கொண்டிருந்தேன்.

"என்னத்திற்கையா பெண்ணைப் படிக்கவைப்பது? இன்னம் நாலு வருசம் போனால் குடியும் குடித்தனமுமாக வாழ வேண்டியவள். அதுவரையும் வீட்டிலிருந்து கொண்டு தொழிலுக்குச் செல்லும் அண்ணன் மாருக்கும் எனக்கும் தாய்க்குதவியாக வீட்டு வேலை பழகினால் அந்தப் படிப்பே அவளுக்குப் போதும்"

என்று வாதம் பண்ணிய அவள் தந்தையை மிக்க சிரமப்பட்டுப் பட்டினத்துப் பாடசாலைக்குச் சரோஜாவை அனுப்பி வைக்க ஒப்புதல் பெற்றேன். அடுத்த தைமாதம் அதற்குக் காத்துக் கொண்டு இப்போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்து மகாவித்தியாலயத்திற்குப் போகிறாள். வெள்ளைச் சட்டையும் நீலக் கழுத்துப் பட்டியும், காலிலே வெள்ளைச் சப்பாத்துமாக அவள் மகா வித்தியாலயம் போகும் போதெல்லாம், நான் ஒரு எதிர்காலச் சரோஜினி நாயுடுவைச் சிருட்டித்துக் கொண்டிருக்கிறேன் என மனதுட் புளகாங்கித மடைந்து கொண்டிருந்தேன்.

*** *** ***

ஒரு நாள் நடுநிசி. ஆடி மாதக் கச்சான் காற்று ஹோ என்ற சப்தத்துடன் உறுமிக் கொண்டிருந்தது. அந்தப் பேய்க்காற்றின் உறுமலுக்கும் மேலாக அவலக்குரல் ஒன்று எங்கிருந்தோ கேட்டது. கனவிலே கேட்பது போன்ற அந்த ஓலத்தைக் கேட்டுக் கண்விழித்த நான், சத்தம் வந்த திசையிற் காது கொடுத்து உன்னிப்பாகக் கேட்டேன். அந்த ஓலம் சரோஜாவின் வீட்டிலிருந்து வருவதாகத்தான் எனக்குப்பட்டது. நான் மின் சூளைக்கையில் எடுத்துக் கொண்டு அவலக்குரல் வந்த திக்கை நோக்கி நடந்தேன்.

அந்த அர்த்த இராத்திரியிலே, சரோஜாவின் வீட்டிலே கிராமம் முழுமையுமே கூடியிருந்தது. கிராமத்துப் பெண்கள் எல்லோரும் வீட்டுக்குள்ளே ஒப்பாரி சொல்லிப் புலம்பிக் கொண்டிருந்தார்கள். வெளியே கூடியிருந்த ஆண்கள் எல்லாரும், வாழ்க்கை நிலையாமை பற்றி வாய் ஓயாமற் பேசிக்கொண்டிருந்தார்கள். ஆஹா! இழவு வீட்டிலேதான் தத்துவங்கள் பிறக்க முடியும்!

நேற்றுவரை கல்லுப்போல இருந்த சரோஜாவின் தயாரர் ஆறுபிள்ளைகளைப் பெற்ற அப்பேரிளம் பெண் தன் ஏழாவது குழந்தைவயிற்றோடு செத்தே போய் விட்டாள். நேற்று மிளகாய்த் தோட்டத்துக்குச் சென்று காய் பறித்தாளாம். எந்த நோயுமே இல்லையாம். திடீரென ஒரு வலிப்பு. வலிப்பிலே அம்மா என்று அலறினாளாம். அவ்வளவுதான். பின்னர் 'பேரை நீக்கிப் பிணம் என்ற பேரிட்ட' திருமூலர் வாக்காகி விட்டது. விடிந்தாற் சூரையங்காட்டிற்குக் கொண்டு போய்ச் சுடமட்டும் ஞானத்திற்குக் குறைச்சலேயிராது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் இடிந்து போனேன். தாளலயத்தோடு ஒப்பாரி, வைக்கும் கிராமப் பெண்களின் குரலுக்கும் மேலாக 'அம்மா அம்மா' என்று தலையிலடித்துக் கதறும் பிள்ளைகளின் ஓலம் என்னைக் கொத்திக் குதறியது.

ஒருபாட்டம் அழுது ஓய்ந்து முடங்கிக் கிடந்த சரோஜாவின் தந்தை, என்னைக் கண்டதும் மீண்டும் தலையிலடித்துக் கொண்டு கதறினார். என்னருகே வந்த அவரது தங்கை

ஆக்கிப் படைப்பேனோ – நான்
அருகிருந்து ஊட்டுவனோ
தூக்கித் துடைப்பேனா – குஞ்சைவிட்டுத்
தொலை தூரம் போவேனா

என்று தன் சகோதரன் நிலையைச் சொல்லி ஒப்பாரிபாடிப் புலம்பினாள். நான் சிலையாக நின்றேன். என் கண்களிற் கண்ணீர் வழிந்தோடியது.

விடிந்தது!

பதிற் பாடசாலையை இன்னொரு நாளைக்கு வைத்துத் தொலைப்போம் என்றெண்ணிக் கொண்டு அன்று நான் பாடசாலை நடத்துவதில்லை எனத் தீர்மானித்துக் கொண்டேன்.

மனம் ஒடிந்து கடைசிக் குழந்தையைக் கையிற் பிடித்த வண்ணம் மூலையிலே முடங்கிக் கிடந்த சரோஜாவின் தந்தை, எழுந்து ஈமக்கிரியைகளுக்கான வேலைகளை நோட்டமிட்டார். பாடை கட்டுபவர்களுக்கும், வேறு சில்லறை வேலைகளைச் செய்பவர்களுக்கும் 'பெரிய மனுஷியாக' நின்று அவர்கள் கேட்பவைகளை வீட்டினுள்ளிலிருந்து எடுத்துக் கொடுத்துக் கொண்டிருந்தாள் சரோஜா, பம்பரமாக அவள் சுழல்வதாக எனக்குப்பட்டது.

*** *** ***

ஈமச் சடங்குகள் நடைபெற்று முடிந்து விட்டன. அதன் பின்னால் எத்தனையோ கிரியைகள்....... எல்லாமே இயந்திரகதியில் நடந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பத்தொன்று கூட முடிந்து விட்டது. வீட்டினுள் நிறைந்த இனத்தவர்கள் எல்லோருமே தத்தம் வீடுகளுக்குப் போய் விட்டார்கள். ஆயினும் சரோஜா இன்னமும் பாடசாலைக்குப் போகவில்லை. பாடசாலை இரண்டாந்தவணைக்கு மூடப்பட்டு விடுமுறை கழிந்து மூன்றாந் தவணை தொடங்கியதும் அவளைப்பாடசாலைக்கு அனுப்பலாம் என எண்ணிக் கொண்டே நான் என் வேலைகளைக்கவனித்தேன்.

ஆனால் அதற்குள் எனக்கு அவ்வூரை விட்டு வேறிடத்திற்கு மாற்றம் வந்து விட்டது. பதிற் தலைமை ஆசிரியராகப் பதவி வகித்தவன் நிரந்தரத்தலைமை ஆசிரியராகத் தொலை தூரம் மாற்றப்பட்டேன்.

***  ***  ***

மூன்றாந் தவணைத் தொடக்கத்தின் புதிய பாடசாலையிற் கடமையை ஏற்ற நான் என் வேலையில் மூழ்கிவிட்டாலும் சரோஜாவை மறக்கவில்லை. எதிர்காலத்தில் அவள் எப்படி எப்படியெல்லாமோ விகசிப்பாள் என் மனம் கற்பனை பண்ணிக் கொண்டிருந்தது.

தொலைவில் இருந்து கொண்டு சரோஜாவை மீண்டும் பாடசாலைக்கு அனுப்ப வேண்டியதன் அவசியத்தைச் சரோஜாவின் தந்தைக்குக் கடிதங்கள் மூலம் தெரிவித்தேன். ஆனால் எந்தக் கடிதத்திற்கும் பதிலே வரவில்லை. எதிர்காலத்தின் இந்நாட்டின் பெரிய மேதையாகப் பிரகாசிக்க வேண்டிய ஒருத்தியை இழந்துவிட்டதுயர் என்னைப் பற்றிக் கொண்டது. 'காட்டிலே கணக்கற்ற மலர்கள் மலர்கின் றன. அவைகளின் மணத்தை நுகர்வாரின்றியே அவை மாய்ந்து மடிகின்றன' என்ற கவிவாக்கு சரோஜாவைப் பொறுத்த வரை உண் மையாகிவிட்டது, என்ற நினைவு என்னை அரித்துக் கொண்டே யிருந்தது. வெள்ளைச் சட்டையும் நீலக்கழுத்துப் பட்டையுமாக என் கண்முன் எப்போதுமே நிழலாடிக் கொண்டிருந்தது. அவ்வுரு வத்தை என் நினைவிலே வளர்த்துப் பெரியவளாக்கி ஒரு சரோஜினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயுடுவாக உருவாக்கிக் கொண்டிருந்தேன். அடுத்த விடுதலைக்கு மீண்டும் அவளூருக்குச் சென்று சரோஜாவைப் பாடசாலையிற் சேர்ப்பிக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்தேன்.

***   ***   ***

மார்கழி விடுதலையில் நான் மீண்டும் சரோஜாவின் ஊருக்கு வந்தேன். இரவு முழுக்கப் பெய்த மழையில் தலை முழுகியிருந்த தகரைப்பற்றைகள் வழிநெடுகிலும் காலை இளவெய்யிலிற் குளிர் காய்ந்து கொண்டிருந்தன. அச்செடிகளின் மஞ்சட் பூக்களிலே நாவற்பழ நிறம ன வண்டுகள் ரீங்காரித்து மொய்த்தன. தகரைப் பற்றைகளின் சீ ழ வெள்ளை வெளேரெனப் பூத்திருந்த தும்பைகளில் வண்ணத்துப் பூச்சிகள் மொய்த்துத் தம் பகட்டான சிறகுகளை வெய்யிலில் உலர்த்திக் கொண்டிருந்தன. அச்செடிகளிடையே பின்னிப்படர்ந்த கார்த்திகைக் கொடிகள் தீக்கொழுந்து போன்ற தம் மலர்களை வெய்யிலில் விகசித்துக் கொண்டிருந்தன. இரவுப் பிரயாணத்தினால் கனத்துக் கிடந்த என் கண்களுக்கு அவ்வழியெல்லாம் ரம்மியமாகவே காட்சியளித்தன. நான் என் கைப்பையோடு மாவலித்திட்டில் அமைந்திருந்த அக்கிராமத்தின் ஒற்றையடிப்பாதையில் நடந்து கொண்டிருந்தேன். தகரைப்பற்றைகட்கு அப்பால் மாவலித்தேவி காட்டிற் பெய்த பெரு மழையைத் தன்னுள் ஏற்று நுங்கும் நுரையுமாய்க் கரைததும்ப ஓடிக் கொண்டிருந்தாள்.

ஒற்றையடிப்பாதையைத் தாண்டி கிராமத்து மாட்டு வண்டிகள் செல்லும் மணல் ஒழுங்கைக்கு வந்துவிட்டேன். இருகரையிலும் நிரைத்து நின்ற ஆமணக்கு வேலிகட்குப் பின்னால் ஆற்றிடை மேட்டு வெண்மணலிற் பசுமையாய்ப் படர்ந்து நின்ற நிலக்கடலைப் பயிர்களில் தேங்கிநின்ற மழைமுத்துக்களில் காலைச் சூரியனின் இளங்கதிர்கள் வர்ண ஜாலம் புரிந்து கொண்டிருந்தன. இதோ சரோஜாவின் வீடுவந்து விட்டது.

"வாருங்கள் ஐயா" சரோஜா என்னை வரவேற்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளைச் சட்டையும், நீல நிறக்கழுத்தப் பட்டையும் வெள்ளைச் சப்பாத்துமாக நான் கற்பனை பண்ணிக் கொண்டிருந்த சரோஜா, நீல நிறப்பாவாடையும் கார்த்திகைப்பூ என்று கிராமியமாக அழைக்கப்படும் செங்காந்தட்ப்பூ நிறத்தில் மேற்சட்டையும் அணிந்த வளாக நின்று என்னை வரவேற்றாள்.

நான் வீட்டுக்குட் சென்றேன். மண் சுவரால் ஆன இரண்டறை வீடும் முன் மண்டபமும் தளமும் களிமண்ணாலேயே மெழுகப்பட்டி ருந்தது. ஆனால் எத்தனை சுத்தமாக இருக்கிறது! ஏற்கனவே எனக்குப் பரிச்சயமான வீடுதான் என்றாலும் அதில் ஏதோ ஒரு புதுமை இருப்பதாக எனக்குப்பட்டது. மாவலிகங்கைக்கரைச் சில்லுக்கொட்டை களாற் தளம் மினுக்கப்பட்டிருந்தது. மண்டபத்துள்ளிருந்து மேசையிற் சில புத்தகங்கள் ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. வலது மூலையில் ஐந்து நெல் மூடைகள் ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

அறைக்குட் சென்ற சரோஜா வீட்டினுள்ளேயிருந்து மட்டக்க ளப்புக் கற்பன் பாயை எடுத்து வந்து மண்டபத்துள் விரித்து என்னை அமரும் படி சொல்லிவிட்டு அடுக்களைப்பக்கம் சென்றாள்.

பாயில் அமர்ந்து கொண்ட நான் வீட்டை நோட்டம் விட்டேன். வீட்டினுள்ளே பூசி மினுக்கி வைக்கப்பட்டிருந்த பழங்காலத்து வெண்கலப்பாத்திரங்களில் என்முகம் பிரதிபலித்தது.

சில நிமிடங்களில் சரோஜா பாற்குவளையோடு என்னிடம் வந்தாள்.

நான் பாலைப் பருகியபடியே "வீட்டிலே எவரையும் காணோமே" என்றேன்.

"அப்பாவும் அண்ணன்மாரும் வயலுக்குப் பசளை எறியப்போய் விட்டார்கள. நீங்கள் இப்போதுதான் வருகிறீர்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆமாம், நேற்றிரவு ரெயில் ஏறி இன்று காலையில்தான் வந்தேன், பாலைக்குடித்துவிட்டு வயலுக்குப் போய் அப்பாவைப் பார்க்கலாம் என நினைக்கிறேன்"

"வேண்டாம் ஐயா, நான் அப்பாவைக் கூட்டி வரும்படி தம்பியை அனுப்பிவிட்டேன். இன்னுங் கொஞ்ச நேரத்தில் அப்பா வந்திருவார். நீங்க பாலைக்குடிச்சிற்று இளைப்பாறுங்கள் ஐயா" சரோஜா பெரிய மனுஷி போலப் பேசினாள்.

பிரயாண அலுப்பினால் நானும் அவள் சொல்லியதை ஆமோதித்துப் பாயிற் கெளிந்தேன்.

*** *** ***

கூப்பிடுதூரத்திலிருந்த வயலிலிருந்து, சற்று நேரத்தில் சரோஜாவின் தந்தையார் வந்து விட்டார். படலையைத் திறந்து என்னைக் கண்டதுமே "சரோஜா ஐயாவுக்குத் தண்ணி, வென்னி குடுத்தியா? என்று மகளைக் கேட்டுக் கொண்டே "வயல் எல்லாம் குடலைப் பருவம். இன்றைக்குத்தான் குடலைப் பசளை எறிஞ்சோம். நீங்க வந்திருப்பதாகச் சரோஜா சொல்லி அனுப்பினாள். உடன் வந்திற்றன்" என்ற மன்னிப்புக் கேட்கும் தோரணையில் அவர் என்னிடம் பேசினார்.

தொடர்ந்து நாங்கள் இருவரும் நீண்ட நேரம் பேசிக் கொண்டோம். மாண்டுபோன தன் மனைவியைப் பற்றி நாத்தழுதழுக்கப் பேசிய அவர் சற்றுச் சுதாரித்துக் கொண்டு,

> "சரோஜா – என் மகள் மட்டும் இல்லாவிட்டால் நானும் என் பிள்ளைகளும் நேரக்கஞ்சி குடிச்சிருக்க மாட்டோம். விடிஞ்செழும்பினா நானும் மூத்த வன்களும் வயல் தோட்டம் என்று புறப்பட்டிடுவம், வீட் டை அவள்தான் பார்த்துக் கொள்வாள், சமைச்சி எங்களுக்கு நேரத்துக் குச் சாப்பாடும் தோட்டத்துக்கோ வயலுக்கோ அனுப்புவாள். சரோஜா மட்டும் இல்லாட்டி என்ர குடும்பம் ஈச்சங்குலையத்தரையில அடிச்ச மாதிரிச் செதைஞ்சி போயிருக்கும்" என உணர்ச்சியோடு சொன்னார் அத்தந்தை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் பேச்சைக் கேட்ட எனக்கு சரோஜாவைப் பாடசாலைக்கு அனுப்ப வேண்டிய அவசியம் பற்றிய பேச்சையே எடுக்க முடியாமலிருந்தது.

இதற்குள் மதிய மாகிவிடவே சரோஜா எங்களிரு வரையும் சாப்பிட அமரும்படி கேட்டுக் கொண்டே பூசிமினுக்கிய வெண்கலச் செம்பில் தண்ணீர் கொண்டு வந்தாள். குமரி வாழையின் குருத்தும் விரித்தாயிற்று.

கைகளைக் கழுவிக் கொண்டு இலைகளின் முன்னால் நாங்கள் இருவரும் அமர்ந்ததும் சரோஜாவின் சின்னஞ்சிறு கைகள் எங்களுக்கு அன்னம் படைத்தன. விதம் விதமான கறிகளோடு பெருவிருந்து. இத்தனையும் அந்தச் சின்னஞ் சிறுமியின் கைவரிசைதானா? எனக்கே ஆச்சரியமாக இருந்தது.

கோளிப்பாகற் கொடுங்கனித்திரள் காய்
வாள் வரிக் கொடுங்காய் மாதுளம் பசுங்காய்
மாவின் கனியொரு வாழைத் தீங்கனி
சாலியரிசி தம்பாற் பயனொடு

எல்லாமே உளதாய்த தன் மென்விரல் சிவப்ப ஆயர் பாடியிலே கோவலனுக்கு அமுதுபடைத்த கண்ணகியின் திறமையைக் கூறும் சிலப்பதிகார வரிகள் என் நினைவுக்கு வந்தன. நான் இரசித்துச் சாப்பிட்டேன்.

"சாப்பாடானதும்" திருக்கோணமலைக்கல்விக் கந்தோரிலே என் உத்தியோகம் சம்பந்தமான சில குறிப்புகளைச் சேகரிக்க வந்தேன். இத்தனை தூரம் வந்தவன் உங்களையும் பார்த்துக் கொண்டு போகலாம் என்று இங்கேயும் வந்தேன்" என்று நெஞ்சறியப் பொய் சொல்லிவிட்டு நான் விடை பெற்றபோது, சரோஜா எனக்கொரு பசுநெய்ப்போத்தலை அன்பளிப்பாகக் கட்டிக் கொடுத்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதையும் வாங்கிக் கொண்டு வரும் வழியில் என் மனம் சொல்லிக் கொண்டது.

'ஒரு பெண் எதைப் படிக்க வேண்டுமோ அதைச் சரோஜா படித்துக் கொண்டாள். பட்டினத்துப்படிப்பால் அவள் பட்டம் பெற்றிருக்கலாம். ஆனால் அதனால் ஒரு குடும்பமே சீர் குலைந்திருக்கும். அவள் படித்துப் பட்டம் பெற்றாலும் அக்குடும்பத்திற்கு அது மேலும் தொல்லையையே கொடுத்திருக்கும். அவள் தரத்திற்கேற்ற வரன் தேட, அவள் எவ்வளவுதான் படித்திருந்தாலும் ஆயிரமாயிரமாகச் சீதனமும் வேண்டும்.

ஆம், காட்டிலே மலர்ந்த எந்தப்பூவும் வீணாகத் தம் மணத்தைச் சிந்துவதேயில்லை. வண்டுகளைக் கவரவும், தம் வம்சத்தை விருத்தி பண்ணவும் அவை இயல்பாகவே திராணியுள்ளனவாகின்றன. முட்டாள் கவிஞர்களுக்கு இது தெரிவதில்லை. காலம் வரும் வரை இந்தக் காட்டுப்பூ தன் தந்தையின் பூஜைக்குப் பயன்படும் பூவாகவே இருந்து விட்டுப் போகட்டும்.

மலர் 1965

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடக்கம்

இரண்டு குழல் பிட்டைக் கட்டித் தயிரிற் குழைத்துச் சாப்பிட்டுக் கையலம்பிய பின், கையைத் தோளிலிருந்த துண்டிற் துடைத்துக் கொண்டு வீட்டை விட்டிறங்கினான் தாமோதரம்.

"காலையில வெளிக்கிட்டாச்சு. இப்பபோனா இருட்டினப் பொறகுதான் வாறதாக்கும்" என்ற மனைவியின் கேள்விக்கு விடையேதும் சொல்லாமலே ஒழுங்கையிலிறங்கி நடந்த தாமோதரம் பெருந்தெருவிலே மிதந்தார்.

இரண்டாவது மகாயுத்தகாலம். சிங்கப்பூரை ஜப்பானியரிடம் பறிகொடுத்த வெள்ளைக்காரன் திருக்கோணமலைக்கு வந்து தன்னைச் சுதாரித்துக் கொண்டான். துறைமுகத்துக்கு வரும் கப்பல்களுக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கும் கெவுளிமுனை வெளிச்ச வீட்டையும் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக அவ்வெளிச்ச வீட்டருகிலே ஒரு சிறிய படைப்பிரிபு காவலிலிருந்தது. அந்தப் படையினர் பயணிப்பதற்காக அமைக்கப்பட்டதுதான் அந்த மெயின்ரோடு. யுத்தம் முடிந்தபின் அத்தெருவின் முக்கியத்துவம் அற்றுப்போக தெருவும் தேடா நாடியாக விடப்பட்டது. எப்போதோ ஊற்றப்பட்ட தார் மாட்டுவண்டிகளின் இரும்புவளையச் சில்லுகளினால் பட்டையாகப் பெயர்க்கப்பட்டுக் கொங்கிறீற் கற்கள் வெளியே தலையை நீட்டிக் கொண்டிருந்தன. ஆனாலும் அந்த வீதிதான் ஊரிலே மெயின் றோட் என்ற பிரதாபத்தோடிருந்தது.

அந்த மெயின் றோட் வீதியிலே கெவுளிமுனையை நோக்கி நடந்து கொண்டிருந்தான் தாமோதரம், அவன்தலைக் கறுப்பைக்கண்டு வீதியோரத்திலே வேப்பங்குச்சாற் பல் விளக்கிக் கொண்டு நின்ற அருணாசலக் கிழவர் "ஐஞ்சாறு நாளாத் துலைவான் ஊரில இல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பவந்திற்றான், காலையில இவனுக்கு முன்னால ஏன் நிற்பான்? என்றெண்ணிக் கொண்டே தெருப்படலையூடாகத்தன் வளவுக்குள் நுழைந்த கிழவர், முற்றங்கூட்டிக் கொண்டிருந்த தன் மகளிடம் 'வீட்டுக்க போபுள்ள'' என்று சொல்லிவிட்டுக் கிணற்றடிப்பக்கமாக நடந்தார்.

தாமோதரம் தன் பாட்டில் வீதிவழியே சென்று கொண்டிருந்தான். வீதியோரமாக இருந்த வீடுகளில் இருந்தவர்கள் அவன் எங்கே போகிறான்? என்று வேலிப்பொட்டு வழியாக விடுப்புப்பார்த்தார்கள். அவன் முன்னால் நேரடியாகத் தெரிபட எவருமே விரும்பவில்லை.

ஒரு தெருப்படலையத்திறந்து கொண்டு ஒரு கிழவி தன் பேரனைக் கையிற்பிடித்திழுத்துக் கொண்டு வந்தாள். தோளிலே தொங்கும் புத்தகப் பையோடு பையன் பாடசாலைக்குப் போகமாட்டேன் என்று அடம் பிடித்து அழுது கொண்டிருந்தான், அதனைக் கண்ட தாமோதரம் பையனிடம் நெருங்கி, "நீங்க விடுங்க ஆச்சி, நான் பள்ளியில் கொண்டுபோய் விடுறன்'' என்று பையனின் கையைப்பிடித்து "வாடா பள்ளிக்கு'' என்று அதட்டினான். அப்போதும் பையன் அடம்பிடித்தான்.

தாமோதரம் தெருவேலியிலிருந்த பூவரச மரத்தில் ஒரு தடியைப் பிடுங்கி அதன் இலைகளை ஒடித்துக் கீழே போட்டுக் கம்பின் நுனியையும் ஒடித்து, இரண்டு முழ நீளமான பிரம்பாக்கிக் கொண்டு "நடடா பள்ளிக்கு'' என்று பையனை மீண்டும் அதட்டினான்.

"போமன. போகாட்டி மாமா அடிப்பார்'' எனக்கிழவியும் அவனைத் தூண்டினாள். பையன் அழுது கொண்டே பாடசாலையை நோக்கி நடந்தான். தாமோதரம் பையனை வெருட்டிக் கொண்டே நடந்தான். பாடசாலையின் தலைவாசலிலே சடைத்துக் கிளைபரப்பி நின்ற பென்னம்பெரிய நிழல் வாகை மரத்தின் கீழே பாடசாலைத் தலைமை ஆசிரியர் நின்று கொண்டிருந்தார். தாமோதரத்தைக் கண்டதும் 'காலையிலே இந்தச் சனியன் எங்க வாறான்' என்று அருவருப்பாக நினைத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட ஆசிரியர், தாமோதரம் தன்னை நெருங்கியதும் அசட்டுச் சிரிப்புச் சிரித்தார்.

"இவன் பள்ளிக்கு வரமாட்டன் என்று அழுதான் வாத்தியார். அதுதான் கூட்டிற்று வாறன்" என்றான் தாமோதரம்.

"அப்படியா, நீங்க விடுங்க தம்பி. நான் கூட்டிற்றுப் போறன்" என்று கொண்டே வாத்தியார் பையனைக் கையிற் பிடித்துக் கொண்டு பாடசாலை வளவுக்குள் நுழைகிறார். தாமோதரத்தோடு கதைவளர்த்துக் கொண்டு நிற்கவே அவர் விரும்பவில்லை!

பையனைத் தலைமை ஆசிரியரிடம் ஒப்படைத்த தாமோதரம் மேலே நடந்தான். ஊர்க்குளத்தின் மேலதிகத் தண்ணீர் வடிந்து செல்லும் கால்வாய்க்கு மேற் போடப்பட்டிருந்த இரும்புப் பாலத்தையும் தாண்டிக் கிழக்குப் பக்கமாக இருக்கும் பத்திரகாளி கோயிலுக்குச் செல்லும் ஒழுங்கை வழியாக நடந்தான்.

பத்திரகாளி கோயிலை அடைந்ததும் தாமோதரம் தன் சண்டிக்கட்டைக் களைந்து கைகளைத் தலைக்குமேலே உயர்த்தித் 'தாயே' என்று மட்டும் சொல்லித் தெருவிலிருந்தே கும்பிட்டான்.

இளக்கந்தைக் கடற்கரையிலிருந்து மீன்வாங்கித் தன் சைக்கிளின் பெட்டியிற் கட்டிக் கொண்ட மூதூர் மீன் வியாபாரி எதிரே வந்து கொண்டிருந்தான். அவனுக்கு அவசரம்! நேற்று இரவு பிடிபட்ட மீன். அவை பழுதாக முன்னர் மூதூருக்குக் கொண்டு போய் விற்க வேண்டும். அவன் மிக மிக வேகமாகவே சைக்கிளை மிதித்துக் கொண்டு வந்தான்.

அவன் தன்னை அண்மியதும் "நில்ரா அங்க" என்று முழக்கமிட்டான் தாமோதரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக வேகமாகச் சைக்கிளைச் செலுத்திவந்த மீன்வியாபாரி எப்படியோ சமாளித்துத் தன் 'பிறேக்' இல்லாத சைக்கிளை நிறுத்தினான். எதிரே ஆறடி உயரத்தில், செக்கச் செவேல் என்ற தடித்த உடம்போடு அணிந்திருந்த அரைக் கை முண்டா பெனியனுக்கு மேலாகத் திரணையாய் முறுக்கேறி நிற்கும் புஜங்களோடு ஆஜானுபாகுவாய் நிற்கும் தாமோதரத்தைக் கண்டு வியாபாரி குழைந்தான்.

"என்னடா கோயிலுக்கு முன்னால மீன் பெட்டியோடு வாறா"?

மீன் வியாபாரி எத்தனையோ தடவை இந்தவழியில் மீன் பெட்டியோடு வந்திருக்கிறான். எவருமே – ஏன் சண்டியன் தாமோதரங்கூட இந்தக் கேள்வியை இதுவரை கேட்கவில்லை. ஆனால் இன்று...........

"என்னடா பேசாம நிக்கிறா? என்று மீண்டும் அதட்டிய தாமோதரம் மீன்பெட்டியைப் பிடித்து உலுக்கிச் சைக்கிளைத் தள்ளி விட்டான். சைக்கிள் தெருவிலே சரிந்து கிடந்தது. பெட்டியிலுள்ள மீன்கள் எல்லாம் தரையிலே சிதறின.

தாமோதரம் கீழே சிதறிய மீன்களில் முழுநீளமான பாரை மீனை எடுத்துக் கொண்டு "சரி சரி, மீனையெல்லாம் அள்ளிக் கொண்டு நடையைக்கட்டு. இனிமேற் பத்திரகாளி கோயிலுக்கு முன்னால் மீன்பெட்டியோடு வராத. தெரிஞ்சுதா?" என்று வியாபாரியைப்பார்த்துக் கறுவினான்.

வியாபாரி கீழே சிதறிய மீன்களை எடுத்துத் தன் சைக்கிள் பெட்டியிற் போட்டுக் கொண்டிருக்கையில் வில்லுப்பக்கமாகவிருந்து தம்பையா தன் காவுதடியிற் தொங்கும் பால்முட்டிகளோடு வந்து கொண்டிருந்தார்.

"கொஞ்சம் நில்லுங்க சித்தப்பா" என்று அவரை வழிமறித்த தாமோதரம் தன்கையிலிருந்த மீனை அவரிடம் கொடுத்து "இதைக் கொஞ்சம் வீட்ட கொடுங்க சித்தப்பா" பெட்டிக்காரனிடம் இன்னொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீனையும் எடுத்து "இதை நீங்க கொண்டு போங்க" என்று விட்டு வில்லுப்பக்கமாக இறங்கி நடந்தான்.

ஆவணி மாதத்தின் கடைசிக் கூறு ஆதலால் ஊருணியான அந்தச் சம்பூர்வில் வற்றி கெவுளிமுனைப் பக்கமாக மட்டும் நீர் அடங்கிக் கிடந்தது. காய்ந்து கமர் வெடித்துப் பிளந்து கிடந்த வில்லுக் கரையோரமாகத் தாமோதரம் சென்று கொண்டிருந்தான். வேகமாயடித்த சோழகக்காற்று அவனைப் பின்புறமாகத் தள்ளிக் கொண்டிருந்தது. வில்லுக் கரைவழியே நடந்து கூனித்தீவுக்குச் செல்லும் தெருவில் ஏறிவிட்ட தாமோதரம் ஊருக்குச் செல்லும் பாதையிலிருந்து இறங்கிக் காட்டினூடாக ஒற்றையடிப்பாதையில் நடந்தான். சூரைப்பற்றைகளும் இலந்தை மரங்களும் மண்டிய முட்புதரூடாகச் சிரமத்துடன் அவன் நடந்து கொண்டே யிருந்தான். சூரியன் இதோ உச்சிக்குவந்து விட்டேன் என்று சொல்லி, எல்லாவற்றையுமே தீய்த்துக் கொண்டிருந்தான்! வெய்யிலின் அகோரத்தில் இலந்தை மரம் ஒன்றின் கீழ் தரித்து நிற்கையில் காட்டுக்குள்ளே மனிதக் குரல்கள் கேட்டன. "ஓகோ இங்கதான் வடிக்கிறாங்க" என்று மெதுவாகச் சொல்லிக் கொண்ட தாமோதரம் இலேசாகச் செருமினான்.

யாரோ வரும் அசுப்புக் கேட்டுச் சாராயம் வடித்துக் கொண்டிருந்தவர்கள் பொலிஸ்தான் வந்து விட்டது என்று எண்ணியவர்களாக எல்லாவற்றையும் போட்டது, போட்டது போல விட்டு விட்டு ஓட்டமெடுத்தார்கள்.

தாமோதரம் கெக்கட்டமிட்டுச் சிரித்தான். சிரித்தவன் "இவ்வளவு பயமாடா உங்களுக்கு. பயந்த உங்களுக்கு ஏண்டா இந்தத் தொழில் வாங்கடா இங்க பொலிசும் வரல்ல யாரும் வரல்ல. தாமோதரந்தான் வந்திருக்கன். வாங்கடா எல்லாரும்" என்று சத்தம் போட்டுச் சொன்னான்.

குரலை மட்டுக் கட்டிக் கொண்டு, சாராயம் வடித்தவர்கள் தங்கள் மறைவிடங்களிலிருந்து வந்து விட்டார்கள். தாமோதரமும் அவ்விடம் வந்து சேர்ந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கே சாராயம் வடித்து முடிந்திருந்தது. ஆனாலும் இன்னமும் அடுப்பு நெருப்பு அணையவில்லை. சாராயம் வடிக்க உதவும் சாதனங்களான ட்ரம்களும் குழாயும் பானைகளும் அப்படி அப்படியே கிடந்தன. பசளைப் பையில் பதினான்கு சாராயப் போத்தல்கள் ஊருக்குக் கொண்டு போகத் தயாராக அடுக்கிவைக்கப்பட்டிருந்தன.

அந்தப் பையை மறைவிடத்திலிருந்து எடுத்து வந்த மூவரும், பையைத்திறந்து ஒரு போத்தல் சாராயத்தை எடுத்துத் தாமோதரத்திடம் கொடுத்து "குடிச்சுப்பாருங்க தம்பி" என்று குழைந்தனர்.

போத்தலை வாங்கிக் கொண்ட தாமோதரம் விளிம்புமட்டும் நிறைந்திருந்த அதன் கழுத்துள் சுண்டுவிரலை விட்டுத் திரவத்திற் தோய்த்து, விரலை எடுத்து அடுப்பு நெருப்பிற் சுண்டினான். அடுப்பு திகீர் என்று சுவாலை விட்டெரிந்தது.

"திறமான சரக்குத்தான் அண்ணே" என்று 'சேட்டிபிக்கற்' வழங்கினான் தாமோதரம். பின்னர் அங்கே கிடந்த தகரப்பேணியை எடுத்து அதிற் காற்போத்தல் சாராயத்தை ஊற்றி ஒரே மடக்கில் குடித்தான். அந்தத் திரவம் நெஞ்சை எரித்துக் கொண்டு உள்ளே சென்றது. தாமோதரம் முகத்தை அஷ்ட கோணலாக்கி, உதடுகளை நெளித்து அதன் எரிப்பைச் சமாளித்த பின்னர், காறித்துப்பினான்.

வடிகாரர் மூவரும் வீட்டுக்குக்கிளம்ப ஆயத்தமாகினர். வடி முதலாளியான செல்லத்தம்பி மனத்துட் கணக்குப்பார்த்தார். இருபத்தெட்டு றாத்தல் சீனி, டிசிஎல்ரின் ஒன்று, இரண்டு பேருக்குச் சம்பளம் எல்லாமா முப்பத்தைஞ்சு ரூபா செலவு. பதினாலு போத்தல் தான் வடிஞ்சிருக்கு. மொத்த யாபாரிக்கு போத்தல் நாலு ரூபாப்படி தான் கொடுக்கலாம். அதுக்குள்ள இந்தத் துலைவான் வந்திற்றான். இவ்ன என்னத்தைக் கேட்கப்போறானோ' என்று எண்ணியவர், "தம்பி அந்த போத்தல் உங்களுக்குத் தான், அதை எடுத்துக் கொள்ளுங்க" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வேண்டாம், இப்பவே ஒத்தையடியில் கால் போத்தலுக்கு மேல குடிச்சிற்றன். இந்த வெய்யிலில் வெஷம் ஏறுறாப்போல ஏறுது, எனக்கு இனி வேணாம். அதையும் நீங்களே கொண்டு போங்க" என்றான் தாமோதரம்.

அவன் காசு கேக்கப் போறானோ' என்று சந்தேகப்பட்டார் செல்லத்தம்பி.

ஆனால் தாமோதரம் மீண்டும் சொன்னான். "அந்தக் குறை போத்தலையும் எடுத்துச் சாக்கில வையுங்க"

"அப்ப ஒரு குறையும் இல்லியேதம்பி" என்று பவ்வியமாகத் கேட்டார் செல்லத்தம்பி.

"ஒரு குறையும் இல்லண்ணே. ஆனா உங்களுக்கு இஷ்டமாயிருந்தா வீட்ட போய் எனக்கு ஒரு போத்தல் எடுத்துவையுங்க. நான் வாறன்" என்ற தாமோதரம் அவர்களை எதிர்பாராமல் தன் பாட்டில் எழுந்து நடந்தான்.

மதியமாகிவிட்டது. வெயில் வறுத்துக் கொட்டியது. உள்ளே ஒரேயடியாய்ப் போன காற்போத்தலின் காங்கையில் உடலெல்லாம் வெயர்த்துக் கொட்டியது. ஆனாலும் தலைசாயுதல் செய்யோம் என்ற பாரதி பாடியபடி தன் தலையை நிமிர்த்திக் கொண்டு நடந்தான். அவனது 'விருகோதர' வயிற்றில் பசி கிள்ளத் தொடங்கியது. அந்தக் கிள்ளலோடு காட்டுவழியே நடந்து கூனித்தீவையடைந்துவிட்டான்.

கூனித்தீவுப் பிள்ளையார் கோயிலடிப் பணிவில் தன் தென்னங் காலைக்குள்ளே தேங்காய் பிடுங்டுவதைக் கண்காணித்துக் கொண்டிருந்தார் செல்வராசா. அவர்தாமோதரத்தின் நெருங்கிய உறவினர்!.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் தாமோதரத்தைக் கண்டதும் "எங்க தம்பி இந்தப் பக்கம்? ஒரு வாரமா உன்ர ஊசாட்டத்தைக் காணவில்லையே" என்று விசாரித்தார். "குஞ்சியப்பர் சக்கரவெட்டைக்க சூடடிக்கக் கூப்பிட்டார். போயிற்றன். நேத்துப்பின்னேரந்தான் வந்தன்"

"அப்பிடியா? இந்த வேகா வெய்யிலில போறியே, சாப்பிட்டிற்றுப் போவன்"

"எனக்கு வேணாம் எண்டிறன்" என்றான் தாமோதரம். குரல் சற்றுத் தடித்திருந்தது.

அதற்கு மேலும் அவனோடு கதைக்கவிரும்பவில்லை செல்வராசா. மரத்திலிருந்தவனிடம் "இரண்டு இளனி பிச்சிற்று வா" என்று குரல் கொடுத்தார். மரத்திலிருந்தவன் இரண்டு இளநீர்களைத் தோளிற்போட்டுக் கொண்டு இறங்கி வந்தான். அவைகளைத் தாமோதரத்திடம் நீட்டி" இதையெண்டான குடிச்சிற்றுப்போ" என்றார் செல்வராசா.

தாமோதரம் வேண்டாவெறுப்பாக அவர் கையிலிருந்து இளநீர்களைப்பிடுங்கிக் கொண்டு நடந்தான். ஊரெல்லையை அடைந்ததும் அங்கிருந்த மதகிற் தரித்தான் தாமோதரம். மதகுக் குந்திலே குத்தி இளநீர்களின் முகிளைப் பெயர்த்த தாமோதரம் மதகினடியிற் கிடந்த காட்டுக்கம்பை எடுத்தக் குத்தி இளநீரைத்திறந்து குடித்தான். குடித்தவன் மதகிலே அதை மோதிப் பிளந்து உள்ளேயிருந்த இளம் வழுக்கலை எடுத்துக் தின்றான். முதலாவது இளநீரை முடித்தபின் இரண்டாவது இளநீரையும் குத்திற்திறந்து உள்ளிருந்த நீரைமட்டும் பருகிவிட்டுக் கோம்பையை மதகடியில் வீசி எறிந்து விட்டு நடந்தான்.

சம்பூர் வில் ஓரத்துக் குளுமையில் நின்ற தளராவளர் தெங்கின் இளநீர்கள் உள்ளே சென்றதும் தாமோதரத்தின் விருகோதர வயிறு சற்றுக் குளிர்ந்தது. அந்தக் குளுமையில் குறைபோத்தல் வடியைக் கையோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுவந்திருக்கலாம் என்று அவனுக்குத் தோன்றியது. அந்த எண்ணத்தோடு தாமோதரம் அருங்கோடையிற் பாளம் பாளமாய் வெடித்துப் பிளந்து கிடந்த சம்பூர் வில்லின் நடுவாக நடந்து ஊரை அண்மிய போது மூன்று மணியாகிவிட்டது. பத்ரகாளி கோயில்டியில் மரநிழல்களில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த கிழவர்கள் தாமோதரத்தைக் கண்டு முகம் சுளித்தனர். தாமோதரம் அவர்களைத் தாண்டிச் செல்கையில் படுத்துக் கொண்டிருந்த ஒரு கிழவர் பாடினார்.

"கல்லுளிமங்கன் போனவழி
கல்லுகளெல்லாம் தவிடுபொடி"

அந்தப் பாடல் தாமோதரத்திற்குக் கேட்கவில்லை. அவனுக்குக் கேட்கக் கூடாதென்று கிழவரும் மெதுவாகத்தான் பாடினார்.

தாமோதரம் தன் வழியே நடந்து சந்தியிலுள்ள பிள்ளையார் கோயிலடியில் நிழல்வாகை மரத்தின் கீழ்த் தரித்தான். சந்தியிலிருந்து தெற்காகத் திரும்பி வீட்டுக்குப் போவோமா என்று எண்ணும்போது வடக்குப் பக்கமாக இருந்து சதாசிவம் போடியார் வந்து கொண்டிருந்தார். தாமோதரம் நிழல்வாகை மரத்தின் கீழ் நிற்பதைக் கண்டதும் சதாசிவம்பிள்ளை தன் குடையை மடக்கிக் கொண்டு "உன்னத்தாண்டாப்பா தேடிக் கொண்டு வீட்ட போறன். காலமையும் போனன். நீ வெளியில போயிருக்கிறதா உன்ர மனுசி சொன்னா"

"என்னத்தேடிக் கொண்டு போனீங்களா? ஏன்? என்ன அவசரம். சொல்லுங்களேன்" என்று அவசரப்படுத்தினான் தாமோதரம்.

"றோட்டில நிண்டு வேணாம் தம்பி வா வீட்ட போவம்" என்று சொல்லிக் கொண்டு வடக்கு நோக்கி நடந்தார் சதாசிவத்தார். அவர்பின்னால் தாமோதரமும் நடந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதாசிவத்தார் தம் வீட்டை அடைந்ததும் தாமோதரத்தையும் உள்ளே அழைத்துத் தம் வீட்டு மண்டபத்துக் கதிரையில் அமர்த்தி விட்டு உள்ளே சென்றவர் ஒரு சீல் சாராய போத்தலைக் கொண்டு வந்து ரீப்போயில் வைத்தார்.

"எடுக்கிறது இருக்கட்டும். விஷயத்தைச் சொல்லுங்க"

"போன எலெக்ஷனிலதான் எனக்கு எதிரா நிண்டிற்றா, இந்த வருஷமாவது என்னோட நிக்கவேணும்"

"இப்ப ஒண்ணையும் தீர்மானமாச் சொல்லமாட்டன்" என்ற தாமோதரம் எதையோ யோசித்தபடி கதிரைக்குள் ஆடாமல் அசையாமல் இருந்தான். அவன் நினைவுகளிற் கடந்த கிராமசபைத் தேர்தல்கள்..........

ஏழாம் வட்டார அபேட்சகனாக இருந்த சிவசம்பு என்னட்ட வந்து பழிகிடந்து தன்பக்கம் என்னையும் சேர்த்துக் கொண்டான். அந்த வாட்டில எல்லாமா நாப்பத்தி மூணு துண்டுதான். அதிலயும் இரண்டுபேர் செத்துப் போனா மிச்சம் நாப்பத் தொண்ணு. அந்த வட்டா ரத்திலதான் சதாசிவத்தாரும் போட்டியிட்டார். அவரிடம் காசு பணம் இருந்தது. எல்லாரும் அவர்தான் வெல்வார் எண்டு எண்ணினாங்க. அந்த நேரத்திலதான் சிவசம்பன் என்னைப் பிடிச்சான். நான் அந்த வட்டாரத்தில ரெண்டு மூணு பேரிர தலைய உடைச்சு நொறுக்கினன். பயமுறுத்தினன். கடற்கரையில ஒருத்தன்ட வலைக்கு நெருப்பு வச்சன். இந்தப் பயத்தில சனம் வோட்போடப் போகல்ல. எல்லாமாப் பதினேழு பேர்தான் வோட்போடவந்தாங்க. அதிலயும் ஒருதன்ட் வோட் செல்லுபடி யாகல்ல. கடைசியா சிவசம்பனுக்கு ஒன்பது வோட்டும் சதாசிவத்தாருக்கு ஏழுவோட்டும் கிடைச்சுது. இரண்டு வோட்டாலதான் சிவசம்பன் வென் றான். ஆனா மெம்பராப் போனதும் சிவசம்பனுக்குத் தலைக்கனம் புடிச் சிற்று. என்ன மதிக்கிறதில்ல. இந்த முறை ஆளைத் தட்டத்தான் வேணும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்மானித்துக் கொண்ட தாமோதரம். "சரி. இந்த எலெக்ஷனுக்கு நான் உங்களோட நிப்பன் இது சத்தியம்" என்றான்.

உள்ளூர மகிழ்ந்த சதாசிவத்தார் போத்திலைத்திறந்து தன் கிளாசில் கொஞ்சம் வார்த்து, "சாராயத்தைத் தாறவன்தான் முதலிற் குடிக்கவேணும். அப்ப அதில்ல நஞ்சோ, வசியமருந்தோ இல்லையெண்டு தெளிவாகும். நான் முதலில குடிக்கிறன் நீங்களும் எடுங்க தாமோதரம்" என்று தன் கிளாசில் ஊற்றியதைப் பருகினார், சதாசிவம்பிள்ளை.

தாமோதரமும் தன் கிளாசை நிறைத்துப் பருகினான்.

உள்ளூரமகிழ்ந்த சதாசிவத்தார், 'தாமோதரம் சண்டியன்தான், குடிகாரன்தான் ஆனால் எலெக்ஷன்ல ஒரு பக்கம் நிண்டான் என்றாக் கடைசி வரையும் மாறமாட்டான். அந்தமட்டில மகா யோக்கியன்' என்றெண்ணிக் கொண்டவராய் அவனிடம் சிகரட் பக்கற் ஒன்றை நீட்டி, நான்தான் சுருட்டைத் தவிர இது பாவிக்கிறதில்லை என்று தெரியும்தானே. இத நீங்களே வச்சிக்கொள்ளுங்க என்றவர் உள்ளே சென்று வரும்போது அவர் கையிலிருந்த தட்டில் பெரிய பொரித்த வெள் இறால்கள் இருந்தன.

தாமோதரம் இறால் பொரியலைச் சுவைத்துக் கொண்டே மீண்டும் கிளாசில் ஊற்றினான்.

கடைசியாய் அவன் குடியை முடித்தபோது நான்கு மணிக்கு மேலாகிவிட்டது. சதாசிவத்தார் சொன்னார். "தம்பி நீ மட்டும் மனது வைத்தால் நான் இன்றைக்கே போட்டியில்லாத மெம்பராகத் தேர்ந்தெடுக் கப்படலாம்"

"எப்படி?" தாமோதரம் விளங்காமற்தான் கேட்டான்.

"தம்பி இன்றைக்குத்தான் எலெக்ஷன் கேக்கிறவங்க காசு கட்டுற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசிநாள். இண்டைக்குப் பகல் பன்னிரண்டு மணிக்கு முன்ன திருக்கிணாமலைக் கச்சேரியில கட்டுப்பணம் கட்ட வேண்டும். சிவசம்பன் இன்றைக்குத்தான் காசுகட்டப் போயிருக்கான். கடைசி லாஞ்சில மூதூருக்கு வந்து சைக்கிளிலதான் இங்கவருவான். நீ இடையில் வச்சி அவன் காசு கட்டிய பற்றுச்சீட்டைப் பறிச்செடுத்திற்றாயெண்டால் பிறகு காசு கட்டேலா. நான் போட்டியில்லாமலே மெம்பராயிடுவேன். உன்னால இதைச் செய்ய முடியுமா?" என்றார் சதாசிவம்.

"முடியுமாவா? இந்தத் தாமோதரத்தால முடியாததும் இருக்கா. இப்ப அவன் வாற நேரமாப் போச்சு. நான் வாறன். பற்றுச் சீட்டோட தான் இனி உங்க முன்னால வந்து நிப்பன்" என்ற தாமோதரம் சதாசிவத்தாரின் வீட்டை விட்டு வெளியேறினான்.

மெயின் வீதியைக் கடந்து கடற்கரைச் சேனைக் காடுகளூடாக ஒரு மைல்தூரம் தெற்காக நடந்து பிள்ளை கொல்லி அரசங்கன்றடியில் மெயின் றோட்டில் – அது ஊரின் தலைவாயில் – ஒருமைலுக்கப்பாற்தான் ஊர் இருந்தது. இவ்விடத்திற் சனநடமாட்டமே இல்லை.

தாமோதரம் விராலிப் புதரில் மறைந்து நின்று கொண்டு தெற்காகவே பார்த்துக் கொண்டிருந்தான்.

மாலை மயங்கிக் கொண்டிருக்கிறது. தெற்கே தூரத்தே ஒரு சைக்கிள் தென்படுகிறது. தாமோதரம் கூறுகுறிப்பாக அதைப் பார்க்கிறான். சைக்கிளின் முன்பாரில் சிவசம்பன்.

தாமோதரம் விராலிப்புதரை விட்டு வெளியே வந்து "நில்லுமச்சான்" என்று மறிக்கிறான்.

அடுத்த எலெக்ஷனுக்கும் தேவைப்படுபவனல்லவா? சிவசம்பனின் சைக்கிள் நிற்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மலையாலயா மச்சான் வாறா?" என்று கேக்கிறான் தாமோதரம்.

"ஆமாம், உன்னையும் கூட்டிப் போக எண்டுதான் சுணங்கினன். ஆனா உன்னை ஊரில ஒரு கெழமையக்காணல்லியே"

"சரிதான்! சூட்டுக் களத்திற்குப் போனன்" என்ற தாமோதரம், "அவர் போகட்டும் நாம கதைச்சிக் கதைச்சி நடந்து போவம்" என்றான், சைக்கிளிற் தன்னை ஏற்றிவந்தவரை அனுப்பி விட்டுச் சிவசம்பன் கைப்பையையும் எடுத்துக் கொண்டு நடக்கையில் தாமோதரம் திடீரென்று சிவசம்பனின் பையைப் பறித்து அதன் 'சிப்'பைத் திறந்து உள்ளேயிருந்த என்வலப்பை எடுத்தான்.

"அதிலேதான் மச்சான் நொமிநேசன் போமும் பற்றுச் சீட்டும் இருக்கு. அதைத்தா" என்றான் சிவசம்பு.

"நொமினேஷன் பேப்பர் இருக்கு. பற்றுச்சீட்டு என்னட்ட இருக் கட்டும்" என்றான் தாமோதரம்.

"உன்னிட்ட ஏன் மச்சான். நோமினேஷன் பேப்பரோட அதையும் சேர்த்துத்தானே கொடுக்க வேணும்"

"அது எனக்குத் தெரியாதா? நீ நொமினேஷன் பேப்பரை நிரப்பிக் கொண்டுவா. நான் பற்றுச் சீட்டைத்தாறன். இப்ப மூச்சுக் காட்டாத. பேசாம வீட்டபோ. இதுக்கு மேல ஏதும் பேசினியெண்டா தலையை உடைச்சி நொறுக்கீருவன். தெரிஞ்சுதா, பேசாமப்போ" என்று அதட்டினான் தாமோதரம்.

தான் வகையாக மாட்டிக் கொண்டதை உணர்ந்த சிவசம்பு 'முள்ளில சீல கொழுவிக் கொண்டுது. பத்திரமாத்தான் எடுக்க வேணும்' என்றெண்ணிக் கொண்டு மனமடிவோடு வீட்டுக்குப் போனான்.

தாமோதரம் நேரே சதாசிவத்தாரின் வீட்டுக்குப்போனான். இருண்டு விட்டது. ஆனாலும் முன்னிலவுக்காலம். நிலவொளியிற் தாமோதரத்தைக் கண்ட சதாசிவத்தார். 'வா தாமோதரம்' என்று அழைக்கையிலே தாமோதரம் பற்றுச் சீட்டை அவர்கையிற் கொடுத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று சதாசிவத்தார் வீட்டில் வெற்றி விழா. இனி அவர் போட்டியில்லாமலே மெம்பர் ஆகிவிடுவார். அந்த வெற்றிவிழா அவர் வீட்டில் முடிவடைந்த போது நள்ளிரவாகிவிட்டது. நிலவும் மறைந்து விட்டது.

தாமோதரம் நள்ளிரவில் தள்ளாடித் தட்டித் தடுமாறிக் கொண்டே வீடுவந்து சேர்ந்தான். படலையைத் திறந்து வீட்டினுள் வந்த போது அவன் மனைவி நித்திரையாயிருந்தாள்.

தாமோதரம் அவளருகிற் குந்திக் கொண்டு ராசம், ராசம் என்று மெதுவாக அவளை எழுப்பினான்.

எழுந்து கொண்ட ராசம். "உங்களுக்குச் சூடு சொரணை இருக்கா. இந்த நடுச்சாமம் வரையும் என்ன செய்தீங்க?" ராசம்மா எரிந்து விழுந்தாள்.

"போன எடத்தல சுணங்கீற்றன் ராசம். இப்ப எனக்குச் சரியாப் பசிக்குது. சோத்தப் போட்டுத் தாராசம்" தாமோதரம் கெஞ்சினான்

"இஞ்ச சோறும் இல்ல ஒண்ணும் இல்ல. இவ்வளவு நேரம்பாத்துவிட்டுச் சோத்துப்பானைக்க தண்ணி ஊத்திற்றன்" என்று எரிந்து விழுந்தாள் ராசம்மா.

"அதையெண்டான போட்டுத்தா ராசம் எனக்குப் பசிக்குது"

"இந்தாங்க என்னை யொண்ணுங் கேக்காதீங்க. நான் வரமாட்டன். விருப்பமெண்டாக் குசினிக்க போய் நீங்களே சோத்தைப் போட்டுக் கறியையும் வைச்சித் தின்னுங்க"

ஆமையாய் அடங்கிய அந்தச் சண்டியன் தாமோதரம் குசினியைத் திறந்து தானாகவே சோற்றைப் பீங்கானிற் போட்டுச் சாப்பிடத் தொடங்கினான்.

**வீரகேசரி 31–07–66**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிஷேகம்

"சாமான் விக்கிற விலயில மூணு நேரமும் பூசை பண்ற தெண்டாச் சும்மாவா? ஊரவங்களுக்குக் கோயில் எண்ட ஒன்று இருக்கு என்ற நெனைப்பே இல்ல. வினாயகர் என்னப் பொறுத்துக் கொள்ளட்டும். இனியும் என்னாற் பொறுக்க முடியாது. இப்பவே சாவியப் பிடியுங்க நான் கோயிலப் பூட்டப்போறன்."

வண்ணக்கர் வயிரமுத்தர் பதறிப் போனார். தலைமுறை தலைமுறையாக ஊரவர் எல்லாருக்கும் எந்த விக்கினமும் வராது காத்து நின்ற வினாயகரின் கோயிலில் அயற்கிராமங்கள் எல்லாமே பொறாமைப் படும்படியாக யாழ்ப்பாணத்திலிருந்து பூசகரை வருவித்து மூன்று காலமும் தவறாது பூசை நடத்திக் கொண்டு வருகிறார். கோயிலைப் பூட்டப் போகிறேன் என்று குருக்கள் சொல்லக் கேட்டதுமே வண்ணக்கர் கல்லாய்ச் சமைந்து போனார்.

"என்ன பேசாம நிக்கிறீங்க வண்ணக்கர்? எனக்கும் குடும்பம் இருக்கிறது. வாயும் வயிறும் இருக்கிறது. ஒருதடவையா, இரண்டு தடவையா சரியாக மூன்று போகத்திற்கு ஊரவன் எவனும் எனக்கு ஒரு சுண்டு நெல்லுக் கூடத்தரல்ல. நானும் எத்தனதரம் உங்களிட்டச் சொல்லீற்றன். போனமாரிப் போகம் மழையில்லாம அழிஞ்சிட்டுது. கோடைப் போகத்தில அதையும் சேர்த்து வாங்கித் தந்திருவன் என்றீங்க. தந்தீங்களா? ஊர் வெளிக்குத் தண்ணி வரல்ல என்று ஊரில எவனாவது சாப்பிடாம இருக்கானா? மேங்காமத்துக்கு, மல்லிகைத்தீவுக்கு, கொலனிக்கு என்று நாயாய்த் திரிந்து அவனவன் பாட்டைப் பார்த்துக் கொன்றான். சுவாமி காரியத்திற்குக் கொடுக்கத்தான் ஊரவனுக்கு மனமில்ல. இவங்களுக்கு ஏன் கோயில்? நீங்கள் மட்டும் கவலைப்பட்டு என்ன ஆகப் போறது? சாவியப் பிடியுங்க. என்னால இனி ஏதுமே செய்ய முடியாது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணாசலக்குருக்கள் சாவிக்கொத்தை நீட்டியவாறே பொரிந்து தள்ளினார். சாவிக் கொத்தை வண்ணக்கர் வாங்கிக் கொள்ளாவிட்டால் அவர் முகத்திலேயே அதைத் தூக்கி எறிந்து விடுபவரைப் போல ஆக்ரோஷத்தோடு பேசினார்.

வயிரமுத்தர் தயங்கினார். சாவிக்கொத்தை வாங்கிக் கொள்வதா? தன் தந்தையார், அவரின் தந்தையார், அதன் பிறகு இந்தத் தலைமுறையிற் தன்னிடம் கையளித்து விட்டுப் போன வினாயகரைப் பூசையின்றித் தவிக்க விடுவதா? ஐயோ!

நினைவின் கொடூரத்தை அவராற் தாங்கிக் கொள்ளமுடியவில்லை. கண்களில் நீர் முட்டிற்று. மேற்துண்டார் துடைத்தபடியே "சற்றுப் பொறுங்கள் ஐயா, சுவாமி கைங்கர்யம். ஊர் நல்லா நொடிச்சுப் போச்சு. வெள்ளைக்காரன் போனப்பிறகு கொலனி கொலனி என்று அரசாங்கம் காட்டையெல்லாம் வெட்டி அழிச்சுப் புதுசா உண்டாக்கின வயல்களுக்குத் தண்ணியத் திருப்பினதால புராதன ஊர் வெளியெல்லாம் பொட்டல் நிலமாப் போச்சு. மூணுவருஷமா இந்த ஊர் வெளிக்குத் தண்ணிவரல்ல. வினாயகப் பெருமானும் கண்திறக்கல்ல. இல்லாமப் போனா மாரி கூடப் பொய்க்குமா? எதுக்கும் காலம் இப்படியே இருக்கப் போறல்ல. எங்கட எம்பிக்கிட்டயும் சொல்லியிருக்கம். மேலைக்கு அல்லைக்குளத்தில தண்ணியத் தேக்கி ஊர் வெளிக்கு விடுவாங்களாம். அதுக்கிடையில நான் விக்காததவித்து வைக்காதத வைத்து உங்க வரியைத் தந்திருவன். பூசைய நிறுத்திராதிங்க ஐயா"

"நீங்கமட்டும் ஏன் ஊர் ஊர், கோயில்கோயில் என்று கஷ்டப் பட வேணும்? எல்லாருக்குந் தீர்ந்தது தானே கன்னங்குடாவானுக்கும் என்று சொல்லிப் போட்டு இருக்கிறது தானே. இப்ப காலம் மாறிப் போச்சு. மூதூரில தியேட்டர்ல வாற ஒரு புதுப்படத்தையும் ஊர் இளந்தாரிகள் விட்டு வைக்கிறதில்ல வண்ணக்கர். ஆனாச் சுவாமி காரியத்துக்குக் கொடுக்கமட்டும் கை நீளாது. நானும் மூணு போகத்திற்குப் பொறுத்துப் பாத்திற்றன். இனி என்னால ஏதுமே செய்ய முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களைக் கஷ்டப் படுத்தவும் விரும்பல்ல இந்தாங்க. சாவியப் பிடியுங்க"

அருணாசலக் குருக்கள் சாவிக் கொத்தை வண்ணக்கரின் கைகளிற் திணித்து விட்டு மேலே பேச்சுக்கு இடம் வைக்காதவராக அவ்விடத்தை விட்டுப் போய் விட்டார்.

அரை அடி நீளமான தலைவாயிற் சாவி, அதனிலும் சற்றே சிறிய மடைப்பள்ளிச்சாவி, இன்னும் சற்றுச் சிறியதான வேறு மூன்று சாவிகளையும் கொண்ட அந்தச் சாவிக் கொத்து, வண்ணக்கரின் கைகளில் ஊரின் பாவங்கள் எல்லாமே ஒன்று திரண்டு சேர்ந்து கொண்டதைப் போல ஒரே கனமாய்க் கனத்துக் கொண்டிருந்தது.

*** *** ***

அது வெது வெதுப்பும், இறுக்கமும் கொண்ட பங்குனி மாதத்துக் காலைப் பொழுது. ஊருக்குக் கிழக்கே உயர்ந்து நின்ற வினாயகர் ஆலயக் கோபுரத்திற்கு மேலே ஒட்டுண்ணியாக வளர்ந்த அரசங்கன்றுக்கும் மேலாகச் சூரியன் எழுந்து கொண்டிருந்தான். இன்னுஞ் சற்று நேரம் போனால் உச்சிப் பொழுது ஊரையே வறத்துக் கொட்டும். ஆனால் இப்போதே வண்ணக்கரின் நெஞ்சம் வாணலியில் வறுக்கப் படுவதாகத் துடித்தது!.

"மாணிக்க மள்ளிப் பிச்சை கொடுத்திடும் மாவலிகங்கை நாடெங்கள் நாடே" என்று இளவயதிலே மூதூர் வேதப்பள்ளிக் கூடத்து வேதநாயக வாத்தியார் அவருக்குச் சொல்லிக் கொடுத்த கவிதையடிகள் கூறும் தனது கொட்டியாபுரப்பற்றையிட்டு வண்ணக்கர் என்றைக்குமே பெருமைப்படுபவர். அதிலே உண்மையும் இருந்தது. மாவலியின் ஒருகரமான வெருகல் கங்கையின் செம்புலப் பெயல் நீர் அல்லைக்குளம் என்ற உள்ளங்கையில் நிறைந்து, வாய்க்கால்கள் என்ற விரல்களினூடே வழிந்தோடுகையில், சின்னி விரலாற் கொட்டிய நீரே ஊரைச் சுற்றியுள்ள வயல் வெளியைப் பாசனஞ் செய்யப்போதுமானதாக இருந்தது. அப்போதெல்லாம் ஊர் வெளியான பிரம்புவெளி முப்போகமும் விளையும் ஆடி அமாவாசைக்குக் கங்கையில் தீர்த்த மாடப்போகையில் கோடைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக அறுவடை முடிந்திருக்கும். பின்னர் புரட்டாசி மாதம் வெருகற் சித்திர வேலாயுதரிடம் போகையில் இரண்டாம் போகம் சீனட்டி விளைந்திருக்கும். அதன் பின்னர் இருக்கவே இருக்கிறது மாரிப்போகம்.

இப்போது அவையெல்லாம் பொய்யாய்ப் பழங்கதையாயப் போயின. புதிதாக வந்த சுதந்திர அரசு மாவலித்தேவியின் வெருகல்கங்கை என்ற மணிக்கரத்தை மணிக்கட்டுக்கு மேலே தறித்து விட, அல்லைக்குளம் என்ற உள்ளங்கை வற்றி வறண்டுவிட்டது. அதன் பின்னர் விரல்களாய வாய்க்கால் மூலம் தண்ணீர் பாயாததினால் ஊரே வரண்டு விட்டது. ஊரைச்சுற்றிக் கண்வைத்த தொலைவிற்குப் பரந்து கிடந்த வயல் வெளிவரண்டு கல்லாய்க், கரட்டியாய் வானத்து மழையை எதிர்பார்த்துக் கவந்தப்பசியோடு 'கமர்வெடித்து' வாய்பிளந்து நின்றபோது மாரியும் பொய்த்து விட்டது.

ஊரே சுடுகாடாகிவிட்டது!

முப்போக விளைச்சலில் நென்மணிகளாகக் குவிந்திருந்த முற்றத்துப் பட்டறைகள் எல்லாம், கிணற்று நீரை நம்பிய அவரைப் பந்தல்களாக மாறிவிட்டன. விவசாயம் என்ற பரம்பரைத் தொழில் 'மண்ணைக் கிளறி மண்கவ்வும்' சம்பிரதாயமாகிவிட்டது.

இந்நிலையிற் போகத்திற்குப் பத்து நாழி என்ற கோயில் வரியைக் கொடுக்க எவரிடமும் வக்கில்லை.

ஆனாலும் அருணாசலக் குருக்கள், ஊரில் முப்போகம் விளைந்து, போகத்துக்குப் பத்துநாழி கொடுத்த 'பொற்காலத்தில்' நிறையவே சம்பாதித்திருந்தார். அவருக்குக் கொட்டியாபுரப் பற்றிலே கொடுக்கல் வாங்கல் உண்டு. ஐந்து சதவட்டி, பத்து நாழி விவகாரத்தைப் பொருட்படுத்தாத வகையில் வாழவும் அவருக்கு வழிசெய்தது. அதற்கும் மேலால் ஊரின் வறுமையையும் தரித்திரத்தையும் தன் தலையிற் சுமந்து கொண்டு, பூபாரந்தாங்கிய ஆதிசேடனாய் ஊரையும் அதன் கௌரவத்தையும் விட்டுக் கொடுக்காத வண்ணம், ஊரவரிற் சுமத்தப்பட்ட வரியைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுப்பதற்கு வண்ணக்கரின் மனைவியும் பொன்காய்த்த மரமாய்த்தான் இருந்தாள், அந்தப் பொன் காய்த்த மரமும் மொட்டையாகி, இனிக் குன்றி மணி கூடப் பெயராது என்ற நிலையில் சாவிக்கொத்து வண்ணக்கரிடம் கொடுக்கப்பட்டுவிட்டது.

கோயில் பூட்டப்பட்டுவிட்டது. இனிமேற் 'கூறுசங்கு தோல் முரசு கொட்டோசை' கூட வினாயகரின் காதுகளில் விழாது.

கவலை, தரித்திரம் என்ற நியதிகளிற் சுழலும் ஊர் என்ற கிரகபாரத்தைச் சாவிக் கொத்தின் ரூபத்திற் சுமந்த வண்ணம் வண்ணக்கர் மெதுவாகத் தம் வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தார். கோயில் வாசலைத் தாண்டும் போது சாவிக்கொத்தை ஏந்திய கைகளைத் தலைமேற்கூப்பி "வினாயகா இந்த எளியவனை இன்னமும் சோதிக்கிறாயா? என்று கண்களில் நீர்வாரக் கேட்டார்.

ஆனால் வினாயகர் செவிகள்தான் மூன்று ஆண்டுகளாக அடைத்துக் கொண்டு விட்டதே.

வண்ணக்கர் மேலே நடந்தார். வினாயகர் அவர் உள்ளத்தைத் தீய்த்துக் கொண்டிருக்கையில் உச்சிப்பகலவன் அவர் உடலைத் தீய்த்துக் கொண்டிருந்தது.

வீட்டிலே அன்று வண்ணக்கர் சாப்பிடவில்லை. சாய்கதிரையிற் கிடந்த அவரை, அவர் பத்தினி "சாப்பிடுங்களேன்" என்று அழைத்த போது அவள் கழுத்திலே மஞ்சட்கயிற்றிலே தொங்கிக் கொண்டிருந்த தாலியை வண்ணக்கரின் கண்கள் பரிதாபத்தோடு பார்த்தன.

சாய்பொழுதாகியும் வண்ணக்கர் சாப்பிடவில்லை. கையிற் பிடித்திருந்த சாவிக்கொத்து அவர் மனைவிக்கு விஷயத்தை ஓரளவிற்கு விளக்கிற்று. அவள் கவன்று கொண்டிருக்கையில் வண்ணக்கர் எழுந்து நடந்தார்.!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரவருக்கும் விவகாரம் தெரிந்து எல்லோரும் கவலையோடும், பரபரப்போடும் 'கொம்புப் புளிய மரத்தின் கீழ்க்கூடினர். தாழக் கிளைபரப்பிக் கருங்காயும் செம்பழமுமாகக் குலுங்கி நின்றாலும் அப்புளியமரம் ஊரவரின் மதிப்பிற் சற்றுக் குறைந்தே இருந்தது. ஏனென்றால் அடை மழைக்கென்று ஒதுக்கப்பட்ட ஐப்பசியையும் தாண்டிக் கார்த்திகைப் பிறை சித்திரை நிலவாய் எறித்த போது ஊரவர்கள் பத்தினியம்மனைத் தியானித்து அம்மரத்தின் கீழ்தான் மழைக்காகக் கொம்பிழுத்தனர். அப்படியிழுத்தும் அந்த வருடம் மழை பெய்யவில்லை. இந்த நிலையிற் கொம்புப்புளி இருந்தென்ன? இல்லாவிட்டால் என்ன?

ஆயினும் அங்கே கூட்டம் கூடியிருந்தது.

இத்தனை நாளும் போகத்துக்குப் பத்து நாழி என்ற குருக்களின் வரியை வண்ணக்கர் மேற்சுமத்திவிட்டு நிர்ச்சலனமாக இருந்த ஊர்ப்பெரியார்கள் பலருக்குக் கோயில் பூட்டப்பட்ட செய்தி பேரிடியாகத்தான் இருந்தது.

"கோயில் பூட்டியாயிற்றா? அப்படியானால் கோயிலைத்திறந்து மறுபடியும் பூசை செய்வதாயின் முதலில் அபிஷேகம் பண்ண வேண்டியிருக்குமே. அதற்குக் கோணேசர் கோயிற்குருக்களோ, அல்லது யாழ்ப்பாணமிருந்து அவருக்கும் பெரிய குருக்களோ அல்லவா வர வேண்டும். ஆயிரம் ஆயிரமாகச் செலவாகும்" என்று எல்லாருமே அங்கலாய்த்தார்கள். தலை தலைமுறையாகச் சலம்பூவொடு தூபம் மறந்தறியாத உள்ளுணர்வு அவர்களுக்கு ஒரு பயங்கலந்த அருட்டுணர் வானது. ஆயினும் வெறுங்கையால் முழம்போட முடியுமா? வினாயகா! இது என்ன சோதனை?

பலர் கண்ணீர் விட்டனர்.

ஒரே குலம், ஒரே கோத்திரம் பேசும் ஊரின் ஐந்து குடிகளுக்கும் தனித்தனியே ஐஞ்நூறு ரூபாய் வரி விதிக்கப்பட்டது.

கூட்டம் கலைந்தது.

*** *** ***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமாதம் ஓடிவிட்டது.

அன்று சித்திரா பௌர்ணமி. வானத்துவட்டமதி தேய்த்து மினுக்கிவிட்ட வெள்ளித்தட்டைப்போலத் தன்முழுப்பிரமையோடும் வானவீதியிற் பவனி வந்து கொண்டிருந்தது. அமைதியாக இருந்த அந்த ஊரிலே ஒலிபெருக்கியிற் சுந்தராம்பாள் ஞானப்பழத்தைப் பிழிந்து கொண்டிருந்தாள்.

நிலாவுக்குப் போட்டியாகக் கோயில் வீதியெங்கும் பெட்ரோமக்ஸ் விளக்குகள்.

அவை சிந்தும் ஒளி வெள்ளத்திற் கடைகள். அவைகளிலே கண்ணாடி வளையல்கள், சீப்பு, சோப்பு, கண்ணாடி..........

வண்ணக்கர் பம்பரமாகச் சுழன்று கொண்டிருந்தார்.

அபிஷேகம் என்றாற் சும்மாவா?

நெய், பால், மாவிலை, மாஞ்சுள்ளி, முடித்தேங்காய் – அப்பப்பா! எத்தனை பொருட்களை அவர் தேடவேண்டும்?

ஆயினும் அவர் உள்ளத்திலே நிறைவு வினாயகருக்கு இனித் தினமும் பூசை நடக்கும் என்ற திருப்தி. அவர் உள்ளத்தின் உள்ளொளி அவர் முகத்தில் ஸ்பஷ்டமாகத் தெரிந்தது.

அபிஷேகச் செலவுகளுக்காக ஆட்டை விற்று, அருமையாய் வளர்த்த கன்றைவிற்று, மனைவியின் கைவளையல்களைவிற்று வரி கொடுத்த கிராமத்தவர் முகங்களிலும் ஒரு பொலிவு!

போகத்துக்குப் பத்து நாழி என்ற குருக்களின் வரியை எப்படிக் கொடுப்பார்களோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திர உச்சாடனம் பண்ணிக் கொண்டிருக்கும் கோணேசர் கோயிற் குருக்களுக்கு அருணாசலக் குருக்கள் பரிசாரகனாக உதவிக் கொண்டிருந்தார்.

பத்து வருடங்களாகத் தினமும் பூசை செய்து வந்த போது எனக்குக் கிடைக்காத தட்சணையும் தானங்களும் ஒருநாளைக்காக வந்தவர் கொண்டு போகப் போகிறாரே என்ற ஆதங்கம் அவருக்கு!

ஆனால் ஊரவர்களுக்கு ஒரு நிம்மதி! அபிஷேகம் நடக்கிறது. இனிமேல் வினாயகருக்குத் தினப் பூசைகள் நடைபெறும் என்று.

கோணேசர் கோயிற் குருக்களின் மந்திரோச்சாடனம் ஒலிபெருக் கியின் மூலம் காற்றிலே மிதந்து ஊரையே நிறைக்கிறது.

***சிந்தாமணி 19.11.66***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீதேவிக்காக.....!

அரைநாள் அருவி வெட்டை, ஏழு ஏக்கர் கூர்க்கண்டத்தில் முடித்து விட்டு, வாய்க்கால் வரிக்கனிற் குளித்துக் கரையேறிய போது பொழுது நன்றாகச் சரிந்து விட்டது. உடம்பைத் துவட்டியபடியே வாய்க்காற் திட்டிலே நடந்து முள்ளம்பன்றியின் முட்களாய்ச் சிலும்பி நிற்கும் வயல் வரவைகளூடே நடந்து இலுப்பை மரத்தடிக்கு எல்லோரும் வந்து விட்டார்கள்.

சந்தியிலே நின்று பார்த்தால் எதிரே கண்வைத்த தொலைவிற்குப் பரந்து கிடக்கும் வடிச்சற்சேனை வெட்டையில் சூடுகள் அங்கு மிங்குமாக வட்டமாக எழுந்து நிற்பது தெரிந்தது. காற்றே அசையாது இலையே ஆடாது, பிரபஞ்சமே இயக்கமின்றித் தரித்து நிற்பதுபோன்ற இறுக்கத்திலும் புதுவைக்கோலின் மணம் ஒரு புல்லரிப்பைக் கொடுத்துக் கொண்டிருந்தது. வயல் வெளியின் அந்தத்தே நிரைத்து நின்ற காட்டு மரங்களின் மேலே செக்கர் வானத்தின் ஒளி வண்ணத்தகிப்பில் இன்னும் வெட்டுப்படாது தரையிற் படுத்துக் கிடந்த நெற்கதிர்கள் பொற்குலைகளாக மின்னிக் கொண்டிருந்தன.

இரண்டு மூன்று மாதங்களாகச் சோம்பிக் கிடந்த அந்த இலுப்பையடிச்சந்தி இப்போது உயிர்த்துடிப்போடு கலகலத்தது. தேநீர்க்கடைப் பித்தளைக்குவளைகளிற் கரண்டி அடிபடும் சப்தம் இடைவிடாத தாளவாத்யக் கச்சேரியாய்க் கேட்டுக் கொண்டிருந்தது.

மயிலாப் போடியின் 'பாட்டி'யிலுள்ளவர்கள் எல்லோரும் தேனீர்க் கடைக்கச் சென்று ரீ குடித்துவிட்டு பீடியும் பற்றவைத்துக் கொண்டார்கள். இரு இளைஞர்கள் பிறிஸ்ரல் சிகரெட் வாங்கினார்கள். கடைக்கொப்பியில் அவர்களின் கணக்கு ஏறிக்கொண்டது.

மயிலாப்போடி மட்டும் மேற்குப் பக்கமாகக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தார். மேற்கே வானச் சரிவில் நடை பெற்றுக் கொண்டிருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரசவாத வித்தையை ரசித்துக் கொண்டிருக்க மயிலாப்போடி கவிஞனோ சைத்ரீகனோ அல்ல. அப்படியிருப்பினும் ஏகாக்கிரக சிந்தையோடு அதை ரசித்திருக்கவும் முடியாது. ஏனென்றாற் படைபதைக்கும் பங்குனி வெய்யிலின் புழுக்கத்தோடு புது வைக்கோற் சுணையும் சேர்ந்ததினால் உடம்பெல்லாம் அழுத்திப் பூசாத சீமெந்துத்தளம் போல வெயர்க்குருக்கள் படர்ந்து அரிப்பெடுத்துக் கொண்டிருந்தது அவருக்கு, உடம்பில் அங்கு மிங்குமாகச் சொறிந்து கொண்டே அவர் மேற்கே பார்த்துக் கொண்டு தானிருந்தார்.

தம்பி லெவ்வைப்போடியார் வந்தே விட்டார். இலுப்பை மரச்சந்தியடியிலே அவசர அவசரமாகச் சைக்கிளை விட்டிறங்கிய அவர் "ராவைக்கே சூடு போடலாம் எண்டு மெஷினுக்கு ஒடித்திரிஞ்சதிலே சுணங்கீற்றன்." என்று தன் காலதாமதத்திற்கு மன்னிப்புக் கோருபவராகச் சட்டையின் உட்புறப்பையிற் கையைவிட்டுக் காசை எடுத்து எண்ணி மயிலாப் போடியிடம் கொடுத்தார்.

பசை முறியாத பதினைந்து நூறு ரூபா நோட்டுக்கள்!

புதுவைக்கோலின் மணத்தையும் மீறிக் கொண்டு மூக்கிலடித்தது அந்நோட்டுக்களின் மணம்.

என்ன இருந்தாலும் தம்பி லெவ்வைப் போடியோக்கியன்தான். பேசினபேச்சுக்கு மாற்றமேயில்லை.

மயிலாப்போடி காசை வாங்கிக் கொண்டார் அவருடைய 'பாட்டி'யிலே அவரையும் சேர்த்துப் பதினாங்கு பேர். ஆளுக்கு ஒரு நூறு ரூபா நோட்டைக் கொடுத்து அடுத்த நோட்டைச் சில்லறையாக்கி ஆளுக்கு ஏழேழு ரூபா கொடுத்தாற் தன் பங்கிற்கு ஒன்பது ரூபா கிடைக்கும் என்று எண்ணிக் கொண்டிருக்கையிற் பாட்டியிலுள்ள அனைவரும் அவரைச் சூழ்ந்து கொண்டனர்.

*** *** ***

'தமிழுக்கு' மாசி பிறந்து சிவராத்திரியும் கழிந்தபோது வடிச்சற் சேனையிலும், அயலிலுள்ள பெரிய வெளியிலும் காலபோக அறுவடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பமாகிவிட்டது. பல ஆண்டுகளுக்குப் பின்னர் இந்த ஆண்டு மழைசீராகப் பெய்ததினால் எதிரே கண் வைத்த தொலைவிற்குப் பரந்து கிடக்கும் நீர்ப்பாய்ச்சற் காணிகள் மட்டுமல்ல இடைக்கிடை தென்னை மரங்களும் குடிசைகளுமாகத் தோன்றும் ஊர்த்திட்டின் 'மானம் பார்த்த' பூமிகளும் இம்முறை பொன் கொழித்திருந்தன. ஆனால் விளைந்ததை வெட்டியெடுப்பதற்குக் கூலியாட்கள் கிடைக்கவில்லை. அருவி வெட்டுக் காலங்களில் இவ்வூருக்குப் படையெடுத்து வரும் துறை நீலாவணை யாரை இம்முறை காணவில்லை. மகாவலித் தண்ணீர் கந்தளாய்க் குளத்திற்கும் திருப்பப்பட்டபின்னர் கடந்த இரண்டு வருடங்களாகக் கிண்ணியாக்காரர் எவருமே இந்தப்பக்கம் தலைவைத்தும் படுக்கவில்லை, ஏக்கர் இருநூற்றைம்பது ரூபா என்று 'றேற்' பேசி தம்பி லெவ்வைப் போடியாரின் ஆறு ஏக்கர் வேளாண்மையையும் வெட்டி இன்று காலையிற்தான் சூடு குவித்தார்கள், மதியந்திரும்பியதும் ஏழு ஏக்கர்க் கூர்க்கண்டத்தில் அரைநாள் வெட்டு வெட்டி ஆரம்பித்து வைத்தார்கள். காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ள வேண்டுமல்லவா?

*** *** ***

காசைக் கையில் வாங்கிக் கொண்ட மயிலாப்போடி தலைக்கு ஒவ்வொரு நோட்டாகக் கொடுத்து விட்டுத் தானும் ஒரு நோட்டை எடுத்து தலைப்பாகையாகச் சுற்றியிருந்த மருதமுனைத் துவாய்தலைப்பில் முடிந்து மீண்டும் தலையைச் சுற்றிக் கட்டிக் கொண்டார். கையில் இருந்த அடுத்த நோட்டைச் சில்லறையாக மாற்ற வேண்டும்.

எங்கே மாற்றுவது? என்று அவர் யோசித்துக் கொண்டிருக் கையில் புற்றுக்குள்ளிருந்து எட்டிப் பார்க்கும் பாம்பு போலச் சின்னையா கிராம முன்னேற்றச் சங்கக் கட்டிடத்திலிருந்து எட்டிப்பார்த்தார்.

"அண்ணனிட்டச் சில்லறை இருக்குமே. இந்த நூத்தையும் மாத்திற் தாங்கவன்" என்றார் மயிலாப் போடி சின்னையாவிடம்.

"இப்ப சில்லறைக்குத்தானே பஞ்சம். உண்ணாண என்னட்டயும் பெரிய தாளாத்தான் இருக்கு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏனண்ண உங்களிட்டச் சரக்கில்லையா? அலுப்பாவும் கிடக்கு" என்றான் பாட்டியில் ஒருவனான கோணாமலை.

"இரண்டே ரெண்டு தான் கிடக்கு" என்று சின்னையா சொல்லி முடிக்கு முன்னர், கோணாமலை மயிலாப்போடியின் கையிலிருந்த நோட்டை வெடுக்கென்று இழுத்துச் சின்னையா அண்ணனிடம் கொடுத்து "இரண்டையும் தாருங்க" என்றான்.

காசைப் பெற்றுக் கொண்ட சின்னையா வேலியைத்தாண்டி வாழைத்தோட்டப் பக்கமாக நடந்தார்.

வெட்டுக்காரர் எல்லோருமே அவர் பின்னால் நடந்தனர். மயிலாப் போடியும் கோணாமலையின் செய்கையை ஆட்சேபிக்காதவராக அவர் பின்னால் நடந்தார்.

ஆறேழு குட்டிகளோடு மதாளித்து நின்ற சிங்கப்பூர்க்கதலி வாழையடிக்குள்ளிருந்து இரண்டு போத்தல்களையெடுத்துக் கோணாமலையிடம் கொடுத்த சின்னையா கிளாசையும் நீட்டியபடியே "இன்னமும் முப்பது ரூபா மிச்சமிருக்குது தம்பி" என்றார்.

"இதென்ன அண்ணன் ரெண்டும் எழுபது ரூபாயா? என்று கேட்டான் கோணாமலை.

"பின்னென்னதம்பி. மூதூரில தவறணை இருக்கக்க நான் பத்தொன்பதுக்கு வாங்கி உங்களுக்கு இருபத்திநாலு இருபத்தைஞ்சுக்குத் தந்தனான் தானே. எலக்ஷனோட அறுவான்கள் மூதூர்த் தவறணையையும் மூடிவிட்டாங்க. இப்ப மலயில இருந்தல்லோ சரக்கு வரவேணும். மூதூர் ஜெற்றியிலேயே சோடி ஐம்பத்தஞ்சுக்கு விற்கிறாங்க. அங்கவாங்கிக் கொடுக்க வேண்டியவனுக்கெல்லாம் தாரவார்த்து பிறகு எனக்கும் நாலு ரூபாக்காசு மிஞ்சும். மாசத்துக்கு ஒரு வழக்கும் பொலிசுக்குக் குடுக்க வேணும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னையாவின் விளக்கத்தை எல்லாரும் ஏற்றுக் கொண்டார்கள் போலத் தோன்றிற்று.

கோணாமலை போத்தலைக் குலுக்கிப் பார்த்தான். கழுத்தடியிற் தரித்து நின்ற திரவத்தின் மேற்பரப்பு நுரைக்காததினாற் திருப்தியடைந்து, அதன் கழுத்திலிருந்த மூடியைத் திருகிக் கழற்றினான்.

"என்ர சாமானில பிழை சொல்ல மாட்டீங்க தம்பி" என்றார் சின்னையா.

சொல்லி வைத்தாற் போல ஏழுபேரோடு முதலாவது போத்தல் முடிந்தது. கோணாமலை பாகப்பிரிவினை செய்வதில் வலுசூரன். அவன் அளந்து ஊற்றிக் கொடுத்தான் என்றால் எவருக்கும் ஒரு துள்ளி கூடவும் மாட்டாது. குறையவும் மாட்டாது.

கோணாமலை அடுத்த போத்தலையுந் திறந்தான்.

தன்பங்கைக்குடித்த பத்தக்குட்டி முகத்தை அஷ்ட வக்கிரமாக மாற்றிக் கொண்டு "கலந்து தான் இருக்கு" என்று விமர்சித்தான்.

"கலந்தால் நுரைக்குமே" என்றான் கோணாமலை "நுரைக்காம இருக்கிறதுக்கு மருந்து கண்டு பிடிச்சிற்றாங்க, ஒண்டில காப்போத்தல் தண்ணியக் கலந்து விட்டு நாலஞ்சு சொட்டு ஸ்பிறிற் கலந்தா நுரைக்காதாம்" என்றான் பத்தக்குட்டி.

இந்தச் சம்பாஷனை நடைபெற்றுக் கொண்டிருக்கையிலேயே இரண்டாவது போத்தலும் காலியாகிக் கொண்டிருந்தது. தங்கள் காசும் சேர்ந்து வாங்கிய சரக்கல்லவா. தங்களுக்குப் பங்கில்லாமற் போய் விடுமோ என்று தயங்கிய "பிறிஸ்ரல்" இளைஞர்கள் இருவரும் வாழைமரமறைவில் நின்று பல்லிற்கூடப்படாமற் சரக்கை அண்ணாந்து ஊற்றிக் கொண்டார்கள். ஊற்றிக் கொண்டதும் குமாரவேல் சொன்னான் "மச்சான் சைக்கிளை எடுத்திற்றுவா. மூதூருக்குப் போவம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஓம் மச்சான் மூணு முடிச்சு படம் ஓடுது. ரஜனிகாந்த், என்ன சோக்காச் சிகரெட்டை மேலே எறிஞ்சி உதட்டால பிடிக்கிறான்” என்றான் அடுத்தவனான செல்லன்.

“படத்துக்குப் போக முன்ன கடையில பொலிஸ்ரர் சேட் ஒண்ணு வாங்க வேணும்” என்றான் குமாரவேல்

“ஆமாம் சேட்டும் வாங்கிப் படமும் பாத்திட்டு ‘நொக்ஸில’ கொத்து ரொட்டியும் தின்னக்காசு காணும் மச்சான்” என்றான் செல்லன்.

பத்தக்குட்டி சின்னையா அண்ணனிடம் கேட்டான். “மிச்சம் இருக்குது தானே. அடுத்ததையும் தாங்க. எறும்பு கடிச்சாப் போலயும் இல்ல”

“ஓமோம் என்னட்டச் சில்லறையும் இல்ல. ஒண்ணுதந்தா இன்னமும் ஐந்து ரூபா எனக்கு வருமதியிருக்கே” என்று சொல்லிக் கொண்டு மூன்றாவது போத்தலையும் நீட்டினார் செல்லையா.

“ஐஞ்சு ரூபாயும் மண்ணாங்கட்டியும்” என்றவாறே கோணாமலை அதனையும் திறந்து பங்குவைத்தான். கணத்தில் அதுவும் காலி.

*** *** ***

எல்லாரும் எழுந்து நடக்கத் தொடங்கினார்கள். தெருவில் ஏறியதும் தேனீர்க் கடையிற் சிலர் தரித்தார்கள். பாடசாலை செல்லும் ஒழுங்கையிற் சிலர் பிரிந்தார்கள்.

எதிரே குமரன்ஸ்ரோர் என்ற பலசரக்குக் கடையின் பெற்றோமக்ஸ் வெளிச்சத்தில் சந்தைக் கூட்டம், அந்தக் கடையிற் பத்தக் குட்டியும் கோணாமலையும் தரித்தனர். கிராமசபையின் விளையாட்டு மைதானத்துக் குப் போகும் ஒழுங்கையில் எஞ்சியவர்கள் பிரிந்து சென்று விட்டார்கள். மயிலாப்போடி மட்டும் தனித்து நடந்தார். அவரது வீடு மணற்சேனைக் கிராமத்தின் அந்தத்தில் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயிலாப்போடியின் பூர்வீகம் மணற்சேனையோ பெரிய வெளியோ அல்ல. யப்பான்காரன் திருக்கோணமலையிற் குண்டுபோட்ட அந்த நாளிலே மலையாக மண் குவிக்கப்பட்ட கழுதாவளை வெற்றிலைக்காலைகளுக்குத் தூரவிலிருந்து குடம் குடமாக நீர் சுமந்து ஊற்றும் "கக்கிசத்தைப்" பொறுக்க மாட்டாமல் தன் பதினான்காம் வயதிலேயே தன் ஊரைவிட்டுத் தந்தையாருக்கும் தெரியாமல் வெளியேறினவர்தான் மயிலாப்போடி. எப்படியோ பெரிய வெளியைத் தன் இருப்பிடமாக்கிக் கொண்டார்.

சேற்றிலே எறிந்த நெல்முளைகளைக் குடிக்கவரும் சில்லுத்தாராக் களை விரட்டியும், பிஞ்சுக்கதிர்களிலே பாலாயிருக்கும் அன்னத்தை பாட்டம் பாட்டமாக விழுந்து குடிக்க வரும் தினையான் குருவிகளை ஓட்டியும், அருவி வெட்டியும், சூடுமிதித்தும் வாரக்காரனா இருந்தும் எப்படி எப்படியோ காலத்தை ஓட்டிய மயிலாப் போடி, குடும்பகாரனாகித்தனக்கென ஒரு சேனைக்காட்டையும் மணற்சேனையிலே வெட்டிக் கொண்டார்.

இப்போது அவரது சேனைக்காடு தென்னையும் பலாவும் மாவுமாக 'வளவு' என்ற அந்தஸ்தைப் பெற்றுவிட்டது! மயிலாப்போடி தன் வளவை நோக்கி நடந்து கொண்டேயிருந்தார். ஐம்பதுக்கு மேலாகிவிட்டாலும் இன்னமும் வைரம் பாய்ந்த உடம்புதான் அவருக்கு. உள்ளே புகுந்த சின்னையாவின் சரக்கு வேறு, உற்சாகத்தைக் கொடுத்துக் கொண்டி ருந்தது. அந்தச் சுள்ளாப்பில் சடைத்துக் கவிந்திருந்த இலுப்பை மரக் கிளைகளூடே பீறிட்டுப் பாயும் ஏழாம் பிறைச் சந்திரனின் மங்கிய ஒளியில் அவர் நடந்து கொண்டேயிருந்தார். நெல் ஏற்றிச் செல்லும் மாட்டு வண்டிகளின் கடமுடப்போ தூரத்தே களத்து மேடுகளிற் சூடு மிதித்துக் கொண்டிருக்கும் உழவு இயந்திரங்களின் கர்ணகடூரமான சப்தமோ அவ ருக்குக் கேட்காததைப் போல அவர் நடந்து கொண்டேயிருந்தார். நடந்து கொண்டிருக்கையில் தலைப்பாகையின் ஓரத்தே முடிந்து வைக்கப்பட்டி ருந்த காசைத் தொட்டுப் பார்த்துக் கொண்டார்.

காசுபத்திரமாகத்தான் இருந்தது. ஆனாலும் அது எரிச்சலைத் தான் கொடுத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்காதா பின்னே.

ஐந்து ஆண்டுகளின் முன்னே அவர் ஒரு குத்தகைக் கமக்காரன். விளைந்த பின் 'ஆயம்' கொடுப்பதற்குத் திருக்கோணமலை யானின் வயலைச் சேறாக்கவும் பரம்படிக்கவும் சேனையூரானின் கடாக்கள்! வட்டிக்கு வாங்கிய விதை நெல்! தன் உடலுழைப்பு. இவைகள் தான் அவரது மூலதனங்கள் நீரைக்கண்டதும் சர்க்கரையாகக் குழையும் வடிச்சற் சேனைவயல் வான் பொய்ப்பினும் தான் பொய்யா மாவலியின் பாய்ச்சலில் பொன்னாவே விளைந்தது. வயல் 'ஆயம்', மாட்டு 'விசக்களை', வெட்டுக் கூலி, சூடடிப்புக் கூலி என்று எல்லாவற்றையும் நெல்லாகவே அளந்தபின் அவருக்கும் மூன்று நான்கு அவணம் நெல்லும் 'கந்து முறி' 'பதக்கடை'யும் மிஞ்சும் அதைக் கொண்டு வந்து வீட்டிலே வைத்துக் கொண்டால், வளவுத் தென்னையிலே காயும், வரிக்கனிலே மீனும், வாழையிலே குலையும் இருப்பதாற் சோற்றுக்கவலையே கிடையாது.

ஆனால் இப்போது?

வயல் ஆயமாக முற்பணம், உழவுயந்திரக்கூலி, விதை நெல், புல்லெண்ணெய், சீமைப்பசளை, வெட்டுக்கூலி, சூடடிகூலி எல்லாவற்றிற் குமே காசு! முற்பணமாகவே தேவைப்படுகிறது.

ஆம் காசு! காசு! காசு! வேளாண்மைச் செய்கை என்பது தன்னைப்போன்ற விவசாயியின் தொழிலாக இல்லாமல் வங்கியிலே காசை முடக்கி வைத்திருக்கும் முதலாளியின் வியாபாரமாக மாறிவிட்டதனால் அவரது கமக்காரத்தனம் ஐந்து ஆண்டுகளின் முன்னே செத்துப் போயிற்று.

வடிச்சற்சேனை வயல் வெட்டையைத் தவிரத் தன் சீவனோ பாயத்திற்கு எந்தப்பகைப் புலத்தையும் கண்டிராத மயிலாப்போடி, அன்றிலி ருந்து வயற்கூலியாக மாறினார். ஆனாலும் அருவி வெட்டுக்காலத்தில் அருவி வெட்டியும் சூடடித்தும் போகத்திற்கு இரண்டவணம் சேர்த்தே விடுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டினுள்ளே நெல்லிருந்த அந்தக் காலத்திற் பாட்டென்ன? கூத்தென்ன? மயிலாப்போடி மணற்சேனை இளைஞர்களுக்குத் தனக்குத் தெரிந்த வசந்தன் கோலாட்டத்தைப் பழக்கியதை நினைவு கூர்ந்தவராக வசந்தன் பாட்டை வாய்விட்டுப் பாடினார்.

திங்களொடு கங்கையம்மாள்
பொங்கு சடை மேலுறையும்
தேவாதி தேவரென்று
கூவாய் குயிலே

பாட்டு முடிந்த போது பெருமூச்சு வெளிவந்தது.

சென்ற ஆண்டிலிருந்து அந்த வழியிலும் மண்விழுந்தது. பணம் படைத்தவர்களின் வியாபாரமாக வேளாண்மைச் செய்கை மாறிவிட்ட பிறகு, அருவி வெட்டவும் காசே கூலியாகக் கொடுக்கப்பட்டது.

காசு! நாய் தின்னாக்காசு! என்று அலுத்துக் கொண்ட மயிலாப்போடி வேளாண்மை வெட்டு முடிந்ததும், கூலிக்கட்டை அடித்துச் சந்தன நிறத்துப் புது நெல்லை மூட்டைகட்டித் தோளிற் சுமந்து வீட்டுக்குக் கொண்டுபோன நாட்களைக் கற்பனை பண்ணிப் பார்த்தார். அவருக்கு வந்த ஆத்திரத்திற் தலைப்பாகையில் முடிந்து வைத்திருக்கும் நோட்டை எடுத்து வீசி எறிய வேண்டும் போல இருந்தது.

மயிலாப்போடி மூன்று வருடங்களுக்கு முன்னே நடந்த வேளாண்மை வெட்டை எண்ணிப்பார்த்தார்.

கதிரின் தலைப்பு நெல் பழுக்கத்தொடங்கி ஒவ்வொரு மணியாய் அடி நெல் பழுக்கும் வரை அவதானித்துக் கொண்டிருக்கும் கமக்காரன் நல்ல நேரம் பார்த்துத் தானே கத்தியை வீசி விடுவான். வெட்டியதை அடித்து நெல்லை வீட்டுக்குக் கொண்டு வந்து குற்றி அரிசியாக்கியதும் வயலிலே வெட்டுக் காரரை இறக்கிவிடுவான்.

வெட்டு முடிந்து மதியம் கரையேறியதும் புது அரிசியைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானே சமைத்துத் துடிக்கத் துடிக்க வெட்டிய பனையான் மீன் குழம்போடும், புளியாணத்தோடும் வெட்டுக்காரருக்குப் படைப்பதிற்தான் அவனுக்கு எவ்வளவு திருப்தி! அன்போடு பரிமாறப்பட்ட அச்சோற்றை ஒரு வெட்டு வெட்டிவிட்டு ஒருவாய் வெற்றிலையும் போட்டுக் கொண்டு மீண்டும் வெளியில் இறங்கினால் பொழுது ஒரு பாகம் இருக்கையில் ஒரு 'அலவரை'யை வெட்டிவிடலாம். இரண்டு நாள் வெட்டி, மூன்றாம் நாள் கட்டிச் சூடு வைத்தாற் தலைக்கு ஐந்து கட்டாவது கூலிவரும்.

வெட்டிக் கொண்டு போகையிலேயே நல்ல விளைச்சல் உள்ள 'வரவை'யிலே தலையை மட்டும் கொய்து போட்டு விட்டுக் கட்டும் போது அந்த 'வரவை'யிலே இரண்டு கைகள் கொள்ளமட்டும் உப் பட்டியை அள்ளிக் கட்டினாற் கூலிக்கட்டுக்குப் பன்னிரண்டு நாழியாவது தேறும்.

ஆனால் இப்போது?

சீதேவி விளையிற இடத்தில சோறே சமைப்பதில்லை. மதியத்துக்குப் பொலித்தீன் பேப்பரிலே சுத்தின கடைச்சோற்றுப் பார்சல் வரும். அதில் உப்பும் இல்லை புளியும் இல்லை.

அன்று மத்தியானம் சாப்பிட்ட சோற்றுப்பார்சலை நினைந்து அருவருத்துக் கொண்டே மயிலாப்போடி தெருப்படலையைத் திறந்து உள்ளே சென்றார். தென்னங்கன்றினடியிற் படுத்திருந்த நாய் வாலைக் குழைத்துக் கொண்டு வந்தது. சாணமிட்டு மெழுகிய மண்திண்ணை யிலே அவர் மனைவி கைவிளக்கை வைத்துக் கொண்டு அவருக்காகக் காத்திருந்தாள்.

தலைப்பாகையைக் கழற்றி முடிச்சை அவிழ்த்த மயிலாப்போடி நூறு ரூபா நோட்டை எடுத்து அவள் முன்னால் அலட்சியமாக வீசி எறிந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏனப்பா சீதேவியை எறியிறீங்க?"

"நல்ல சீதேவியக் கண்டிற்றா, இந்த வயல் வெளியெல்லாம் வெளஞ்சும் ஒரு சுண்டு நெல்ல வீட்டுக்குக் கொண்டு வர முடியல்ல. இவ சீதேவியக் கண்டிற்றா." என்று எரிந்து விழுந்த மயிலாப்போடி "மகள் சோத்தப் போடுபுள்ள. பசிக்குது" என்று அடுக்களைப்பக்கமாக நடந்தார்.

"கடந்த பத்து நாட்டகளாகக் குணமக்காட்ட வாங்கிய அரிசிக்காசு, பெட்டிக்காரத் தோப்பூரானிட்ட வாங்கிய மீன்காசு, சிங்களவன்ர கடயில பட்ட சில்லறைக்கடன், எல்லாம் குடுத்தாக் கையில என்னமிஞ்சப் போவுது" என்று எண்ணிக் கொண்ட திருமதி மயிலாப்போடி பார்வதிப்பிள்ளை "என்ன இருந்தாலும் வீட்டுக்க நெல் இருக்கிறதப் போல வருமா? அந்தச் சீதேவி இருந்தா எல்லாம் இருக்கும், அவர் சொல்றதில என்ன பிழை" என்று முணுமுணுத்தாள்.

அவள் முன்னால் நூறு ரூபா நோட்டு விளக்கொளியிற் பல்லிளித்துக் கொண்டு விரிந்து கிடந்தது.

**வீரகேசரி *19.11.78***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் ஆமைக்கதை

கடல் குமுறிக் கொண்டிருந்தது. ஆழக்கடலிலே அலைகள் ஒன்றன்பின் ஒன்றாக மலைபோல் எழுந்தன. ஒன்றை ஒன்று துரத்திக் கொண்டு வந்த பேரலைகள் நுங்கும் நுரையுமாய் விரிந்து படீர் படீர் என்ற பேரிரைச்சலுடன் கரையில் மோதின. மோதிப்பின்வாங்கின. அவை கரையில் மோதுகையில் பேரலைகள் சில அணைகட்டி நின்ற மணற்றிட்டைக் கடந்து அடம்பன் கொடிகளை நீராட்டின. புங்கை மரவேர்களைக் கழுவின. வாடையூதலில் ஹோவென்ற இரைச்சல்.

காட்டிலும் கரம்பிலும் பெய்த மழை நீரையெல்லாம் தன்னுள் ஏற்றுக் கரைபுரண்டு வந்த மாவலிகங்கை கடலில் நெடுந்தூரத்திற்குத் தன் செம்புலப் பெயல் நீரைக் கொட்டி கொட்டியாபுரக் குடாக்கடலின் நிறத்தையே கழுநீர்ச் செம்மையாக்கிக் கொண்டிருந்தது. அவள் அள்ளிக் கொண்டுவந்த காட்டுத் தடிகளும் கொம்புகளும் கடலில் நெடுந்தூரம் வரை சென்று அலைகளில் ஏற்றுண்டு மீண்டும் கரையிலே எற்றப்பட்டன. வேறு எங்கெங்கோ இருந்து கடலிலே மிதந்துவந்த புன்னைக்காய்கள், சில்லுக்கொட்டைகள், கப்பல்களிலிருந்து வீசி எறியப்பட்ட கழிவுகளான 'கடல்படுதிரவியங்களை' எல்லாம் அள்ளி இறைத்துக் கொண்டு கடல் குமுறியடித்தது.

கூம்பிய மலர்கள் அவிழ்வது போலக் காலை மலர்ந்து கொண்டிருக்கையில் மார்த்தா கடல் கொண்டு வந்து கொட்டும் அத்'திரவியங்களை'யெல்லாம் சேகரிப்பதற்காக கடற்கரையோரமாக நடந்து கொண்டிருந்தாள். கடந்த இரண்டு மாதங்களாக அவளுக்கு இது நாளாந்தத் தொழில், பல்வேறு வண்ணத்திலும் வடிவத்திலும் அமைந்த மேனாட்டு வெற்றுச் சாராயப் போத்தல்கள், றப்பர் பொம்மைகள், பந்துகள் என்பன ஓரோர் வேளை அவளுக்குக் கிடைத்திருக்கின்றன. ஆனால் வீட்டில் எரிப்பதற்கு ஒவ்வொருநாளும் விறகு தவறாமற் கிடைத்துவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்காகத்தான் இன்றும் ஜனசஞ்சாரமற்ற கடற்கரையோரமாக அவள் நடந்து கொண்டிருக்கிறாள்.

இரவெல்லாம் மழை கொட்டி விடியற்காலையிற்தான் ஓய்ந் திருந்தது. சேறும் சகதியுமாகிவிட்ட ஊருக்குள்ளே படுக்க முடியாத கட்டாக்காலிகள் கடற்கரையின் வெண்மணலிற் படுத்துக் கொண்டு காலை இளவெய்யிலைச் சுகித்தபடியிருந்தன. தன் குடிசையிலிருந்து ஒரு கூப்பிடுதூரம் வரை வந்துவிட்ட மார்த்தா திரும்பித் தன் குடிசையை நோக்கி வந்து கொண்டிருந்தாள். மேற்கே அடிவானத்தில் வானவில் கவிந்திருந்தது. சலப்பிரளயத்தினால் உலகை அழிக்கமாட்டேன் என்று கடவுள் நோவாவிற்குக் காட்டிய அடையாளந்தானே இந்த வானவில். இனிமேற் சில நாட்களுக்கு மழையிராது.

மழையைக் கொட்டித் தீர்த்துப் பஞ்சுப் பொதிபோல இலகுவாகி விட்ட வெண்மேகக் கூட்டங்களைக் கலைத்துக் கொண்டு 'குன்னா வாடை' வீசிக் கொண்டிருந்தது.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் தென்மேற் காற்று வீசியபோது இந்தக் கடற்கரை சந்தைக்கடைபோலச் சனக்கும்பலாகத்தான் காணப் பட்டது. 'அம்பா'ப்பாடிக் கொண்டு கரைவலை இழுக்கும் மீனவர்கள், இழுத்துக் கரையிலே கொட்டிய மீன் குவியல்களிலிருந்து, மீனைத் தரம்பிரிக்கும் வலைஞர்கள் புங்கைமரத்தின் கீழே தங்கள் துவிச்சக்கர வண்டிகளை நிறுத்திவிட்டு அவ்வலைஞரிடம் மீன் விலை பேசும் சில்லறை வியாபாரிகள், தெருவில் மோட்டார் லொறியை நிறுத்திவிட்டு வந்திருக்கும் மொத்த வியாபாரிகள், கம்பில் உயர்த்திக் கட்டப்பட்ட, பழைய வலைகளின் கீழே வெண்மணலிற் காய்ந்து கொண்டிருக்கும் நெத்தலி மீன்களைக் காவல்காக்கும் பரத்தியர்கள், கரையில் நின்று நெற்றியிற் கையைவிரித்து வைத்துக் கொண்டு கடலின் ஆழத்தே மீன்களின் நடமாட்டத்தை நோட்டமிடும் சம்மாட்டிகள், குடாக்கடலில் அங்குமிங்கும் ஓடிக்கொண்டி ருக்கும் வள்ளங்கள்......சிறு தோணிகள்.........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைக்கும் அப்படித்தான்!

மார்த்தா கடற்கரையில் அமைந்துள்ள புனித பேதுருவின் ஆலயத்துக்கு முன்னால் அமர்ந்து கொண்டு உச்சி வெய்யிலிற் காய்ந்து கொண்டிருந்த நெத்தலி மீன்களைக் காவல் காத்துக் கொண்டிருந்தாள். ஒரு 'கம்பான்' போகும் தூரத்தில், கரையில் இழுத்துக் கொட்டப்பட்ட மீன்களைத் தரம்பிரிக்கும் கூட்டத்தில் அவள்தாயும் இன்னும் பலரும்.......

அப்போது தான் தூரத்தே நிழல் கவித்து நின்ற தென்னை மரங்களினூடாக உறுமிக்கொண்டு ஓடிவந்து, வெண்மணலை அனாயாச மாகத் தாண்டி, அடம்பன் கொடிகளை நசித்துக் கொண்டு அந்த ஜீப் அவள் முன்னே வந்து நின்றது.

ஜீப்பிலிருந்து அவன் இறங்கினான்.

தன் மடியில் எற்றப்பட்ட வலைகளின் பாரத்தில் அமுங்கினாலும் அதனைக் காட்டிக் கொள்ளாது திடாரித்து நிமிர்ந்து நிற்கும் போர்க் குதிரைபோன்ற தோணியின் முன் அணியம் போன்ற எடுப்பான தோற்றம், நைலோன் வலைகளுக்குத் தீற்றும் செஞ்சாயம் போன்ற நிறம், வெளியே துருத்திக் கொண்டு நிற்கும் கீல் பூசிய 'கலப்பத்துப்பிரி' போன்ற மீசை. பைந்தி மீனின் சடலத்தில் செம்மையும் கருமையுமான புள்ளிகளாய்ப் பளிச்சிடும் பளபளத்த மேற்சட்டை.

மார்த்தா வைத்த கண் வாங்காமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவளை நெருங்கி அவன் கேட்டான்

"சைமன் ஐயாட வாடி எங்கின இருக்கிய?"

"இங்கின கரைக்கு வருகிய வலை அவரோடது தான்" மார்த்தா நாணியபடி இடுப்புக் கம்பாயத்திற்கு மேலிருந்த மார்புச் சட்டையைக் கீழ் நோக்கி இழுத்துக் கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அது நான் கேக்கிய இல்ல. வாடி எங்கின எண்டுதான் கேக்கிய" என்றுவிட்டு அவன் மெதுவாகச் சிரித்தான்.

மார்த்தா தலையைக் குனிந்த படியே, தன் வலக்கையை நீட்டி "இந்த லெக்கில கடசி வாடி அவரோடதுதான்" என்றாள்.

அவன் மீண்டும் கலக்குச் சுறாவின் கூம்பிய தலையாய் மேற்சட்டைக்குள்ளிருந்து திமிறும் அவள் மார்பகங்களைத் தன் கண்களாற் "கற்பழித்து" விட்டு ஜீப்பில் ஏறிக்கொண்டான். படம்புதையும் மணலிலே அடம்பன் கொடிகளை அனாயாசமாகத் துவைத்துக் கொண்டு அந்த ஜீப் செல்வதை மார்த்தா பார்த்துக் கொண்டிருந்தாள்.

காலையிற் சீறியடித்த சோழகம் மதியந் திரும்பிய போது பம்மிப் பொருமி இறுக்கமாகி சாயந்தரமான போது கிழக்கேயிருந்து அசைந்தது.

வாடைக்காற்று வரப்போவதற்கான அறிகுறிகளைக் கண்டதும் மேற்கேயிருந்து வந்த வலைஞர்கள், மீண்டும் தம்மூர் திரும்புவதைப் பற்றிச் சிந்தித்தனர். அதற்கு முன்னால் எல்லோருமே கூடி தம் குல தெய்வமான பேதுருவுக்கு விழா எடுக்கத் தீர்மானித்தனர். அதற்கான நாளுந் குறித்தார்கள்.

சனிக்கிழமைமாலை அந்தக் கடற்கரை முழுவதுமே கோலாகலமாக இருந்தது. கோயிலுக்கு முன்னாற் கடற்கரையில் உயர்ந்து நின்ற கொடித்தம்பத்தில் மீனவனான பேதுருவின் கொடி பறந்து கொண்டிருந்தது. அவரது உருவம் பவனியாகக் கொண்டு செல்லப்படும் இடங்களிலெல்லாம், தோணியின் துடுப்புக் கம்புகளை நட்டு அவைகளிலே வலைகளைத் தழையத் தழையக் கட்டித் தொங்கவிட்டிருந்தார்கள். வலைவாடிகளுக்கு முன்னாலுள்ள அலங்கார வளைவுத் தூண்களில், செந்நிறத் தாழங்குலைகளும் இளநீர்க்குலைகளும் தொங்கின. தென்னோலைத் தோரணங்களிடையே கண்ணைப் பறிக்கும் வண்ணங்களில் ஜிகினாப்பட்டுக் கடதாசிக் கொடிகள் காற்றிற் சரசரத்துப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறந்தன. வெடிகள் அதிர்ந்தன. வாணங்கள் பூச் சொரிந்தன. மாவலியின் சங்கமக்கரை இந்திரவிழாக்கண்ட பூம்புகாராக ஜொலித்தது.

பவனியும் மாலை ஆராதனையும் முடிந்த பின்னர், கொடித் தம்பத்தின் கீழே பாட்டும் கூத்துமாக அமர்க்களப்பட்டது. மேற்றிசை நீர்கொழும்பிலிருந்து வந்த பாண்ட் வாத்திய இசைக்கும், உள்ளூர்ப் பொப்பிசைக் குழுக்களின் ஜனரஞ்சகமான பாடல்களுக்கும் ஏற்ப, அமுதத்தை மாந்திய பரதவர்கள் ஆடிக் கொண்டிருந்தார்கள்.

சற்றுத் தொலைவிலே 'பெற்றோமக்ஸின்' ஒளிக்குத் தப்பிய இருளிலே புங்கை மரத்தடியிலே மார்த்தாவும் அந்த இளைஞன் பீற்றரும் இவ்வுலகையே மறந்தவர்களாய்...........

குளம்போல அமைதியாகக் கிடந்த கொட்டியாபுரக்குடாக்கடல் மட்டுமே அவர்களின் மணத்துக்குச் சாட்சியாக மௌனித்துக் கொண்டிருந்தது.

இரண்டு நாட்களின் பின்னர், பீற்றர் ஊருக்குத் திரும்பிவிட்டான், சங்கமத்திட்டிலே வாடி விட்டிருந்த வலைஞர்களும், தங்கள் வள்ளங்களையும் தோணிகளையும் இழுத்துக் கரையேற்றினார்கள். அவற்றின் வயிற்றிலே வலைகளை அடக்கி பூச்சிகள் தாக்காதபடி எண்ணெய் பூசினார்கள். பின்னர் அவைகளைக் காய்ந்த தென்னோலைகளைக் கொண்டு எறும்புதானும் உள்நுழையாதபடி நெருக்கமாகச் சுற்றினார்கள். இழைக்கயிறுகளினால் அவைகளை வரிந்து கட்டினார்கள். அதன்பின்னர் வலைஞர்கள் எல்லோரும் தம் சொந்த ஊரான நீர்கொழும்பிற்கு ரயிலேறினார்கள். வாடைக்காற்று வீசியபோது அந்தக் கடற்கரை நிர்மானுஷ்யமாகியது.

நிர்மானுஷ்யமாகிவிட்ட அந்தக் கடற்கரை வழியேதான் மார்த்தா தன் குடிசையை நோக்கி நடந்து கொண்டிருந்தாள்.

குமுறி விரிந்து கொண்டுவரும் அலை அணைகட்டி நிற்கும் கரைக்கும் மேலால் நீரையள்ளிக் கொட்டும் போலத் தோன்றவே, மார்த்தா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் கூடையோடு அடம்பன் கொடிகள் படர்ந்த திடரின் மீதேறி நடந்தாள்.

ஓரிடத்திலே அடம்பன் கொடிகள் சிதைந்து கிடந்தன. பீற்றரின் ஜீப் சக்கரங்கள் அடம்பன் கொடிகளைச் சிதைத்தது அவள் ஞாபகத்துக்கு வந்தது. மார்த்தா இடுப்பிலிருந்த தன் கூடையை இறக்கி வைத்துவிட்டு சிதைக்கப்பட்ட இடத்திற் குனிந்து நோட்டம் விட்டாள். அவளுக்குப் புரிந்துவிட்டது!

பரபரவென்று மணலைக் கைகளாற் பறித்தாள். உள்ளே பழுப் பேறிய வெள்ளை நிறத்தில் ஓடு முற்றாத கோழிமுட்டைகளாய் மெத்தென் றிருக்கும் கடல் ஆமை முட்டைகளைத் தன் கூடையில் நிறைத்துக் கொண்டு நேராகத் தன் குடிசைக்குட் சென்றாள்.

குடிசையின் மூலையிலே அரைமிற் கட்டியிருந்த தன் சாரத்தால் தன் உடல் முழுவதையும் போர்த்தபடி அவள் தந்தை மரியான் அடுப்படியிற் குளிர்காய்ந்து கொண்டிருந்தான்.

வாடைக்காற்றுப் பெயர்ந்து மழையுங் கொட்டத் தொடங்கி விட்டால் மரியானுக்குப் பொழுது போவதே பெரும் பாடாக இருக்கும். மழை ஓய்ந்து தண்ணீரும் தெளிந்திருந்தால், வலையை எடுத்துக் கொண்டு கங்கைக்கரையிலே குஞ்சுமீன் வீசுவதைத் தவிர வேறு வேலையே இல்லை. தென்னோலைக் கூட்டுக்குள்வே தன்னைப் போல உறங்கு புழுவாக அடங்கிக் கிடக்கும் தோணிகளைக் காவல் செய்வது தான் அவனது முக்கியமானவேலை. அதற்காக வள்ளச் சொந்தக்காரர்கள் நீர் கொழும்பிலிருந்து மாதாமாதம் தலைக்கு இருபதோ இருபத்தைந்தோ அனுப்புவார்கள். இந்தக் காவல் வேலையை நம்பித்தான் தன் ஊருக்கே போகாமல் இருபது வருடங்களுக்கு மேலாகக் கடலோரப் பேதுருவின் கோயிலருகிலேயே தரித்து விட்டான். அவரின் திருவுருவத்திற்கு நித்திய விளக்கெரிப்பதும் அவன் வரித்துக் கொண்ட தொழில்!

இன்றைக்குக் கூட அவன் தபாலை எதிர்பார்த்துக் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானிருக்கிறான். நத்தாருக்கு இன்னமும் பத்து நாட்கள் தானிருக்கின்றன. நத்தாரை முன்னிட்டுச் சைமன் முதலாளி அவனுக்கு ஐம்பது ரூபாய்க்குக் குறையாமல் அனுப்புவார். என்றைக்குமே அவரது கை தாராளமானது தான்!

குடிசையை வந்தடைந்த மார்த்தா தன் இடுப்புக் கூடையை இறக்கிய போது அதற்குள்ளிருந்த ஆமை முட்டைகளைக் கண்ட மரியானின் முகத்தில் ஒளிக்கீறல்கள் மின்வெட்டின.

"எங்கின கண்டிய மகள்"?

"அந்திரியாட வாடியடியில"

"நேத்தும் நான் அங்கின எல்லாம் தேடிய. கண்டுக்கல்ல. உச்சிக்குப்பிந்தித்தான் முட்டையிட வந்தியபோல. வரோணிக்கா, நீ இதை எடுத்திற்றுச் சந்தைக்குப்போ. முட்டையைக் காவல் பண்ணிய சுட்டிக் கடுவன் கரைய வரும். நான் தேடிற்று வாற." என்று உற்சாத்துடன் எழுந்த மரியான் கொடியிற் கிடந்த துவாயை எடுத்துக் காதை மூடித் தலையிற் கட்டிக் கொண்டு சவளைக்கையில் எடுத்துக் கொண்டு வேட்டைநாயின் உற்சாகத்தோடு குடிசையை விட்டு வெளியேறினான். நத்தாருக்குக் காசு வந்துவிட்டது என்ற நம்பிக்கை ஒளி அவன் முகத்திற் சுடர்ந்தது.

தார்ப்பீப்பாவைக் கொட்டாக இறக்கிய கிணற்றங்கரையிலே சட்டி பானைகளைக் கழுவிக் கொண்டிருந்த அவன் மனைவி வரோணிக்காவும், தன் கைவேலைகளை முடித்துக் கொண்டு குடிசைக்குள் வந்து அடுப்பிலே சில முட்டைகளை அவியப் போட்டுவிட்டுச் சந்தைக்குப் போகத் தயாராகிக் கொண்டிருந்தாள்.

தன் கைகால்களைக் கழுவக் கிணற்றடிக்குச் சென்ற மார்த்தாவுக்கு வயிற்றைக் குமட்டிக் கொண்டு வந்தது. எத்தனை முயன்றாலும் அவளால் அடக்கிக் கொள்ள முடியவில்லை. பெருஞ்சத்தமாய் ஓங்களித்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னடி மார்த்தா? குடிசைக்குள்ளிருந்து தலை நீட்டிய வரோணிக்கா கேட்டாள்.

அவள் கேள்விக்குப் பதில் சொல்ல மார்த்தாவால் முடியவில்லை. வயிற்றுள் இருக்கும் குடல் முழுவதுமே வெளியே வந்துவிடுவது போலக் குமட்டிக் கொண்டிருந்தாலும், பெருஞ்சத்தமாக ஓங்காளித்த போது உமிழ்நீர்தான் வெளியே வந்தது. உடம்பெங்கும் வெயர்த்தது.

கிணற்றடிக்கு வந்து தன் மகளைக் கண்ட தாய் மகளின் நிலைமையை அனுமானித்துக் கொண்டபோது "என்ர மரியம்மா" என்ற சொற்கள் அவள் வாயிலிருந்து பயத்தோடும் பதட்டத்தோடும் வெளிவந்தன. மகளைக் கையிற் பிடித்துக் கொண்ட அந்தத் தாயின் உடல் முழுவதும் குலுங்கித் தவித்தது. மகளைக் குடிசைக்குட் கொண்டு வந்த வரோணிக்கா "என்னத்தடி சிறுக்கி செய்திய. எவனோட போனிய" என்று கொண்டே அவளை மொத்தினாள்.

ஆவேசம் வந்தவளாக நிற்கும் தாய்க்கு முன்னால் மார்த்தா பயந்து வாயடைத்து நின்றாள்.

"அப்பனுக்குத் தெரிஞ்சாக்காட்டி ஒன்னயச் சவளால ஒரேயடியில கொன்னு போட்டிய. யாரெண்டு சொல்லுடி!"

"அவர்தான் அம்மா"

"அவரெண்டா எவர்?"

"முதலாளிர மகன் பீற்றர்"

"என்ர மரியம்மே" வரோணிக்கா தலையிற் கைவைத்தபடியே நிலத்திற் குந்திக் கொண்டாள். தன்னைச் சற்றுச் சுதாரித்துக் கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் கண்ணீரும் கம்பலையுமாகச் சொன்னாள் "அவுஹ எல்லாம் பெரிய முதலாளி. நீ ஏமாந்திட்டாடி மகளே"

"இல்லம்மே. அவர் என்னைத் தேடிற்று வரும். பேதுரு முனீந்திரனில சத்தியம் பண்ணியிருக்கார்"

"அந்தப்பேதுரு முனீந்திரன் யேசு சுவாமிய மறதலிச்சது போல அவனும் மறுதலிப்பான்"

"இல்லம்மே. நான் அவரை நம்புறன். முட்டைகளைக் காவல் பாக்கக் கடுவன் ஆமை வருகியபோல அவரும் வரும்"

"ஆமைக்கிருக்கிற குணம் மனுசனுக்கில்லடி. நாம அவங்கட வலையையும் வள்ளத்தையும் காவல் செய்ற காவற்காரங்க. அந்தக்கடுவன் இனி வருகிய இல்ல. நம்மால அதைப் புடிச்சிக்கவும் முடியா" வரோணிக்கா சொல்லிக் கொண்டே அழுகிறாள்.

அமைதியாயிருந்த கடலே சாட்சியாகத் தான் புரிந்துவிட்ட தவறின் பயங்கரமான விளைவுகளை எண்ணிக்கொண்ட மார்த்தாவும், தன்தாயைக் கட்டியணைத்துக் கொண்டு அழுகிறாள். அவ்விருவர் சோகத்தையும் தாளமாட்டாற் கடலும் குமுறியழுகிறது.

(குறிப்பு : அகநானூற்றின் 160ம் 230ம் பாடல்களிலும் இக்கதை இருப்பதைக் காணலாம்)

**வீரகேசரி 09.05.82**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவப் பிச்சை

ஆண்டிறுதிப் பரீட்சைகள் முடிந்து விட்டன. ஆசிரியர்கள் விடைத்தாள்களைத் திருத்திக் கொண்டு தேர்ச்சி அறிக்கையை எழுதிக் கொண்டிருந்தார்கள். வெளியே மழை இன்னமும் பெய்து கொண்டுதான் இருந்தது.

பிள்ளைகளுக்கு ஒரே மகிழ்ச்சி அவர்கள் பாடங்களைப் படிக்க வேண்டிய அவசியமில்லை. வகுப்பிலே ஆசிரியர்களின் கண்டிப்பும் இல்லை. தேர்ச்சி அறிக்கையைப் பெற்றுக் கொள்வதற்காகவே அவர்கள் பாடசாலைக்கு வந்திருக்கிறார்கள். பாடசாலை மழைக்குப் பாதுகாப்பான இடம் என்று பெற்றோர்கள் எண்ணியதாற் சிலர் பாடசாலைக்கு 'அனுப்பப்' பட்டிருந்தார்கள்.

வந்தவர்களிற் பலர் மாரி மழைக்குப் பாடசாலை வளவிலே தேங்கி நின்ற தண்ணீரிற் கப்பல்விட்டு விளையாடினார்கள். சிலர் தும்பைப் பூவிலே மொய்க்கும் வண்ணாத்திப் பூச்சியைத் துரத்திப் பிடித்தார்கள்.

மாரித்தவளைகளின் இரைச்சலுக்குப் போட்டியாக அடுத்த வகுப்பிலே சிஸ்ரர் நத்தார்க்கீதம் பயிற்றுவித்துக் கொண்டிருந்தாள்.

இத்தனை குதூகலத்திற்கிடையிலும் செல்லன் மட்டும் தன்னந் தனியனாய்ச் சோர்ந்து போயிருந்தான். காலையில் அவன் அப்பா சொன்ன வார்த்தைகள் அவன் பிஞ்சு மனத்தைக் குடைந்து கொண்டிருந்தன.

அன்று அதிகாலையிலேயே மழை சோனாவாரியாகக் கொட்டிக் கொண்டிருந்தது. கூரை பல இடங்களில் ஒழுகத் தொடங்கவே, குடும்பத் தினர் எல்லோருமே கண்விழிக்க வேண்டியதாயிற்று. அப்போதுதான் அப்பா சொன்னார். "பத்து நாளாப் பிடிச்ச பேய்மழை. இன்னுந்தான் பெய் யுது. காணிக்க நட்ட மரவெள்ளியெல்லாம் ஊத்துப் பிடிச்சிரும் போல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கு. அந்தப் பயத்தில காசு வைச்சிருக்கிற எவனும் கடன் தர மாட்டான். இந்த வருசம் நத்தாருக்கு ஒருத்தருக்கும் உடுப்பு வாங்க ஏலாது"

தேர்ச்சி அறிக்கையைத் தயாரிப்பதிற் தன்னை மறந்து ஈடுபட்டிருந்த நான்காம் வகுப்பு ஆசிரியை தன் மூக்குக் கண்ணாடியைக் கழற்றிக் கையில் எடுத்துக் கொண்டு செல்லனைப் பார்த்தாள். எப்போதும் "துருதுரு" வென்றிருக்கும் செல்லன் வகுப்பிலே அசமந்து உட்கார்ந்திருப்பது ஆச்சரியமாக இருந்தது அவளுக்கு. சைகை காட்டி செல்லனை அருகில் அழைத்தாள்.

"ஏன் விளையாடப் போகவில்லை"

"போறன் ரீச்சர்"

"காலையிற் சாப்பிட்டாயா?"

"ஓம் ரீச்சர்"

"என்ன சாப்பிட்டாய்?"

"மரவெள்ளிக் கெழங்கு ரீச்சர்"

"சரி போய் அருளைக் கூட்டிக்கொண்டுவா. விஸ்கோத்துக் குடுக்க வேண்டும்."

செல்லன் வண்ணாத்துப் பூச்சி பிடிக்கச் சென்ற தன் வகுப்பு மொணிற்றர் அருளை அழைத்துக் கொண்டு வருகையில் அவனிடம் கேட்டான்.

நத்தாருக்கு உனக்கு உடுப்பு வாங்கியாச்சா?

ஓம் என்று உற்சாகத்தோடு சொன்ன அருள் நேற்றுத்தான் அப்பா திருக்கிணாமலைக்குப் போய் எனக்கு, அண்ணாக்கு, அக்காவுக்கு, தம்பிக்கு, அம்மாக்கு எல்லாருக்கும் புது உடுப்பு வாங்கிக் கொண்டு வந்தார். எனக்கு ரெண்டு. நத்தாருக்கு ஒண்ணு. வருசத்துக்கு ஒண்ணு. பின்னேரந்தான் காற்சட்டையும் சேட்டுந் தைக்க ரெயிலரிட்டப் போக வேணும். நீயும் வாறியா? என்று மிகுந்த உற்சாகத்தோடு கேட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் வரல்ல. இன்னமும் எனக்கு உடுப்பு வாங்கல்ல. வாங்கக் காசில்ல எண்டு அப்பா சொல்றார்"

"காசில்லாட்டி என்னடா? எனக்கு நத்தாருக்கு றெடிமேட் உடுப்பு பார்சலும் வரும். உனக்கு வராதா?"

"பொறீன்ல இருக்கிற சித்தப்பா உனக்கு அனுப்புவார். எனக்கு ஆர் அனுப்புறது?"

"அவர் இல்லடா. ஆனா எனக்கு போன நத்தாருக்கும் அதுக்கு முதல் நத்தாருக்கும் பொறீன்ல இருந்து உடுப்பு அனுப்பினாங்க. இந்த நத்தாருக்கும் வரும்."

"யார் அனுப்புறது?"

"யாரென்று எனக்குத் தெரியாது. நாம கரோல் பாடிப் போகக்க நம்மட உபதேசியார் கிறிஸ்மஸ் பப்பா வேஷம் போடுவாரல்லவா? உண்மையான கிறிஸ்மஸ் பப்பா பொறீன்லதான் இருக்காராம். அவர் தான் எனக்குப் பார்சல் அனுப்புறவர்"

"பொய் கிறிஸ்மஸ் பப்பா எதையும் பார்சலில அனுப்புற தில்ல"

"பின்ன எப்படி அனுப்புவார்?

"நத்தாருக்கு முதல்நாளிரவு நாமெல்லாம் நித்திர கொள்ளக்க கிறிஸ்மஸ் பப்பா ஒரு சாக்கு நிறையப் புது உடுப்புக்களும், விளையாட்டுச் சாமான்களும் எடுத்துக் கொண்டு வந்து, நம்ம படுக்கிற இடத்தில வச்சிற்றுப் போவாராம். நாம நித்திர முழிச்சதும் எடுத்துக் கொள்ளலாமாம் என்று அம்மா எனக்குச் சொன்னா"

"அதெல்லாம் பொய்ரா. அப்படியெண்டா கிறிஸ்மஸ் பப்பா, நாம படுக்கிற எடத்தில இவ்வளவு காலமும் ஒண்ணுமே வைக்கல்லியே"

"அதுதான் எனக்கும் தெரியல்ல. ஆனா எங்கம்மா பொய் சொல்ல மாட்டா, அவ கொன்வென்ரில படிச்சவ"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்கட மாமாட மகன் ரவிக்கும் பொறீன்ல இருந்து உடுப்பு வருகுதே. உனக்குத் தெரியுமா?

"ஓமெண்டுதான் ரவி சொன்னான். நான் நெனைக்கிறன். கிறிஸ்மஸ் பப்பாக்கு நம்ம ஊருக்கு வர வழிதெரியல்ல. அதுதான் பார்சலில உடுப்பு அனுப்புறார். ரவிக்கு அவர் அனுப்பாட்டியும் அவன்ர மாமா அனுப்புவார். அவருக்குக் கனக்கச் சம்பளம் என்று அம்மா சொன்னா"

"நீயும் உன்ர பேரப் பதிஞ்சி யெண்டால் உனக்கும் நிச்சயமாப் பார்சலில உடுப்புவரும்"

"எனக்குக் கிறிஸ்மஸ் பப்பாட விலாசம் தெரியாதே. எப்படி என் பேரைப் பதிஞ்சு அனுப்புறது?"

"கொன்வென்றில இருக்கிற சிஸ்ரருக்குத்தான் அவர்ர விலாசம் தெரியும். முதலில உன்ர படத்த அவருக்கு அனுப்ப வேணும். அனுப்பினா நத்தாருக்கு உடுப்பு மட்டுமல்ல. நாம படிக்கிறதுக்கு மாசாமாசம் காசும் வரும். எனக்கு மாசம் முன்னூறு ரூபா வருகுதெண்டு அப்பா சொன்னார்"

"உங்கப்பாக்குச் சம்பளம் வருகுதே"

"வந்தா என்ன? உங்கட மாமாக்கும் கவுண்மேந் சம்பளம் தானே. அவர்ர மகனுக்கும் காசு வருகுதாம்"

"அப்ப போட்டோ எடுத்து அனுப்பினா எனக்கும் காசு வருமா?

"நாம அனுப்புறல்ல. சிஸ்ரர்தான் அனுப்ப வேணும். அவருக்குத் தான் கிறிஸ்மஸ் பப்பாட விலாசம் தெரியும்"

"போட்டோ எடுக்கக் கூட என்னட்டக் காசில்லியே"

"அதுக்குக் கனக்கக் காசு தேவையில்ல. ஒம்பது ரூபா போதும். மூணுபடம் போட்டோக்காரன் தருவான். அதில ஒண்ண அனுப்பினாட் போதும்"

"அப்ப நானும் படம் எடுத்து அனுப்புறன். அனுப்பினாக் கிறிஸ்மஸ்பப்பா எனக்கு உடுப்பும் காசும் அனுப்புவார்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓமோம் அவரிட்டக் கனக்கக் காசிருக்காம். நம் மூரில எல்லாப் பிள்ளைகளுக்கும் கொடுத்தாலும் அவரிட்ட இன்னமும் காசிருக்குமாம்."

*** *** ***

மதியமான போது கறுத்திருந்த வானம் வெளுத்து உயர்ந்தது. உச்சியிற் சூரிய 'ஈயென்று' பல்லைக்காட்ட விசுக்கோத்துக் கொடுத்த பின்னர் பாடசாலை மணி கணகணவென்று ஒலித்தது. அன்றைய தினத்திற்குப் பாடசாலை மூடப்பட்டது.

செல்லன் தனக்குக் கிடைத்த விசுக்கோத்துகளைத் தன் உடன் பிறப்புக்காகக் காற்சட்டைப் பையிற் பதுக்கிக் கொண்டு வீட்டை நோக்கி நடந்தான்.

பத்து நாட்களாகப் பெருமழையில் அடைந்து கிடந்த மக்கள், வெய்யிலைக் கண்டு வெளியேறினதாற் தெரு கலகலப்பாக இருந்தது. செல்லன் தார் ரோட்டிலிருந்து இறங்கிக் குச்சொழுங்கையிற் கால்வைத்தான்.

காணிகளிற் தேங்கிய மழைத் தண்ணீரை ஓட வைப்பதற்காகப் புதிதாக வெட்டப்பட்ட கான்களிற் தண்ணீர் சலசலத்து ஓடிக் கொண்டிருந்தது. ஒழுங்கையிற் கொட்டிய புது மண்ணிற் கால் பதையச் செல்லன் நடந்து ஒழுங்கையின் அந்தத்திலிருந்த தன் வீட்டுத் தெருப்படலையைத் தள்ளினான்.

படலையிலிருந்து திடரிலுள்ள குடிசைவரை ஒரே தண்ணீர்! நடைவரம்பின் இருமருங்கிலும் குடலை திரண்டிருந்த நெற்பயிர்கள், தண்ணீருக்கு மேலே ஓலையெறிந்து பசுமையாய்க் குதூகலித்தன. குடிசையைச் சுற்றி அவன் ஆசையோடு நட்டிருந்த குரோட்டன்களும் ஜீனியஸ்களும், அதற்கும் அப்பால் அவன் அப்பா நட்டிருந்த மரவெள்ளிகளும், வாழை மரங்களும் படம் புதைந்த தண்ணீரில் தத்தளித்தன.

செல்லன் நடைவரம்பிற் கழைக்கூத்தாடியின் கமனத்தோடு நடந்து குடிசைக்குள் ஏறினான்.

வரிச்சுக்களினிடையே களிமண் பொதிந்து எழுப்பிய குடிசையின் முன்பக்கச் சாய்ப்பில் தகரத்தில் மூட்டப்பட்டிருந்த அடுப்பு நெருப்பில் அம்மாவும் தங்கையும் தம்பியும் குளிர்காய்ந்து கொண்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியானச் சமையலுக்கான எந்த ஆயத்தங்களும் காணப்படவில்லை. செல்லன் அதையிட்டு ஏமாற்றமடையவுமில்லை.

தன் காற்சட்டைப் பையில் பத்திரமாக வைத்திருந்த விசுக்கோத்து களைத் தங்கைக்கும், தம்பிக்கும் பகிர்ந்தளித்துவிட்டு "அம்மா எனக்கு ஒம்பது ரூபாத்தாங்க. போட்டோ எடுக்க வேணும்" என்றான் செல்லன்.

"எதுக்குடா போட்டோ?"

"போட்டோ எடுத்துப் படத்தைப் பொறீனுக்கு அனுப்பினா எனக்கும் அங்கிருந்து உடுப்பும், காசும் அனுப்புவாங்க அம்மா"

"அதெல்லாம் உனக்கு வராதுடா. உங்க அப்பா கோயிலுக்கே போறதில்லியே"

"நான் ஒவ்வொரு நாளும் பூசைக்கு போறனே அம்மா"

"நீ போனாமட்டும் போதுமா? நானும் எவ்வளவோ சொல்லிப் பாக்கிறன், உன்ர அப்பா கேக்கிறாரில்ல"

"மேரி இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கையில் யோசப் தன் காணிக்குட் பிடுங்கிய மரவெள்ளிக்கிழங்குகளுடன் குடிசைக்குள் ஏறினான்.

கிழங்குகளா அவை? நடுவிரற் பருமனில் சாண் நீளம் ஓடிய வேர்கள். இன்னமும் இரண்டுமாதங்களில் அவை உருண்டுதிரண்டு கிழங்குகளாகிவிடும்!

அவைகளை அடுப்பங்கரையிற் போட்ட யோசப், "எல்லாச் செடியும் தண்ணிக்க தான் நிக்குது. நாளைக்குள்ள தண்ணி வடியாட்டி எல்லாம் ஊத்துப்பிடிச்சு அழுகிப்போயிரும். அதுதான் பிஞ்சாப் பூவாப்பிடுங்கி னன். பாத்தா வயித்தப்பத்துது. என்ன செய்றது? உரிச்சு அவி. இண்டையப் பொழுது போகும்" என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் அவிக்கிறன். உங்கட மகன் என்ன சொல்றான் என்று கேளுங்க"

"கேட்டன் கேட்டன். நல்லாக் கேட்டிற்றன். அவனுக்கு உலகம் விளங்கல்ல. சூசையப்பர் கொஞ்சம் வசதியுள்ளவரா இருந்தா அவருக்குச் சத்திரத்தில இடம் கிடைத்திருக்கும். ஆண்டவரும் மாட்டுக் கொட்டிலில பிறந்திருக்கமாட்டார். இந்த யோசப்புக்கிட்டயும் வசதியில்ல. என்ர மகனுக்கும் சத்திரத்தில இடமில்ல"

"யார் யாரோ வெளிநாட்டுப் புண்ணியவான்கள் செய்ற உதவி, நாமளும் கோயில் குளத்துக்குப் போய்க் கொஞ்சம் பணிஞ்சு நடந்தா நமக்கும் அது கிடைக்குந்தானே"

"சும்மாகிட. எனக்கு அப்படியெல்லாம் பம்மாத்துப் பண்ணத் தெரியாது"

"இதில என்ன பம்மாத்து? கோயிலுக்குப் போனாக் கொறைஞ்சா போவீங்க"

"இந்தா தொண தொண வெண்டு தொடங்காத. எனக்கெங்க இதுக்கெல்லாம் நேரம் இருக்கு. புரட்டாசி முத்திலாக் கொலனிக்க வெள்ளாம வெட்டப் போனன். பெறகு இரண்டு கிழமை சூட்டுக்களத்தில. அதுக்கும் பிறகு மேசன்மாரோட முட்டாளாப் போனன். அப்படிப் போகக்க தான் இராவில பாடுபட்டுக் காணியக் கொத்தி மரவள்ளி நட்டு, காணிக்க இரண்டு சாக்கு நெல்லையும் விதைச்சன். பிறகு மழை பெய்யத் தொடங்கியதும் முன்மாரி வேளாமைக்குச் சேத்து வேலைக்குப் போனன். அதுவும் முடிஞ்சபிறகு இப்பதான் வீட்டில குந்தியிருக்கன். எனக்குக் கோயிலுக்குப் போக நேரம் இருக்கா?

"வீட்டில இருக்கக்குள்ள எண்டான கோயிற்பக்கம் தலை காட்டப்படாதா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஏன்பம்மாத்துப் பண்ணி யாரிட்டயும் பணம் பறிக்கவா? நீ நல்லா யோசிச்சுப் பாரு வெளிநாட்டுச் செல்வச் சீமான்களிற் சிலர், நம்ம நாட்டில இருக்கிற ஏழைப்பிள்ளைகளுக்கு நல்ல மனசோட உதவி செய்ய முன் வாறாங்க. ஆனா அந்த உதவி இந்த ஊரில யாராவது ஏழைக்குக் கெடைச்சிருக்கா? ஊரில வசதியா இருக்கிற காணிக்காரனும், கவுண்மேந்துச் சம்பளம் வாங்குகிற வாத்தியும், கிளாக்கும் யார் யாரையோ ஏமாற்றிப் பக்தனாப் பம்மாத்துப் பண்ணி அந்தக் கௌரவப்பிச்சையைப் பங்கு போடுறாங்க. நான் ஏழைதான். ஆனாப்பிச்சைக் காரனில்ல. அந்தப் பிச்சைக்காசில பிலுக்குவதைப் பார்க்க என்ர பிள்ளைகள் பட்டினி கிடக்கட்டும்”

“இப்ப எனக்கு நத்தாருக்கு உடுப்பு இல்லியே அப்பா” செல்லன் அப்பாவிற்குப் பயந்து, பவ்வியமாகக் கேட்கிறான்.

“ஏன்ரா இல்ல? பொறக்கப்போற பாலன்ர கிருபையால இண்டையோட மழை வெளிச்சிடும். நம்ம காணிக்க இருக்கிற வெள்ளாம இனி வெளஞ்சிரும் அத நம்பி யாரும் கடன் தருவான். பின்னேரத்துக் கிடையில எல்லோருக்கும் உடுப்பு வாங்கித் தருவன்.

செல்லனும் தம்பியும் மனம் நிறைந்து சிரிக்கின்றனர்.

அந்தச் சிரிப்பிலே இறைவனைக்கண்ட பூரிப்போடு, யோசப் துண்டை எடுத்துத் தோளிற் போட்டுக் கொண்டு குடிசையைவிட்டு வெளியே புறப்பட்டான்.

**வீரகேசரி 26.12.82**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தனம் இரக்கி........

தைமாதத்துப் பின்பனியில் அந்தப் பிரதேசமே விறைத்துக் கிடந்தது. அவள் மட்டும் நடந்து கொண்டிருந்தாள். உச்சந்தலையிலே சுருட்டி வைக்கப்பட்டிருந்த சும்மாட்டின் மேலே கல்லாய்க் கனத்து அழுத்தும் விறகுக்கட்டை மேலே உயர்த்திய இரண்டு கைகளாலும் பிடித்த வண்ணம், அவள் நடந்து கொண்டிருந்தாள். ஊர் உலகத்தின் கண்களிற் பட முன், அங்கு போய்விட வேண்டும் என்ற அவசரம் அவளுக்கு, வெடுவெடுக்கச் செய்யும் அந்தப் பனியிலும் வெயர்த்துக் கொட்டும் தன் முகத்தைத் துடைக்க வக்கின்றி அவள் நடந்து கொண்டேயிருந்தாள்.

ஒன்பது மாதங்களுக்கு முன்னரும் அவள் இப்படித்தான் அவசர அவசரமாக நடந்தாள். இல்லை, ஓடினாள். வேட்டுச் சப்தங்கள் பின்னாற் கேட்டுக் கொண்டும் நெருப்பு வைத்த புதுக்காடாக ஊர் புகைந்து கொண்டும் இருக்கையில் மூன்று பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு, ஓடினாள். பதியிழந்து, பாலகர்களையிழந்து, படைத்த நிதியிழந்து எல்லாவற்றையுமே இழந்தவளாய் கூட்டத்தோடு கூட்டமாகச் சேர்ந்து ஓடினாள். மகாவலிகங்கைக் கரையை அடைந்த போது இருட்டிவிட்டது.

ஒவ்வொரு ஆடி அமாவாசைக்கும் அவள் தீர்த்தமாடுவதற்காகக் கங்கைக் கரைக்கு வந்திருக்கிறாள். விரத தினமாக இருந்தாலும் அப்போதெல்லாம் கங்கைக்கரை மகிழ்ச்சியும் கும்மாளமுமாக இருக்கும். கிழடு கட்டைகள் திருக்கரசைப் புராணபடனம் நடத்திக் கொண்டிருக்கும். ஆனாற் சுற்றுப்புற மெங்கும் இளைஞர்களின் கும்மாளம்......ஆனால் இன்று அந்தக் கங்கைக் கரை மணற்திட்டு அழுகையும், துயரமும், அங்கலாய்ப்பும் நிறைந்த மக்கட் கூட்டத்தைச் சுமந்து கொண்டு சோகித்துக் கிடந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் சுமந்து கொண்டுவந்த அரிசி அவளதும், பிள்ளைகளதும் பசியை மட்டுமல்ல அக்கூட்டத்திலிருந்த வேறு பலரதும் பசியையும் போக்கிற்று. 'கொடுத்தகை' என்று இரத்தினச் சுருக்கமாக விமர்சித்தார் கணபதிக் கிழவர்.

பசி ஓரளவு தீர்ந்த போது தாங்கள் எங்கே போவது? எனச் சனக் கூட்டம் சிந்திக்கத் தொடங்கியது.

"நாம எங்க போறது? முலை விழுந்தா வயிறுதான் தாங்கவேண்டும். இந்த மூணாங்கொலனிக்கு வரமுன்னம் எங்க இருந்தமோ. அந்த நம்ம நம்மட ஊருக்குப் போறதைவிட நமக்கு எங்க போக்கிடம் இருக்கு? என்று ஆற்றாமையோடு சொன்னார் கணபதிக்கிழவர்.

"நானெண்டா ஊருக்கு வரமாட்டன், பெத்தப்பா. நீங்கதானே சொன்னீங்க. சண்டித்தனம் பண்றவன எல்லாம் ஊரவிட்டுத் துரத்த வேண்டும் எண்டுதான், கொலனிக்கு ஆள் பதிஞ்ச லிஸ்ரில, அப்பாட பேரையும் சித்தப்பாட பேரையும் சேர்த்தாங்க அப்ப இருந்த விதானையும் சேமனும் எண்டு. கொலனிக்கு வந்த பிறகு சாகிற வரைக்கும் அப்பா ஊருக்கே போகல்ல. நானும் அவர் பெத்த மகள். நானும் அங்க போகப்போறதில்ல நான் அங்க பொறக்கவுமில்ல"

"அவனுகள் துரத்தினாப்போல நாங்க என்ன கொலனில வாழாமலா இருந்தம். துரத்தினவங்களவிடச் சோக்காத்தான் வாழ்ந்தம். இப்ப இப்படி நெருக்கடி வந்திற்று. அந்தப் பத்திரகாளித்தாய்தான் நம்மையெல்லாம் காப்பாத்த வேணும். அந்தத் தாயிர காலில விழுறதைத் தவிர வேறு வழியில்ல." என்று முத்தாய்ப்பு வைத்தார் கிழவர்.

ஆனால் அதற்கு அவள் ஒப்பவில்லை. தனது தந்தையார் பிறந்த சம்பூரில் பத்திரகாளித்தாய் மட்டும் குடியிருக்கவில்லை. அவளுடைய இனமும் சனமும் குலமும் கோத்திரத்தாரும் கூட இருக்கின்றனர். கொலனியிலே இயந்திரக்கலப்பையோடும், வண்டி மாடுகளோடும் விதை நெற் பட்டறையோடும் வாழந்த நான் அப்பாவின் ஊரில் அனாதையாய்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓட்டாண்டியாய் அவர்களுக்கு முன்னாற் போகமாட்டேன். எல்லாவற்றை யுமே இழந்தாய்விட்டது. இனி எங்காவது வாழ்ந்து விட்டுப் போவோம்." என்று தீர்மானித்தவளாய் மணற்திட்டிற்குந்திக் கொண்டு, முழங்கால்களிற் தலையைப் புதைத்துக் கொண்டு விம்மினாள்.

விம்மிச் சோர்ந்து கண்ணயர்கையில் விழித்துக் கொண்ட சனக்கூட்டம் மீண்டும் குரல் கொடுத்தது. அவள் விழித்துக் கொண்டாள்.

மூன்றாம் சாமத்தின் கடைசி அந்தலை சனக்கூட்டம் மகாவலியி லிறங்கித் தலைச்சுமைகளோடு அக்கரைக்குச் சென்று கொண்டிருந்தது. அவளும் அந்தப் பயணிகளைத் தொடர்ந்தாள்.

மீண்டும் காட்டுவழியே பயணம். அதர் தெரிந்த கிழவர்கள் வழிகாட்ட, அக்கூட்டம் பின்தொடர்ந்தது. காட்டைத்தாண்டிப் பொட்டல் வெளியை அடைந்தபோது பலபலவென்று விடிந்தது.

அந்த வெளியிற் கூட்டம் மூன்றாகப் பிரிந்து ஒரு கூட்டம் ஈச்சந்தீவிற்கும், அடுத்தது உப்பாறுவிற்கும், மூன்றாவது கூட்டம் மூதூருக்கும் வழிகொண்டது. மூதூருக்குப் போன கூட்டத்தில் அவளும் இருந்தாள். பசியையும் பட்டினியையும், கச்சான்காற்றின் வரட்சியையும் சகித்துக் கொண்டு நடந்த அக்கூட்டம் மூதூரையடைந்தபோது இருட்டிவிட்டது.

*** *** ***

கிழக்குவெளுத்துப் பளீரென்று நிலந்தெரிகையில் அவள் விறகுச் சுமையோடு கட்டைபறிச்சான் பாலத்தைக் கடந்துவிட்டாள். இனி மூதூர்தான். இன்னமும் ஒருமைல் தான் போகவேண்டும். பின்னர் இலக்கை அடைந்துவிடலாம். தன்னையாரும் அடையாளம் கண்டுவிடக்கூடாதே என்ற கவலையோடு நடந்து கொண்டிருக்கையில் மூதூருக்கு அகதியாத்தான் வந்தபோது நடந்த சம்பவங்கள் நினைவுக்கு வந்தன.

அந்த முஸ்லீம் பாடசாலையை அடைந்த போது நன்றாக இருட்டிவிட்டது. நடந்துவந்தகளை. பட்டினிவேறு. அவளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ள்ளைகளும் யார் யாரோ கொண்டுவந்து கொடுத்த பாண்துண்டுகளைக் காறித்தார்கள். பின்னர் வெறுந்தரையிலேயே சுருண்டு படுத்துக் காண்டார்கள்.

விடிந்தது!

அகதிகளாக வந்தவர்களைப் பார்க்க உறவினர்களும் ஊரவர்களும் அப்பாடசாலையை மொய்த்தார்கள். அந்தக் கூட்டத்திலே அப்துல்லாவும் இருந்தான்.

அப்துல்லாவைக் கண்டதுமே அவளுக்கு அழுகை பீறிக் கொண்டுவந்தது. சேலைத்தலைப்பால் முகத்தை மூடிக்கொண்டு விம்மினாள். அப்துல்லா அவளைத் தேற்றுவது எப்படி என்று தெரியாமல் சிலையாக நின்றான்.

அவளது அழுகையும் விம்மலும் ஓய்ந்த பின்னர் "என்னக்கா செய்றது? எல்லாம் அந்த ஆண்டவன்ர கையிலதான் இருக்கு. நீங்க அழாதீங்க. உங்களுக்கு விருப்பமெண்டா என்ர வீட்டில வந்திருங்க. அல்லா நம்ம எல்லாரையும் காப்பாத்துவான்"

"நான் வரல்லடா தம்பி. எத்தன காலத்துக்கு உனக்குப்பாரமா இருக்கிறது? எனக்கும் என்ர மிஞ்சியிருக்கிற மூணு குஞ்சுகளுக்கும் ஆண்டவன் வழிகாட்டட்டும். நீ வருத்தப்படாதடா"

"அப்ப இருங்கக்கா. நான் வாறன்" என்றுவிட்டுப் போனவன், சற்று நேரத்தில் ஒரு பசளைச் சாக்குச் சுமையோடு வந்தான். தன் சுமையை இறக்கிய அவன், சாக்கில் இருந்த பொருட்களை ஒவ்வொன்றாக எடுத்து வைத்தான். அரிசி, சீனி, உப்பு, புளி, தேங்காய்.............

"ஏன்ராதம்பி இதெல்லாம் கொண்டு வந்தா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மனுசனுக்கு மனிசன் வேறென்னத்தக்கா செய்றது? மூணாங் கொலனிக்கு நெல்லுக்கட்ட வாற போதெல்லாம் எனக்கும் லொறிக்காரனுக ளுக்கும் எவ்வளவைத்தான் அவிச்சுப் போட்டிருப்பீங்க. அத்தோட கைமாத்தா எவ்வளவு தந்திருப்பீங்க. நெல்லுக்கட்டின எடத்தில "நான் தருவண்டா காசு" என்று எவ்வளவு பிணைநிண்டீங்க? அதையெல்லாம் மறந்தா நான் என்ன மனுசனா? இந்தாங்க காசு ஐஞ்நூறு ரூபா இருக்கு" என்று அவள்கையிற் திணித்தான்.

அவளால் மறுக்க முடியவில்லை. அதை வாங்கிக் கொண்டாள்.

ஆறுமாதங்கள் அந்த முஸ்லீம் மகாவித்தியாலய அகதி முகாமில தான் கழிந்தது. அரசாங்க நிவாரணத்திற்காலம் போனது. தன் உடன்பிறந்த சகோதரன் போல அப்துல்லாவும் உதவினான்.

இந்த நிலையிலே சிலிடையே வளர்ந்து வந்த மனக்கசப்புக்களின் காரணமாக ஊரிலே அனர்த்தம்! அப்துல்லாவைப் போன்ற நல்லவர்களாலும் அதைத் தடுக்க முடியவில்லை. ஊரைக் குழப்ப ஒன்றிரண்டு இதயமில்லா தவர்களால் முடியாதா? முடிவாக அந்த முஸ்லீம் சூழலில் இருக்க முடியவில்லை. எந்த ஊரிற் காலடி எடுத்து வைப்பதில்லை எனச் சபத மிட்டிருந்தாளோ அந்த ஊருக்கே, சம்பூருக்கே பிள்ளைகளையும் தள்ளிக் கொண்டு ஓட வேண்டியிருந்தது. ஓடினாள்.

***   ***   ***

"சம்பூர்ணம்" என்று புலவன் குறிப்பிட்டது போல அந்த ஊர் சம்பூர்ணமாக இல்லை. நொறுக்கப்பட்ட ஓட்டுக்கூரைகள், எரியுண்ட ஓலைவீடுகள், கருகிப்போன சுவர்கள்........

ஆனாலும் அங்கு மக்கள் வாழ்ந்தார்கள் வாழ வேண்டும் என்ற ஆசையும், வாழ்வோம் என்ற நம்பிக்கையும் யாரைவிட்டுப் போனது?

அவளும் பத்திரகாளிக் கோயிலுக்குப் பக்கத்தில் குடிசையைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிக் கொண்டு மூன்று பிள்ளைகளோடும் அவள் வாழத் தொடங்கினாள். அவள் மனசிலே வன்செயல்களின் போது காணமற்போன அவள் கணவரும் இரு மூத்த மகன்களும் வாழ்ந்தார்கள்!

காட்டிலே கம்பு வெட்டிக் குடிசை அமைத்துக் கொடுத்த கணபதிக்கிழவருக்கு, அதற்கு மேலும் அவரால் உதவ முடியவில்லை.

அகதிகளுக்குக் கொடுக்கும் நிவாரணமும் வேண்டாதவர்களுக்குப் போய் விடுகிறது என்ற காரணத்தால் நிறுத்தப்பட்டபோது, அவள் பட்டினியைச் சந்திக்க வேண்டியிருந்தது.

கற்பாருக்குக் கீழே காக்காக் கண்ணாய்த் தெளிந்து கிடக்கும் அமுதம் போன்ற சம்பூர்த் தண்ணீரைக் குடித்துக் கொண்டு மட்டும் வாழ்ந்து விடமுடியுமா? ஊரிலே ஆண்கள் அச்சத்தில் அசமந்து கிடந்தார்கள். பெண்களும் சிறுவர்களும், சிறுமிகளும் விறகுக் கட்டைத் தலையிற் சுமந்து ஆறுமைல்கள் மூதூருக்கு நடந்து சென்று விற்று வாழ வழிதேடினார்கள்.

அவளால் அதைச் செய்யவும் முடியவில்லை. நாட்கணக்காகப் பட்டினி!

"மூதூர் வேதக் கோயிலிலே அகதிகளுக்கு ஏதோ ஒரு சங்கம் உதவி செய்யுதாம். வெறுங்கையோடு போகாமற் போகக்க கொள்ளிச் கட்டக் கொண்டுபோனால் அதை வாங்கிக் கொண்டு உதவி செய்யுமாம்' என்று மூதூருக்குப் போய்வந்தவர்கள் பேசிக் கொண்டது பசியா அடைத்துவிட்ட அவள் காதுகளில் விழுந்தது.

கடைசியாய்த் தானும் விறகு கொண்டு போவது என தீர்மானித்தாள். பசிவந்திடப் பத்தும் பறக்குமல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும் அவளுக்கு விறகு கொத்தத் தெரியுமா? விதைப்பும் வெட்டுமில்லாத இடைக்காலங்களில் அவள் கணவன் றக்ரர் பெட்டி நிறைய விறகுக் கட்டைகளைக் கொண்டுவந்து போடுவான். ஒரு நாழிக்கு இரண்டு நாழி கொடுத்தால் யாராவது ஒருவன் அந்தக் கட்டைகளைப் பிளந்து அடுக்களைக்குட் கொண்டுவந்து அடுக்கி வைப்பான். எந்தக் காலத்திலும் அவள் விறகு கொத்தியதில்லை.

கணபதிக் கிழவரைத் தான் பிடித்தாள். அவர் "எல்லாம் தலைவிதி" என்று, அந்தச் சுமைதாங்கியிற் மனப்பாரத்தை இறக்கி வைத்து விட்டு விறகு கொத்திக் கட்டிக் கொடுத்தார். அதைச் சுமந்து கொண்டு தான் வேதக் கோயிலை நோக்கி நடக்கிறாள்.

சேமக்காலை கழிந்து ஊருக்குள் வந்தாயிற்று. கொலனியிற் படிப்பித்த வேதநாயகவாத்தியார் வீடு இந்தத் தெருவிற்தான் இருக்கிறது. அவர் கண்ணிற் பட்டு விடுவேனோ என்ற பயத்தோடு அவள் நடந்தாள்.

அவர் கொலனியிற் படிப்பித்த காலத்தில் தன் பிள்ளைகளும் படித்தார்கள். தன் பிள்ளைகளுக்கு இராப்பள்ளிக் கூடம் கூட நடத்தியிருக் கிறார் அதுக்கு அவர் காசு வாங்குவதில்லை. ஆனால் வீட்டிலே 'நல்லது நரியது' சமைத்தால் அவருக்குக் கொடுக்கவோ, தன் கணவன் றக்ரரைக் கொண்டு மூதூருக்குப் போகையில் அரிசோ, அவலோ, நெல்லோ அனுப்ப அவள் தவறுவதுமில்லை. அவர் மேல் தந்தையின் பாசம் போன்ற ஓர் பாசம் ........ பரிவு.......

அவர் தன்னை இந்தக் கோலத்திற் கண்டால்.......இந்த மனச்சுமை விறகுக்கட்டின் பாரத்தைவிட அதிகமாய்க் கனக்க ஓட்டமும் நடையுமாய் விரைந்து கொண்டாள். கோயிலை அடைந்து விட்டாள்.

புனித அந்தோனியார் கோயிலின் உள்ளும் புறமும் சனத்திரள். கொட்டியாபுறப்பற்றின் உட்பகுதிக் கிராமங்களிலிருந்து வந்த அகதிகள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலடியில் நின்ற ஒருவர் 'விறகுக்காரர்களும்' வரத் தொடங்கி விட்டார்கள். சுவாமியாரும் மலைக்குப் போயிற்றார். வரச்சுணங்கும். என்ன செய்றது என்று அங்கலாய்த்துக் கொண்டே அவள் தலைச்சுமையைக் கைகொடுத்து இறக்கி, மண் அரித்துக் கொண்டு போய் விடாமல் நிலமட்டம் வரை கட்டிய சுவரிலே வைத்தாள்!

அவள் சும்மாட்டை எடுத்து முகத்தில் வழியும் வெயர்வையைத் துடைத்துவிட்டு நிமிர்கையில் விறகுக் கட்டை இறக்கிய கிழவர் "சுந்தரி நீயா?" என்று அவளை அணைத்துக் கொண்டு விம்மினார்.

சுந்தரியும் அவரை அணைத்துக் கொண்டாள். அணை உடைத்த வெள்ளமாய் கண்ணீர்!

"நானும் அகதிதான் மகள். ஆறுமாசத்துக்கு முன்ன என்ர வீட்டையும் அடிச்சு நொறுக்கி எரிச்சுப் போட்டாங்கள். இப்ப இந்தக் கோயில் வீதியிலதான் இருக்கிறன்" என்கிறார். வேதநாயக வாத்தியார் அழுகையை நிறுத்திக் கொண்டு.

கோயிற் கோபுர உச்சியில் தன் சிலுவைக் கழுவில் மூன்று ஆணிகளிற் தொங்கும் கிறிஸ்துநாதர் அவர்கள் இருவரும் அழுவதைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்.

"அழுகிறவர் பாக்கியவான்கள். ஏனெனில் அவர்கள் ஆறுதல டைவார்கள்" என்றுதான் இன்னமும் அவர் சொல்கிறார்.

**வீரகேசரி மே 1988.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரசிகன்

ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் இருந்த நான் அந்த விஷயத்தைக் கடிதம் மூலம் தெரிந்து கொண்டபோது, மின்னல் தாக்கிய தென்னைமரம் போலக் கருகிச் சாம்பிப்போனேன். அந்த அதிர்ச்சிகளிலிருந்து சுதாரித்துக் கொண்டு மீண்டபோது இடியே விழுந்திருந்த அவன் நிலையை எண்ணிப் பார்த்தேன்.

"வாழ்க்கை வாழ்வதற்கே" எனத் தத்துவம் பேசும் அவன் இந்த அதிர்ச்சியினால் சரத்சந்திரரின் தேவதாசைப் போலத் தன்னையே இழந்து விடுவானோ? அவனால் எப்படி இதனைத் தாங்கிக் கொள்ள முடியும்?

கற்பனை கழுதையைப் போலப் பின்னங்காலால் உதைக்கிறது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விஜயவர்த்தனா விடுதி. நான் விஞ்ஞான மாணவன். அவன் கலைப்பிரிவு. ஆனாலும் இருவரும் ஒரே அறையிற்தான் வசித்தோம்.

அவன் பாடங்களைப் படிக்கிறானா? என்பதில் எனக்கே ஒரு சந்தேகம். என்னேரமும் கலகலப்பாக இருப்பான். மேடைப்பேச்சு, நடிப்பு, எழுத்து, கற்பனை எல்லாவற்றிலுமே அவன் ஒரு தனிப்பிறவி!.

அதனாற்தானோ என்னவோ அவனுக்குப் பல்கலைக் கழகப் பெண்கள் பகுதியில் ஒரு மௌசு.

"கிராமத்து மாணவர்கள் பல்கலைக் கழகத்துக்கு வந்ததும், புதிய சூழ்நிலைகளின் காரணமாக அவர்களின் வாழ்க்கைப் போக்கே மாறுபடுகின்றது! என்று சொல்வதில் உண்மை இருக்கலாம். ஆனால் அவனைப் பொறுத்தவரையில் அவன் தன் கிராமத்திலும் அப்படித்தானாம். போட்டியிட்டு வலைகட்டிப் பிடிக்க வேண்டிய அத்தனை அழகிகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனிடம் சரஸமாகப் பழகினார்கள். அழகான பெண்களுடன் பழகுவதையே அவனும் தன் வாழ்வின் லட்சியமாகக்கொண்டிருந்தான்.

அவனை ஒரு "பெண் பித்தன்" எனச் சந்தேகித்ததும் உண்டு.

ஒருநாள் நான் அவனிடம் கேட்டேன். "ஒருவன் ஒருத்தியைத் தான் காதலிக்கலாம். நீ என்னடாவென்றாற் பல்கலைக் கழகப் பெண்கள் அத்தனை பேரையுமே.........".

நான் சொல்லவந்ததை முடிக்க முன்னரே அவன் பலமாகச் சிரித்துக் கொண்டே கேட்டான்

"காதல் என்றால் என்ன?"

"அதென்னவோ எனக்குத் தெரியாது. ஆனாற் பேராதனைப் பூந்தோட்டத்தைச் சுற்றி மதுரைச் சர்ப்பமாய் வளைந்து ஓடும் மாவலிகங்கைக் கரையில் மணிக்கணக்காகச் சல்லாபித்துப் பேசும் ஜோடிகளைக் காதலர்கள் என்றுதானே சொல்கிறோம்."

"சரிதான். நீ காதலுக்குச் சொல்லும் வரைவிலக்கணத்தை உலகில் எந்தக் கவிஞனுமே இதுவரை சொல்லவில்லை" என்று கெக்கட்டமிட்டுச் சிரித்தான்.

"அப்படியானாற் காமப்பித்துப்பிடித்தா நீ கண்ட கண்ட பெண்களோடு சுற்றுகிறாய்?"

அவன் மீண்டும் உரக்கச் சிரித்துக் கொண்டே சொன்னான். "கண்ட கண்ட பெண்களோடெல்லாம் நான் சுற்றுவதில்லை. சுற்றவும் மாட்டேன். ஆனால் அழகானவைகள் எல்லாமே எனக்குப் பிடிக்கும். அவை பெண்களாயுமிருக்கலாம். அதைக் காதல் என்று நீ கற்பித்துக் கொண்டால் அதற்கு நான் என்ன செய்வது?"

"உன் பேச்சும் போக்கும் எனக்கென்னவோ பிடிக்கவில்லை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் அமைதியாகக் கேட்டான் "கண்டிச் சந்தைக்குப் போயிருக்கிறாயா?"

"போகாமல் என்ன?"

"அங்கே எதையாவது ரசித்துப் பார்த்திருக்கிறாயா?"

"சந்தையிலே ரசிப்பதற்கு என்ன இருக்கிறது? ஏதாவது தேவைப் பட்டால் வாங்குவேன். இதிலே என்ன ரசிப்பு?"

"ஒஹோ! நான் அப்படியில்லை. ஊதாவர்ண பிஞ்சுக்கத்தரிக் காய்களை உட்புறம் காம்புகள் இருக்கும்படியாக வட்டமாக ஒன்றின் மேலொன்றாக அடுக்கி வைத்திருக்கிறார்களே. அந்த அழகை நான் ரசித்திருக்கிறேன். பழுப்பு இலைகளையெல்லாம் களைந்து எறிந்துவிட்டு வெளிர்ப்பச்சை நிற கோவா முட்டைகளை கோபுரக்கலசம் போலக் கூட்டி வைத்திருக்கிறார்களே அதனையும் மெய்மறந்து பார்த்துக் கொண்டிருக் கிறேன். பார்க்கப் போனால் என்றைக்குமே சந்தையிற் கத்தரிப்பிஞ்சோ கோவாவோ வாங்கியதில்லை. ஆனாலும் அவைகளின் அழகை ரசித்திருக்கிறேன்.

"அதற்கும் நீ பெண்களைச் சுற்றிக் கொண்டு திரிவதற்கும் என்ன சம்பந்தம்?"

"சம்பந்தமிருப்பதாற்தான் சொல்கிறேன். அழகி என்று நான் கருதும் பெண்களைக் கூட அப்படித்தான் ரசித்துப் பார்க்கிறேன். எப்படிக் கத்தரிக்காயிலும் கோவாவிலும் எனக்குக் காதல் இல்லையோ அப்படியே நான் ரசித்துப் பார்க்கும் பெண்களிலும் எனக்குக் காதல் இல்லை. கத்தரிக்காயையும் கோவாவையும் எப்படி நான் எனக்காக வாங்கிக் கொள்ளவில்லையோ, அப்படியே எந்தப் பெண்ணையும் மனைவியாக்கிக் கொள்ளும் உத்தேசமும் எனக்குக் கிடையாது."

அவன் கூறும் உவமானங்களும், அவனது விசித்திரமான போக்கும் எனக்குப் புரிய முடியாத புதிராகவே இருந்தன. நான் சொன்னேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆனாற் பெண்கள் எல்லோரும் கத்தரிக்காயோ முட்டைக் கோவாவோ அல்ல, உள்ளமும் உணர்வும் கொண்டவர்கள். உன் ரசிகத்தனம் வெறும் பார்வையோடு மட்டும் நின்று விடுமா? அதற்கும் மேலாகத் தீண்டுமின்பம் தேடி ..............

அவன் மீண்டும் சிரித்துக் கொண்டே "சதைப்பிடிப்போடு சுகந்த மணமும் கொண்ட மாம்பழத்தை வாங்க விரும்புபவன் ஓரோர் வேளை அதைத் தன் கன்னத்தோடு ஒட்டவைத்து ஸ்பரிசித்துப் பார்க்கிறான். ஆனால் அப்படியான அனுபவம் எனக்கு இன்னமும் ஏற்படவில்லை."

"அப்படியானால் உனக்கு என்றுமே காதல் பிறக்காதா?"

"காதல் என்றால் என்ன? அவன் அந்தப் பழைய கேள்வியையே மீண்டும் கேட்டான்.

"எனக்கு பதில் சொல்லத் தெரியவில்லை. மௌனித்தேன். அவன் மீண்டும் பேசினான்.

"ஜீவராசிகள் எல்லாம் தம் வம்சம் நசித்துப் போகாமலிருப்பதற்காக ஆணும் பெண்ணும் சேருகின்றன. அறிவில் மேம்பட்டவனான மனிதன் மட்டும் அப்படிச் சேர்வதற்கு முன் தான் பண்பாடு எனக்கற்பித்துக் கொண்ட நியதிகளுக்குப் பணிந்து ஒழுகுவதைத்தான் காதல் என்கிறார்கள் போலும்"

"சரிதான் இப்போதுதான் நீ வழிக்கு வருகிறாய். உன் வம்சம் நசித்துப் போகாமலிருப்பதை நீ விரும்புகிறாயல்லவா?"

"ஆமாம். அப்படி நான் விரும்பாமலிருந்தால், நான் ஏதோ குறைபாடுள்ள மனிதனாகத்தான் இருக்க வேண்டும்."

"வம்சம் நசித்துப் போகாமலிருப்பதற்கான உன் உள்ளுணர்வின் தூண்டுதலாற்தான் நீ பெண்களின் பின்னாற் சுற்றுகிறாய் என்கிறேன் நான்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லை, இல்லை அழகை ரசிக்கிறேன்"

"இல்லையில்லை. உன் காம இச்சைக்கு நீ இட்டுக் கொண்ட புனிதமான பெயர்தான் ரசிகத்தனம்"

"இல்லை இதுவரை நான் அருணகிரியாக இருந்ததுமில்லை. இருக்கவும் மாட்டேன்"

"இருக்கக் கூடாது என்பதுதான் என் ஆசையும்"

"அதற்காக அழகையே ரசிக்கக் கூடாதென்கிறாயா?"

நான் அமைதியாகச் சொன்னேன். "என்றைக்கோ ஒரு நாள் நீ யாரோ ஒருத்திக்குக் கணவனாகத்தான் போகிறாய். அதன் பின்னரும் தற்போதைய உன் ரசிகத்தனம் தொடர்ந்தால் அப்போதுதான் தெரியும் உன் வாழ்க்கையின் அழகு"

அவனும் அமைதியாகவே சொன்னான் "சொல்லிலே வடிக்க முடியாத நாதஸ்வர இசையின் மெல்லிழை போன்ற வாலிபக் கனவுகள் என்னுள்ளே முதிர்ச்சியடைந்து உடலின் வேட்கையாய்த் தசையின் பிடுங்கலாய் முற்றி, வம்சம் நசித்துப் போகாமலிருக்க நான் யாரையோ தழுவ வேண்டும் என்ற இயற்கை நியதியின் தவிர்க்க முடியாத தேவைக்குப் பின்னால், நான் தழுவிய அந்த ஒருத்தியிலேயே உலகின் அழகை எல்லாம் தரிசிக்க முடியும். ஆனால் ஒன்று நான் தழுவிக் கொள்பவள் நிச்சயமாக அழகியாகத்தான் இருப்பாள்"

"ஓ! வம்சம் நசித்துப் போகாமலிருப்பதற்கா? அதற்கு அழகி ஒருத்திதான் வேண்டும் என்பதில்லையே. குரூபி ஒருத்தியின் மூலமாகவும் அதைச் சாதித்து விடலாம்"

"என்னைப் பொறுத்தவரையில், நான் தேர்ந்தெடுப்பவள் நிச்சயமாக அழகியாகத்தான் இருப்பாள். எந்த நிலையிலும் – நிர்வாணமாக நிறுத்தப்பட்டாற் கூட என் கண்கள் ஒரு அவலட்சணத்தைப் பார்க்காது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அந்த அழகியைத்தான் இப்போது தேடிக்கொண்டிருக்கிறாயா?"

"இல்லை, இப்போது அழகை ஆராதிக்கிறேன்.

எங்கள் பல்கலைக்கழக வாழ்க்கை முடிந்து இருவரும் பட்டதாரிகளாக வெளியேறும் வரை அவன் அழகின் உபாஸகனாகத்தான் இருந்தான். எவ்வளவு சொல்லியும் அவன் தன் போக்கை மாற்றிக் கொள்ளவில்லை. ஆனாலும் அந்த உபாஸகன் எல்லாருமே ஆச்சரியப் படும்படியாக முதல் வகுப்பிற் சித்தியடைந்திருந்தான். இத்தனைக்கும் அவன் கஷ்டப்பட்டுப் படித்ததை நான் காணவில்லை.

பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறிய நாங்கள் அவரவர் ஊருக்குப் போன பின்னர் என் குடும்ப நிலையை உத்தேசித்து நான் உள்ளூரிலேயே விஞ்ஞான ஆசிரியனானேன்.

கலைப்பட்டதாரியான அவனும் தன் சொந்த மாவட்டத்திலேயே ஆசிரியனாகிவிட்டதாகக் கடிதம் எழுதியிருந்தான். அவன் கடிதத்திலிருந்து அவன் போக்கு இன்னமும் மாறாமலிருப்பது தெரிந்தது.

ஒருநாள், திடீரென எந்தவித முன்னறிவிப்புமின்றி என்னிடம் வந்தான். தனியாக அல்ல, ஒரு பெண்ணோடு நிச்சயமாக அவள் அழகியேதான்!

"ஓகோ! கடைசியாய் உனக்கும் காதல் வந்துவிட்டதா?" என்று தனிமையில் அவனிடம் கேட்டேன்.

"இன்னமும் அது பிறக்கவில்லை. கல்யாணமாகினாற்தானே காதலிக்க முடியும்! முதலில் அது ஆக வேண்டும்"

"அது ஆகாமலே ஒருத்தியைக் கூட்டி வந்திருக்கிறாய். இதைக் காதல் என்று சொல்லாமல் வேறு எப்படிச் சொல்வது?

"எப்படியாயினும் சொல்லிக் கொள். என்னைப் பொறுத்தவரை நான் இனிமேற்தான் அவளைக் காதலிக்கப் போகிறேன். அதற்கு முன்னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்யாணம் நடக்க வேண்டும். நீ புதுமைப் பித்தனைப் படித்திருக்கிறாயா?

“கல்யாணம் என்ற பதத்திற்கு அகராதியில் ஓர் அர்த்தம் இருக்கலாம். கவிஞனின் வியாக்கியானம் வேறாக இருக்கலாம். ஆனால் இந்த மகத்தான கலியுகத்திலே கல்யாணம் என்றால் குலப்பிரச்சனை கிளத்தும் கலகாரம்பம் என்று பொருள்! என்று அவன் எழுதியிருப்பது ஊரிலே இப்போது நடந்து கொண்டிருக்கிறது. அந்த மடையர்களைக் கலகம் பண்ண விட்டுவிட்டு நான் இவளைக் கூட்டிக் கொண்டு வந்து விட்டேன்.

“ஆண் சிங்கந்தான்”

“புதுமைப்பித்தனின் கதையின் பெயர்கூட அதுதான். ஆனாற் கதையின் முடிவைத்தான் நான் என்போக்கில் மாற்றிக் கொண்டு விட்டேன்.

அடுத்த நாளே அவனுக்கும் அவளுக்கும் பதிவுத் திருமணம் நடந்தது. தம்பதிகள் சில நாட்கள் என் வீட்டிலேயே இருந்தனர். பின்னர் நான் படிப்பிக்கும் பாடசாலைக்கே மாற்றமும் பெற்றுக் கொண்டான். பின்னர் தனிவீடு பார்த்துக் கொண்டு போய்த் தன் மனைவியோடு வாழத் தொடங்கினான்..

அவனது அழகான அமைதியான வாழ்க்கையைக் காணும் போதெல்லாம் “எதற்கும் ஒரு கால்கட்டைக்கட்டிவிட்டால் பையன் சரியாகிவிடுவான்” என்று ஊர்க்கிழங்கள் சொல்வது எனக்கு நினைவு வந்தது.

ஆனால் எந்தப் பெரியவரதும் உதவியின்றி தானாகவே அவன் தேடிக்கொண்ட அந்தக் கால்விலங்கு.......

யுகமே கணமாக, கணமே யுகமாக அவன் தன் மனைவியோடு வாழ்ந்த வாழ்வு.......

உலகத்து அழகையெல்லாம் அவன் அவளிற் கண்டானா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது அவன் தேடித்திரிந்த அழகு முழுமையுமே அவளிற் சம்பூர்ணமாகிவிட்டதோ

நாட்கள் மாதங்களாகி மடிந்தன. அமைதியான அவனது வாழ்க்கையே எனக்கு அழகாகப் படுகின்றது. அதற்குள் நான் பொருளீட்டும் ஆசையில் ஆபிரிக்க நாடொன்றிற்குப் போய்விடுகிறேன்.

அவனிடமிருந்து கடிதங்கள் வந்து கொண்டிருந்தன. பின்னர் காணவில்லை. கடைசியாக என் மனைவி எழுதிய கடிதத்தில் அச் செய்தி இருந்தது.

"சுந்தரி காலமாகிவிட்டாள்!"

மின்னல் தாக்கிய தென்னை மரமாய்க் கருகிச் சாம்பிய நான் சுதாரித்து எழுந்து கொண்டு அவனுக்குத் தேறுதல் கூறுவதாக எண்ணிக் கொண்டு நீண்ட கடிதம் எழுதுகிறேன்.

வாழ்க்கை நிலையாமை பற்றி நான் படித்த தத்துவங்கள்!

சை. அவனுக்குத் தெரியாதா இவையெல்லாம்?

நான் எழுதிய கடிதத்தைக் கிழித்தெறிகிறேன்.

நேரிலே அவனைக்கண்டு, அவனைக் கட்டியணைத்துக் கொண்டு அவன் இழப்புக்காகக் கதறியழ வேண்டும் போலத் தோன்றிற்று.

ஊருக்குத் திடீரெனப் புறப்பட்டேன்.

*** *** ***

ஊருக்கு மீண்ட நான், முதல் வேலையாக அவனைத் தேடிக் கொண்டு அவன் வீட்டிற்குப் புறப்பட்டேன்.

அவ்வீட்டிற்காலடி எடுத்து வைக்கும் போதே அவ்வீட்டில் ஏதோ ஒன்று இல்லாத குறை என் மனதிற் தைக்கிறது.

முன் மண்டபத்திற் பெரிய அளவிலான அவளது உருவப்படம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்தியமும் வாடாமல் இருக்க வேண்டும் என்பதற்காகப் போலும் அப்படத்தின் மேற் கடதாசி மாலை. படத்திலிருந்து சுந்தரி சிரிக்கிறாள். என் கண்கள் பனிக்கின்றன.

"சங்கர்" மெதுவாக நான் அவனை அழைக்கிறேன்.

அறைக்குள்ளிருந்து வந்தவன் அட்டகாசமாக என்னை வரவேற்கிறான். "வெளிநாட்டிலிருந்து வருபவர்கள் உயர்ந்த ரக விஸ்கி கொண்டு வருவார்கள். நீயும் கொண்டு வந்திருப்பாய் என நினைக்கிறேன்" என்றான் எந்தக் கவலையுமேயின்றி.

என் மனம் துணுக்குற்றது. நான் எண்ணியதுபோலத் தன் இழப்பைத் தாங்கிக்கொள்ள முடியாமற் சரத் சந்திரரின் தேவதாஸ் ஆகிவிட்டானா? நான் என் கண்களைத் துடைத்துக் கொள்கிறேன்.

"அழுகிறாயா? அவன் சிரித்துக் கொண்டே என்னிடம் கேட்டான். எனக்கு வியப்பாக இருந்தது.

அவன் என் கையைப் பிடித்து அழைத்து வந்து இருக்கையில் அமர்ந்தான். நானும் எதிரில் அமர்கிறேன். மேலேயுள்ள அவன் மனைவியின் படத்தையும் அவனையும் மாறிமாறிப்பார்க்கிறேன். எதையுமே என்னாற் பேச முடியவில்லை.

மௌனத்தைக் கலைத்துக்கொண்டு அவன் கேட்கிறான். "இளவரசர் சித்தார்த்தர் ஏன் உலகை வெறுத்தார்?

என்னாற் பதில் சொல்ல முடியவில்லை. தலையைக் குனிந்து கொண்டேயிருக்கிறேன். அவன் முகத்தைப் பார்க்கவே எனக்குத் திராணியில்லை.

அவன் அதே கேள்வியை மீண்டும் கேட்கிறான்.

"இளவரசர் சித்தார்த்தர் ஏன் உலகை வெறுத்தார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஞானத்தைத் தேடிக் கண்டு பிடிப்பதற்காக அவர் உலகை வெறுத்து, வீட்டைவிட்டு வெளியேறினார்"

"அவரை வீட்டை விட்டு வெளியேற்றிய காரணிகள்?

பதில் தெரிந்தும் நான் மௌனமாயிருந்தேன்.

மீண்டும் அவன் மௌனத்தைக் கலைத்துக் கொண்டே "முதுமையின் தளர்ச்சியில் எலும்பும் தோலுமாகிவிட்ட கிழவனையும், நோயில் மெலிந்து சீரழிந்த இளைஞனையும் கண்டாராம். அக்காட்சிகளே அவர் உலகைத் துறப்பதற்கு மூலகாரணிகளாக அமைந்தன"

நான் அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தேன். அவன் உணர்ச்சி வசப்பட்டவனாக மேலே பேசினான். "எனக்கு அப்படிப்பட்ட தரிசனம் சித்திக்காது. ஆகவே நான் உலகை வெறுக்க மாட்டேன்."

சர்வகலாசாலைக்காலத்தில் அவன் பேசும் தத்துவங்கள் நினைவுக்கு வந்தன. அவன் மேலும் சொன்னான் "என் சுந்தரி நோய்வாய்ப்பட்டு நலிந்தோ அல்லது கிழடுதட்டி அவலட்சணமான நிலையிலோ சாகவில்லை. அவளது யௌவனச் சுந்தர உருவம் என் உள்ளத்தை நிறைத்து நிற்கிறது. அந்தச் சௌந்தர்யம் என் மனதில் நிறைந்திருக்கையில் உலகமே எனக்குச் சௌந்தர்யமானதாகத்தான் படுகிறது. அவள் இளமையிற் காலமானதும் நல்லதேதான்."

அவனது விசித்திரமான ரசிகத்தனத்தை என்னாற் புரிந்து கொள்ள முடியவில்லை.

**வீரகேசரி 15.05.1982**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் கடன் காரருக்கு

கார்த்திகை மாதத்துக் கருக்கிருட்டு, மழைவேறு சிணுசிணுத்துக் கொண்டிருந்தது. மழையில்லாவிட்டால் குடிசைக்கு வெளியே வேப்பமரத்தின் கீழ்க் காற்றுப்படவாவது இருக்கலாம். நுளம்புக்கென்று வைத்த புகைச் சட்டியிலிருந்து புகைப்படலம் சுற்றிச் சுற்றி மேலெழுந்து சென்று குடிசை முழுவதையும் நிறைத்துத் திக்குமுக்காடச் செய்தது. நுளம்புக் கடியைவிடப் புகையின் உபத்திரவம் அதிகம் என்று எண்ண மிட்டவராய் புகைச் சட்டியைத் தூக்கித் தாழ்வாரத்தில் வைத்தார். அதிலே தாழ்வாரத்துக் கூரை நீர் சொட்டுகையில் சொய் என்று எழும் ஓசை, சில்வண்டுகளின் கீச்சுக்குரல் நீட்டோசையைக் காலத்துண்டுகளாக வெட்டி வெட்டிக் கொண்டிருந்தது.

கோயில் மணி விட்டுவிட்டு, விட்டு, விட்டுவிட்டு அடித்ததும் வாத்தியார் தன்னையறியாமலே மார்பில் நீண்ட சிலுவையடையாளம் போட்டுக் கொண்டார்.

ஏழரைக்கு அடிக்கப்படும் அந்த மணியோசையைக் கேட்டதும் இறந்தவர்களுக்காகப் பிரார்த்திக்க வேண்டும் என்பது விதி. வேதநாயகவாத்தியார் இறந்தவர்களுக்காகப் பிரார்த்தித்தாரா? அல்லது இறந்து கொண்டிருப்பவர்களுக்காகப் பிரார்த்திக்கிறாரா?

மணியோசையின் நாதம் தேய்ந்து அடங்கியதும் அமைதி யாயிருந்த குடிசை மீண்டும் கலகலப்பாகியது. "ஏழரையடிச்சாச்சு. இனியென்ன? திண்டிற்றுக் கெள்ளார வேண்டியதுதான்" என்று வெறுப் போடு சொன்னார். சகதர்மிணி தட்டுக்களைக் கழுவிச் சோறு போடுகிறாள். குடிசைக்குள் மௌனம் அரசோச்சுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பாடானதும் நான்கு பிள்ளைகளும் பாயை விரித்துப் படுத்துக் கொண்டார்கள். ஓலைச் "செத்தை"யிற் செருகப்பட்டிருந்த சுருட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொள்கிறார். மனைவி சாப்பாடுக்கடையை ஒழித்தாக வேண்டும்.

வெளியே மழை சிணுசிணுத்துக் கொண்டுதானிருந்தது.

அடுத்த வீட்டு வானொலி செய்திகளை ஒலிபரப்பிக் கொண்டிருந்தது. வெளியே எழுந்து செல்ல முடியவில்லை. குடிசையினுள்ளே புழுக்கமும் வெதுவெதுப்பும். வெளியே சிணுசிணுத்த மழை.

சாப்பாட்டுக் கடையை முடித்த அவர் மனைவி கேட்கிறாள் "அடுத்த வியாழன் நத்தாரல்லவா? என்ன செய்றது?"

அந்த வினா காதில் விழாதவராக வாத்தியார் செய்திகளைக் கேட்பதில் மனதை ஒரு நிலைப்படுத்தினார்.

"என்ன நான் கேக்கிறன். கம்மென்றிருக்கிறீர்களே" மனைவி மீண்டும் நச்சரிக்கிறாள்.

இனி இந்தத் தொண தொணப்பு முடியாதென்பதை உணர்ந்த வேதநாயக வாத்தியார். "பேசாமற் கிட. நத்தார் வந்தா நான் என்ன செய்றது? என்று முழங்கிவிட்டுப் பாயிற்சரிகிறார். ஆனாலும் அவர் மனைவியின் நத்தார் விசாரம் அவர் மனதையும் பூவைக்குடையும் வண்டாகக் குடைந்து கொண்டேயிருந்தது.

*** *** ***

இருபதடிக்குப் பத்தடி அளவான அந்த ஓலைக்கொட்டிலிலே பனை ஓலைப்பாயிலே அறிதுயிலிற்கிடக்கும் வேதநாயக வாத்தியார் வேட்டுச்சத்தங்களும் குண்டு முழக்கங்களும், தீ நாக்குகளும் துரத்திய போது அந்தக் குடியேற்றப்பிரதேசத்திலிருந்த மற்றெல்லாரையும் போலவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடுவாசல், தோட்டந்துரவு, மாடுகன்று என்ற எல்லாவற்றையும் விட்டுவிட்டு கூட்டத்தோடு கூட்டமாக மூதூருக்கு வந்தார். எல்லாரையும் போல அவரும் அகதிமுகாமிற் குடியேறினார். ஆனால் அகதியல்ல. ஏனென்றால் அவருக்குச் சுளையாக மாதாமாதம் பென்சன் வருகிறது. அதன் காரணமாக அரசாங்கம் அளிக்கும் எந்த நிவாரணத்திற்கும் அவர் உரித்தானவரல்ல. அரசாங்கம் மட்டும் என்ன? பொது நல ஸ்தாபனங்கள் கூட, அவர் உபகாரச் சம்பளம் பெறுபவர் என்ற காரணத்தால் எந்த உதவியையும் செய்வதில்லை.

ஆனால் அதையிட்டு வேதநாயக வாத்தியார் அலட்டிக் கொள்ளவுமில்லை. மாதாமாதம் தான் பெறும் பென்சன் பணத்தை மனைவியிடம் அப்படியே கொடுத்துவிட்டுப் பேசாமடந்தை போல இருந்துவிடுவார். தன்னோடு சேர்ந்து ஆறுபேர் கொண்ட குடும்பத்தை எப்படித்தான் மனைவி இழுத்துச் செல்கிறாளோ என்ற கவலையையும் அவர் வெளிக்காட்டிக் கொள்வதேயில்லை. உள்ளேயே பொருமிக் கொண்டிருக்கும் அவருக்குச் சித்தப்பிரமையோ என்னவோ!

ஆமாம். அல்லைக்குடியேற்றத்திட்டம் ஆரம்பமான காலத்திலே – முப்பது ஆண்டுகளுக்கு முன்னே அங்கு ஆசிரியராகச் சென்றார் வேதநாயக வாத்தியார். குடியேற்றத்திட்ட ஆரம்பப் பாடசாலையிற் சேவித்துக் கொண்டே வயல் வாய்க்கால் என்றும் பாடுபட்டார். பூமித்தாயும் கண்விழித்தாள். காலப்போக்கில் அவரது குடும்பம் பெருகியது போலவே பணமும் பெருகியது. மாடு, மனை, வயல், தோட்டம் என்று தேடிக் கொண்டு அந்தப் பிரதேசத்திலேயே நிரந்தரப் பிரசையாகிவிட்டார்.

தூரத்தே எங்கோ குண்டுச் சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து துப்பாக்கி வேட்டுக்கள் கேட்டுக் கொண்டிருக்கின்றன.

"வெடிச்சத்தம் கேக்குது" அவர் மனைவி படுக்கையிலிருந்து எழுந்து கொண்டே சொன்னாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆமாம், கேக்குதுதான், தூரத்திலே கேக்குது. ஆமிக்காரன் சுடுறானோ பையன்கள் சுடுறானோ தெரியாது.

"யார் சுட்டாத்தான் என்ன? அது நம்மில படாம ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும். நீங்க என்ன யோசிச்சுக் கொண்டிருக்கீங்க. அட்டம் அயலில ரேடியோவையும் நிப்பாட்டி வெளக்கையும் அணைச்சிற்றாங்க. பேசாமப் படுங்க."

"ஓமோம். மூணுவருசமாச்சு. இந்த வருச நத்தாருக்காவது சாமப்பூசை இருக்கும் என்று நம்பினன். அது சரிவராது போல இருக்கு. எல்லாம் பொறக்கப்போற அந்த ஆண்டவனுக்குத்தான் தெரியும்.

அவர் மனைவி நீண்ட பெருமூச்சு விட்டுவிட்டுத் திரும்பிப் படுக்கிறார்.

வேதநாயக வாத்தியாரும் விளக்கை அணைத்து விட்டுப் படுக்கிறார். வெளியே நாய்கள் சங்கிலித் தொடராகக் குரைத்துக் கொண்டிருக்கின்றன.

* ** * * * * * *

விளக்கை அணைத்து விட்டாலும் தன்னுள்ளே தீக் கொழுந்தாய் அசைந்தாடும் சிந்தனைகளைக் கட்டுப்படுத்த வாத்தியாரால் முடியவில்லை.

இருள் கண்ணுக்குப் பழக்கப் பட்ட சில நிமிடங்களின் பின் அவர் ஒருக்களித்துப் படுத்துக் கொண்டிருக்கும் தன் மனைவியைப் பார்க்கிறார். அவரை அறியாமலே இதயத்தைப் பொசுக்கி நின்ற ஏக்கம் சிந்தனை களையும் சுட்டெரித்து விடப் புகையாகப் பெருமூச்சுவிட்டார்.

ஆமாம். அவர் மனைவி பென்னம் பெரிய கல்வீட்டில் நெல்லிலே புரண்டவள். பாலிலே குளித்தவள். தோட்டத்தில் விளைந்த பயறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளுந்தும் வீட்டிலே மூட்டை மூட்டையாக இருக்கும். இவற்றை யெல்லாம் ஆண்டு அனுபவித்தவள் அவள். இப்போது அவளால் வாயையும், கைகளையும் கட்ட முடியுமா?

பயம்பாதி அச்சம்பாதியாக உடுத்த உடையுடன் ஓடி வந்தவர் களுக்கு உடையென்றும் அதன் பின்னால் பிள்ளைகளின் பாடசாலைச் செலவு, சாப்பாட்டுச் செலவு எனக்கட்டுப்படியாகாமல் வரும் மேலதிக செலவுகளுக்காக கையிலே கழுத்திலே கிடந்தவைகள் மீண்டும் நகைக் கடைக்குச் சென்றுவிட்டன. இப்போது உரித்த கோழிமாதிரி வெறுங் கழுத்துடன் படுக்கிறாள்.

அகதிகளாக வந்த நாளிலிருந்து "மீண்டும் வீட்டுக்குப் போய் விடலாம். நிலத்தையும் தண்ணீரையும் எவரும் கொண்டுபோய்விட மாட்டார்கள். இழந்தவைகளைத் தேடிக் கொள்ளலாம்' என்று எண்ணியவள் மூன்றாண்டுகளின் பின்னர் அந்த நம்பிக்கையை இழந்தே விட்டாள்.

புது உடைகள் குடும்பத்தில் எல்லாருக்கும் தேவைதான். நத்தாருக்காக அல்ல. மானத்தை மறைக்க அவை அத்தியாவசியத் தேவையாகிவிட்டன. எல்லோருக்கும் ஒரு சோடி உடுப்பு வாங்குவ தேன்றாலும் ஆயிரத்தைஞ்ஞூறு ரூபாவுக்கு மேலவேணும். எனக்கு வாற பென்சனில அதைச் செய்ய முடியுமா?

நேற்று வெருகலில் இருந்து வந்த சாமித்தம்பி சொல்லியவை களை நினைக்கிறார். "மாஸ்ரர். வாறவழியில் ஆனைத்தீவு வெட்டையில உங்க மாடுகள் சிலதைக் கண்டேன். வேயன்னாக்குறி சுட்ட உங்க மாடுகள் தான். எப்படியாவது அவைகளைப் பிடிச்சுக் கொத்துக்கட்டைக் காரனுக்கெண்டான குடுங்க. இல்லாட்டி எல்லாமே அனியாயமாய்ப்போய் விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாடுகள் சிலதை விற்றால் நத்தாரைச் சமாளிக்கலாந்தான். ஆனால் அங்கே எப்படிப் போவது?

மாடுகள் என்ன அலுமாரியில வைச்சிருக்கிற கடைச்சரக்கா எடுத்துக் கொடுத்துக் காசு வாங்க? காட்டிலே யாரையாவது கூட்டிக் கொண்டு சென்று அலைந்து பிடிக்க வேண்டும். காட்டில திரியும் போது மற்றவங்க கண்டால்.........?

அப்படி நினைக்கவே அவருக்குப் பயமாக இருந்தது. மழை ஓய்ந்து வாடைக் கடுவல் வீசுகையிலும் அவருக்கு வெயர்த்துக் கொட்டியது துண்டை எடுத்து விசிறிக் கொண்டே "பாப்பம் நாளைக்கு யாராவது மாட்டு யாபாரியை விசாரிப்பம்.........

நீண்ட நேரமாக யோசித்துக் கொண்டிருந்த வேதநாயக வாத்தியார் எப்போது கண்ணயர்ந்தாரோ தெரியாது. அதிகாலையிற் திருந்தாதி மணிச்சத்தம் கேட்டதும் விழித்துக் கொண்டார்.

*** *** ***

கிணற்றடி சென்று முகம் கழுவிக் கொண்டு திரும்பியபோது அவர் மனைவி "கோப்பியக் குடிச்சிற்றுக் கோயிலுக்குப் போங்க" என்றாள்.

"போடி விசரி. நான் சற்பிரசாதம் பெறவேணும்." என்று விட்டுத் தன் சட்டையை மாட்டிக் கொண்டு கோயிலை நோக்கிப் புறப்பட்டார். அவர் 'பழங்காலத்து' வேதக்காரன் 'நடுச்சாமம் தொடங்கிச் சற்பிரசாதம் பெறும் வரை ஒன்றும் சாப்பிடாமலும் ஒன்றும் குடியாமலும், தாம்பூலம் முதலிய புறத்திப் பண்டங்களை வாயிலே போடாமலும் உபவாசமாயிருக்க வேண்டும்' என்று கரவெட்டி வாத்தியாரிடம் சின்ன வயதில் ஒப்புவித்த ஞானோபசேதப் பாடத்தை இன்னமும் அட்சரந்தவறாமல் அப்படியே கடைப்பிடிப்பவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இவர் தான் ஒரு புதினகாரன். இப்ப கோப்பி மட்டுமென்ன. நல்லா வயிறு நெறயத்திண்டிற்றுப் போயும் தேவநற்கருணை எடுக்கிறாங்க" என்று அவர் மனைவி புறுபுறுத்துக் கொண்டாள்.

பூசை முடிந்தது. அபூர்வமாக அன்றைய தினப் பூசைக்குச் சத்தியனும் வந்திருந்தான்.

சத்தியன் ஒரு அபூர்வமான ஆசாமி. ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக் காலத்தில் இருந்து அவனை வேதநாயகத்தாருக்குத் தெரியும். அங்கே தாங்கள் எல்லோரும் அப்ளாச்சாரியாரின் உள நூலை நெட்டுருப்பண்ணிக் கொண்டிருக்கையில் அவன் சாமிநாத சர்மாவின் பொதுவுடமைத் தத்துவ நூல்களைச் சிரத்தையோடு படித்துக் கொண்டிருப்பான். ஆனாலும் எல்லாப் பரீட்சைககளிலும் திறமையாகச் சித்தியடைவான்.

ஆனால் அவன் இப்போது முன்னைப் போலத் தீவிர வாதி யில்லை. அதற்கு அவனே விசித்திரமான ஒரு காரணமும் சொன்னான். "முப்பது வயது மட்டும் ஒருவன் பொதுவுடமைவாதியாக இராவிட்டால் அவனுக்கு இருதயத்திற்கோளாறு. முப்பதுக்கு மேலும் பொதுவுடமை வாதியாக இருந்தால் அவனுக்கு அறிவிலே கோளாறு"

பூசை முடிந்து வெளியேறுகையில் அவன் வேதநாயக வாத்தியாரிடம் சொன்னான் "மச்சான் ஆச்சரியப்படாத. இன்றைக்கு அவட அம்மாட ஆத்ம இளைப்பாற்றிக்காக என்ர மனுசி பூசைக்குக் காசு கொடுத்திருந்தா. கார்த்திகை மாதமில்லையா? என்ர மாமிக்கு இதால இளைப்பாற்றி கிடைக்குமோ என்னவோ? ஆனாப் பூசைக்கு வந்ததால என்ர குடும்பத்தில சமாதானம் நிலவும்." என்றான் சிரித்துக் கொண்டு. பின்னரும் "என்னப்பாயோசிக்கிறா?" என்று ஆர்வத்தோடு கேட்டான்.

"யோசிக்காம என்னடாப்பா செய்றது? நத்தார் வருகுதில்லே. கையில காசில்ல. அதுதான் யோசிக்கிறன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"காசுதானே அதுக்கேன் யோசனை?"

"நான் என்ன உன்னைப் போல ஊரில நெலபதியா வாழ்றவனா? யோசிக்காம என்ன செய்றது?"

"இதுக்குப் போய் இவ்வளவு யோசிக்கிறாயே. சும்மா கெடந்த எங்க ஊரில கலகம்வந்து வீடுகளை உடைச்சாலும் உடைச்சாங்க. அப்படி உடைச்சவங்க நீடுழி வாழ்க" என்று சிரித்தான் சத்தியன்.

"என்னடாப்பா நீ சொல்றா?"

"பின்னென்ன மாஸ்ரர்? அவங்க உடைச்சதினால ஜென்மா ஜென்மத்தில கல்வீட்டைக் காணாதவன் எல்லாம் காசக் கண்டிற்றாங்க. பிழைக்க வச்சிருந்த ஆயுதத்த எல்லாம் வித்துப் போட்டு 'எரிஞ்சு போச்சு' என்று பொய் சொன்னவனுக்கெல்லாம் காசு கொடுத்து ஆயுதங்கள வாங்கச் சொன்னாங்க. சவூதிக்குப் போய்ப் பொறீன் காசு கொண்டு வந்தவனுக்கும் வீடுதிருத்தக் காசு கொடுத்தாங்க"

"அதுதான் சொன்னேனே நானும் என்ர ஊருக்குப் போனா வீட்டத்திருத்தவும், வயலைச் செய்யவும் எனக்கும் காசு தருவாங்க ஆனா இப்ப நத்தார்ச் செலவுக்கு என்ன செய்வது?"

"உங்க கவலய விடுங்க மாஸ்ரர் நத்தாருக்குக் காசெடுக்க நீங்களும் ஒரு பிளான்பண்ணுங்க. ஆத்தில போற தண்ணிய அள்ளிக் குடிக்கத் தெரிய வேணும்."

"பிளானா? என்னடாப்பா பிளான்?

"மாஸ்ரர் சுருட்டுச் சுத்திர தொழில் செய்யப்போறன். இல்லாட்டா அப்பளம் போடப் போறன். அதுவும் இல்லாட்டாச் சைக்கிள் ஒண்ணு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாங்கிற்றுத்தேங்காய்யாபாரம் பண்ணப்போறன். என்று சொல்லிச் சுவாமி யார் மூலம் ஒரு அப்பிளிக்கேசன் போடுங்க"

"இதென்ன கதை கதைக்கிறா. அவங்க கொடுக்கிறதோ எங்கெங்கோ இருந்து வாறதர்மப் பணம். அந்தப் பணத்தைப் பொய்யும் புனை சுருட்டும் பண்ணியா வாங்கவேணும். மேலும் நீ சொல்ற எந்தத் தொழிலையும் நான் செய்யவும் மாட்டன்"

"உங்கள யார் மாஸ்ரர் செய்யச் சொன்னது. சிறிமா காலத்தில மரவெள்ளி நடச்சொல்லி எல்லாப் பிறிண்சிப்பலுக்கும் ஏக்கருக்கு அஞ்நூறு ரூபா. தந்தாங்களே . நம்ம பாடசாலைகளில காணி கூட இருந்ததால நமக்கு இரண்டாயிரம் தந்தாங்க. அதவாங்கிற்று ஒரு மரவெள்ளித்தடி நட்டோமா? அவங்களும் காசத்திருப்பிக் கேட்டாங்களா? அதப் போலத்தான் மாஸ்ரர் இதுவும். உங்களுக்குக் காசு தேவ. அதுக்குத் தேவ ஒரு பொய். 'பொய்மையும் வாய்மையிடத்த புரைதீர்த்த நன்மை பயக்குமெனின்' என்பது ஆனானாப்பட்ட வள்ளுவர் வாக்கு.

"வேணாம்மாஸ்ரர் இது பொதுக்காசு. மனச்சாட்சிக்கு மாறாகப் பொய் சொல்லி வாங்க என்னால ஏலா"

"மனச்சாட்சியும் மண்ணாங்கட்டிம் யாழ்ப்பாண வாசிகசாலைக் குத் தீ வைச்ச போது எல்லாநீதி நூல்லும் செத்துப் போச்சு இல்லாட்டா இருபக்கமும் நாளாந்தம் நடைபெறும்மனிதக் கொலைகளை நியாயப் படுத்துவாங்களா? அந்தப் பொதுப்பணத்தில கடன் எடுத்து யார்யாரோ பத்துச் சதவட்டிக்குக் கொடுக்கிறான். நகை செய்றான். நீங்க மனச்சாட்சி என்று சொல்லிக் கொண்டிருந்தா வாழ்ந்தாப் போலத்தான். பேசாம நான் சொல்றமாதிரி ஒரு அப்ளிக்கேசன் எழுதிப் போடுங்க"

"ஆனா நான் அப்ளிக்கேசனல சொல்ற பொய்யக் குழு ஏற்க வேணுமே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன மாஸ்ரர் பொல்லாத குழு? யார் யாரோ புண்ணியவான்கள் கொடுக்கிறாங்க. யாருக்கோ பெத்த பிள்ளைக்குத் தான்தான் அப்பா என்று பதிவு வைச்ச கதையாக் குழு நடக்குது. தன்ர வீட்டில ஏழை எளியதுகள் வந்து காலுரசிக் கொண்டு நிக்கிறதில இந்தக் குழுவில உள்ள வங்க குரூரமான இன்பங் காண்றாங்க. பிச்சைச் சம்பளத்திலயும் லஞ்சம் வாங்கிற கிளாக்கர் மாதிரி, கொடுக்கிற காசில குழுவும் கொள்ளையடிக்குது. அவனுகளுக்கும் காச விட்டெறிஞ்சா........."

"சேச்சே அப்படியிராது மாஸ்ரர்"

"அதுதான் நான் சொன்னேனே மனச்சாட்சியும் செத்துப் போச்சென்று. செய்ற தெல்லாஞ் செய்திற்றுப் பூசையில 'என்பாவமே என்பாவமே என்பெரும்பாவமே' என்று நெஞ்சில் ஓங்கியடிச்சுப் பந்தியில இருந்து சற்பிரசாதம் பெற்றுக் கொள்பவனச் சாமிமாரும் நல்லவன் என்று நம்பி விடுறாங்க. நீங்கதான் மனச்சாட்சி, மண்ணாங்கட்டி என்று பயப்படுறீங்க"

"சரியப்பா, உன்னோடு தர்க்கம் பண்ண என்னால முடியாது. நீ சொல்றபடி செய்யப் பார்க்கிறன்." என்று அவனைக் கத்தரித்துக் கொண்டு தன் குடிசையை நோக்கி நடந்தார். வேதநாயகம்.

"இறைவா! உனக்கும் சத்திரத்தில் இடம் இல்லாமல் மாட்டுக் கொட்டில்தான் கிடைத்தது. கந்தைத் துணியிலே சுற்றித்தான் உன்னையும் கிடத்தினார்கள். நானும் பொய்யும் புரட்டும் இல்லாமல் மாட்டுத்தொழுவம் போன்ற என் கொட்டிலில் என் பழந்துணிகளோடு உன் பிறந்த நாளைக் கொண்டாடும் மன அமைதியையும் வலிமையையும் எனக்குத் தா" என்று அவர் மனம் மௌனமாகப் பிரார்த்தித்துக் கொண்டது.

**வீரகேசரி 21.12.1980**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கிலி

நான் வடிச்சச் சேன வயல் வரம்பில நிக்கிறன். ஆவணி மாசம். கச்சான் காத்துச் சீறியடிக்கிது. காத்தில வேளாமையெல்லாம் நிலத்தோட விழுந்து படுக்கிது. எல்லாக் கதிரிலயும் தலப்பு நெல் பழுத் திட்டு. இனி எல்லாம் பழுத்திரும். அப்ப காத்தும் விழுந்திரும். மதியமானா இலையே அசையாது. மதியத்திரும்பினா வடக்க மேகம் கறுக்கும். சாய் பொழுதில வாடக்காத்தில மழையும் வரும். அந்த மழைக்கு முன்ன வயல வெட்டணும்.

ஆனா எப்படி வெட்றது? கையில ஒரு சதமில்ல............

இருபத்தைஞ்சி முப்பது வருசங்களுக்கு முன்னால பெருவெளி வயல் விளைஞ்சிற்றெண்டதும் கிண்ணியாவிலிருந்தும் மட்டக்களப்பிலி ருந்தும் வெட்டுக்காரர் வருவாங்க. கோடைப் போகத்தில பத்துக்கட்டு வெட்டினா பதினோராங்கட்டு வெட்டுக்காரனுக்கு மத்தியானச் சோத்துக்கு மட்டுந்தான் வயல்க்காரன் வழிசெய்ய வேணும். அதவிட்டா வேற செலவில்ல. வெட்றவங்க கட்டுக் கட்டித் தூக்கிக் கொண்டு வந்து திடலில சூடு வைப்பாங்க. அட்டமி நவமி கழிச்ச நல்ல நாளாப் பாத்து சூடடிப்பம்.

ஆனா இப்ப அந்த வழக்கம் இல்ல. காலம் மாறிப் போச்சு. கட்டுக்கணக்கில எவரும் வெட்றல்ல. அசலூரில இருந்து வெட்டுக்காறர் வாறதுமில்ல. அதனால ஊரவனுக்குக் கிராக்கி. ஏக்கர்க்கணக்கில கூலி கேக்கிறான். ஏக்கருக்கு ரெண்டாயிரம் ரூபாய். மூணு ஏக்கர் வயலயும் வெட்றதுக்கு ஆறாயிரம் வேணும். மத்தியானச் சோத்துச் செலவு வேற. என்ன செய்றது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்டுக்காறன் காசைச்சுளையா வாங்கீருவான். ஆனா வயலத் துப்பரவா வெட்டுறானா. 'தெண்டைக்குத் தேவையா' வெட்டுவான். வெட்டு வெட்டிக் கொண்டு போகக் கொள பின்னால 'பறிகதிர்' தல நிமிந்து நிக்கும். துப்பரவாக வெட்ட இந்தக் காலத்தில எவனுக்குமே தெரியாது.

அந்தக் காலத்தில நாங்க வெள்ளாம வெட்டினா 'பறிகதிரே' இராது. இப்ப ஆமிக்காரனுக்குப் பயத்தில பிள்ளகளும் கதிர் புறக்க வாறல்ல. அதுகளாவது வந்தா பறிகதிரப் பிச்செடுக்கும். ஆனா இப்ப தாக்கத்திக்குத் தப்புற பறிகதிரயும் பிச்செடுக்க மனிசரில்ல. வெளஞ்சது எவருக்கு மில்லாமக் கந்தில பாதி களத்தில பாதியா அலக்கழியும்.

அது தான் போகட்டுமே. கட்டுக்கள தூக்கியாந்து திடலிலாவது சூடு வைப்பாணுகளா? அதெல்லாம் இந்த நாளயில நடக்காது. திடல் தூரமாம். அக்குத் தூக்கினாக் கழுத்து முறிஞ்சிடுமாம். அதனால வெட்டி வயலுக்குள்ளேயே சூட்டையும் வைப்பாங்க. சூடு வெச்ச கையோட டெக்டர விட்டுச் சூடடிக்கோணும்.

டெக்டர்காரங்க பலர் பயத்தில வயல் பக்கமே வாறல்ல. வரக்கூடிய சிலரக் கெஞ்சோணும். அவன் வாறதுக்கிடயில மழ பிடிச்சாலும் பிடிக்கும். மழவந்தா களங்காய பத்து நாள் பிடிக்கும்.

திடலில இந்தக் கரச்சலெல்லாமில்ல.

சூடடிக்கிற வேலயும் ராவில செய்யேலா. சூரியன் மேற்கில வெல்லம் பத்தைக்குள்ள மறையமுதல் எல்லோரும் வயல விட்டுப் போயிடணும். அதுக்குப் பிறகு கண்டா ஆமிக்காரன் சுடுவான்.

குழப்பத்துக்கு முன்ன இந்தக் கரச்சல் இல்ல. அப்ப பத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனிரெண்டு ஏக்கரெண்டு வெள்ளாமச் செய்தன். விளைஞ்சதும் வெட்டுக் காரங்க வந்திடுவாங்க. வெட்டிக்கட்டிக் களந்தூரமெண்டு முணுமுணுக்காம திடலுக்குத் தூக்கிக் கொண்டு போய் சூடு வைச்சித்தருவாங்க அங்க சூட்ட வைச்சா மழையிர கவனமில்ல. அப்பிடித்தான் மழ பெய்தாலும் ஒரு சொட்டுத் தண்ணி சூட்டுக்குள்ள இறங்காது.

அத்தின படினமாகச் சூடு வச்சி – சிக்காரா மேய்ஞ்சிருவாங்க.

இப்பெல்லாம் சூடாவைக்கிறான்கள்?

இப்ப அடிக்கத்தான் போறீங்களெண்டு வயலுக்குள்ளேயே கட்டுக் கட்டாக் குமிச்சு வைக்கிறான்கள். தச்செயலா மழை வந்தா வயல்காரன் தலயில கைய வச்சிக்குவான்.

அப்ப திடலில சூடு ஏறிய பின்ன சூடடிக்க நாள் பாப்பன். சாத்திரியார் சொல்ற நல்ல நாளில, நடுக்களத்தில பொங்கிப் படைச்சி களத்தின் நடுச் சென்றறில அரக்கைத்தாட்ட புறகு சூட்டில ஏறி வேலக்காரன் கம்பால குத்தி எறிஞ்சி பரப்புவான். பொழுது பத்தைக்க போற நேரத்தில கிடாக்கள் கதிரில வளையும். ரெண்டு 'தொடுவ'க் கிடாக்களும் 'ஓகோ கோ.......... என்னம்மா........... தாயே.....' என்ற குரக்காட்டலுக்கு காது குடுத்து வளையும். சூடடிக்கக் கொள்ள நடுவில நிக்கிற அரக்கன் கிடாய்க்குத்தான் கஸ்ரம்.

கிடாக்கள் குனிஞ்சி வைக்கலைச் சப்பிக்கிட்டே மெதுவாக் கதிர்களில வளையும். சூடு வளைக்கிறவங்க.

இந்த நடைநடந்து – செல்லா, நாம எப்ப கர சேரு வோண்டா

......... ஆ.............

என்ற பாட்டோட அதட்டி விரட்டுவாங்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பநான் வலய எடுத்துக்கிட்டு வீச்சி மடுவுக்குப் போவன். நாலைஞ்சி பாட்டில, ரெண்டு மூணு விராலும் இருவது முப்பது சாவானும் படும்.

துடிக்கத் துடிக்க அறுத்துக்களுவி விராலத் தூள் போட்டு ஒரு குழம்பும், சாவான விலிம்பிக்காய் போட்டு ஒரு புளியாணமும் வைச்சிச் சோத்தையும் ஆக்கி இறக்கினாச் சூடடிக்கிறவங்க ஒரு தரம் குத்திப் புரட்டி – வைக்கல வாட்டி எடுத்து எறிஞ்சிற்று மிச்சத்தக் கூட்டியிருப்பாங்க. அந்த மட்டில விட்டிட்டுச் சோத்தைச் சாப்பிடுவம். பிறகு ஒரு வாய் வெத்தில போட்டிட்டு ஆசறுதியாக மறுபடியும் ரெண்டு வாட்டி வளைக்க மணியெல்லாம் பூப்போல சொரிஞ்சிடும். மாடுகள ஒட்டில மேயவிட்டிட்டு, வேலக்காரன் கம்பால வைக்கல வாட்டி எறிஞ்சிட்டு, பொலியைக் கூட்டி நடுக்களத்தில குவிச்சி முடிக்கக் கொள்ள நடுச்சாமம் தாண்டிரும். அப்பிடியே படுத்திருவம். சாக்கு விரிப்பும் வைக்கல் சூடும் சோக்காரிக்கும்.

சுடுவான்ல 'கலங்கல்' எப்பவும் காஞ்சிக் கிட்டே கிடக்கும். 'சுடச்சுட'த் தெயில போட்டுக் குடிச்சிற்றுத்தான் படுப்பம். விடிஞ் செழும்பினாக் கச்சான் 'புசு புசு' வென்று வீசும் அந்தக் காத்தில பொலி தூத்துவம். பொலி தூத்திமுடியக் கொள்ள பொழுதும் உச்சிக்கு வந்திரும். சாப்பிட்டு கண்ணயந்து.....பொழுது பத்தைக்க போகக் கொள்ள மறுபடியும் சூட்டத்தள்ளுவம்.

இப்படி பத்துப் பனிரெண்டு சூட்டயும் அடிச்சி முடிக்க பதினைஞ்சி பதினாறு நாள் புடிக்கும். சூடடிச்சி முடியும் காட்டிலும் ஆருமே வீட்ட போறல்ல. சூட்டுக் களத்தில துடக்கு ஆகாது. களத்தச் சுத்தி வைக்கல்ப்பிரி கட்டிக் காவல் போட்டிருப்பம். துடக்குக்காரன்கள் களத்துக்கு வரமாட்டான்கள்.

சூட்டுக்களத்திலதான் என்ன சாப்பாடு! பெண்டுகள் அப்பங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வருவாங்க பாலப்பம். நடுவில தேங்காப்பால் தளும்பி மினு மினுக்கும். சிலதில நடுவில தேங்காய்ப்பூவும் பனங்கட்டியும் சேத்துப் பினைஞ்சி போட்டிருக்குங்கள்.

அப்பம் மட்டுமா? களத்துக்குத் தொதல் வரும். கொளக்கட்டை வரும். தயிர் வரும். மீன்வரும். இறைச்சி எடுக்க மாட்டம் அது வராது. சூடடிக்கிறவங்க வயித்துக்கு வஞ்சகம் பண்ணாமச் சாப்பிடு வாங்க, சூட்டுக் களம் முடிஞ்சி ஒழிவு களத்தில அவங்க கணக்கில வாங்கிச் சாப்பிட்டதுக் கெல்லாம் நெல் அளப்பாங்க. அப்பிடிக்குடுத்தாலும் சூடடிக்கிறவங்களுக்குத் தலைக்கு ரெண்டு மூணு சாக்கு நெல்லு மிஞ்சும்.

அந்தக்காலம் இனி எங்கெ வரப் போகுது? இப்ப அதெல்லாம் நினைச்சா இனிப்பாய்த் தானிருக்கு. ஆனா இப்பவெல்லாம் வெட்ட வெட்டுக் கூலிய நினைக்கக்கொள்ள தலையைக் நொறுக்குது.

குழப்பத்தில உள்ளது உடையதெல்லாம் பெய்த்து. அகதி முகாமிலதான் மூணுவரிச மிரிந்தன். இந்த வரிசந்தான் ஊருக்கு வந்து வெள்ளாமச் செய்யிறன். அதுவும் அந்த நல்லாயிருப்பார் விதை நெல்லும் ஏக்கருக்கு ஆயிரம் ரூபாக்காசும் கடனாத் தந்ததால.

போன வரிசம் ஆடி மாசத்தில எங்கட ஊர் வாத்தியப் பொடியன் ‘சாமி விபுலானந்தருக்கு நூற்றாண்டு விழா எடுக்கிறம். அதுக்குக் காசு சேக்க வந்தன்’ என்று லிஸ்ர நீட்டினான். அப்ப எனக்கு கண்ணில தண்ணிதான் தளும்பிச்சு. நாங்க அகதியாயில்லாம வெள்ளாமச் செய்திருந்தா களத்துக்குக் களம் ஆளுக்கொரு சாக்கு நெல்லக் குடுத்திருப்பம். இப்பண்டாப் பொல என்ன? ஆண்டவனும் ஆமிக்காரனும் ரெண்டு பூ முறைக்கு விட்டாங்கெண்டா நாங்களும் எழும்பிக் குந்திடுவம்.

மனிசன் நரகத்துக்குப் போனாலும் அகதிமுகாமுக்குப் போப்படாது. கடசியில அந்த நல்லாயிருப்பார் – அந்தச் சங்கத்துக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னவோ இங்கிலீசிப் பேர்.......வாயில வருகுதில்ல – தந்த மூவாயிரமும் மூணு ஏக்கருக்கு எந்த மூலைக்கு?

இந்தக் காலத்தில வயலடிப்பவனுக்கு நாட்கூலி நூத்தம்பது. அதோட காலச் சாப்பாடும் மத்தியானச் சாப்பாடும்! பெண்டாட்டிர கழுத்திலயும் காதிலயும் கிடந்தத அடவு வெச்சித்தான் வயலை விதைச்சி ஒப்பேத்தினன்.

ஆனா விதைச்சதிக்குப் புறகு காவல் காக்கமுடிஞ்சிதா?

விடியக்குள்ளயும் பொழுது படக்குள்ளயும் சில்லித்தாரா பாட்டம் பாட்டமா வந்து முளையக் குடிக்கும். இப்ப அதுகள் வரக் கொள நமக்கு வயலுக்க நிக்க முடியாது. காலையில ஆமிக்காரன் 'றோட்டக் கிளீயர்' பண்ணின புறகுதான். எட்டு மணிமட்டில வயலுக்க போகலாம். அப்படிப் போய் பொழுது பத்தைக்குள்ள போக முந்தி றோட்டுக்கு கரையேறிரணும்.

ஆத்தாத வெள்ளாமச் செய்ரது. இதத் தெரிஞ்சிதான் முளய வயலில கொஞ்சம் உண்டன அள்ளி எறிஞ்சன். நாலு மூணு நாளைக்குப் புறகுமுளை விடக் கொள பாத்தா பயிர் ஐதாத்தான் தோணிச்சி. ஆனா ஒரு கிழமைக்குப் பிறகு 'கங்களவு' தண்ணி கட்டி ரெண்டு எண்ணெயும் அடிச்ச பிறகு பார்த்தா பயிர் வயலடங்கிலுந்தான் இருந்திச்சி.

குடல முத்தி கதிர் வரக்கொள்ள பன்றிக் காவலுக்குப் போகணும். வயல் காரனிட்டத் துவக்கில்ல. வயல்காரன்ட துவக்கெல்லாம் பறிபோய் பத்துவரிசமாகிது. பண்டிக் காலிறபாடு கொண்டாட்டந்தான். ஒவ்வொண்டும் ஒரு கிடாமாடு போல......ஒரு கிள் வயலில இறங்கினா எல்லாத்தையும் கிண்டி எறிஞ்சிரும். இப்ப சீனவெடி கூடச் சுடேலாது. ஆமிக்காரன் விடமாட்டான். கடையிலயுமில்ல. ஆனா ஆள் கறுப்பக்கண்டாப் பண்டிவராது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் ஆமிக்கேம்புக்குப் போய் கொமாண்டரிட்டச் சொன்னேன். கொமாண்டர் இரவில வயல காவல் பாக்கிறதுக்குக் கடிதம் தந்தார். கடிதம் சிங்களத்தில்— 'சென்றிப் பொயின்றில' தெருவில நிக்கிற ஆமிக்காரனிட்டக் காட்டினன். அவன் அடையாள அட்டய வாங்கி வைச்சிக்கிட்டு வயலுக்க போக விட்டான். இப்பிடி ரெண்டு கிழமையா ராநித்திரை முழிச்சிப் பண்டிக்காவல் பாத்தன்!

ஒவ்வொரு நாளும் பின்னேரத்தில சென்றி பொயின்ரில அடையாள அட்டையைக் கொடுக்கக்க ஆமிக்காரன் சொல்வான் "அங்கிள்! புலிவந்தா நமக்குச் செல்லுங்க"

புலி இரவில வயலுக்க ஏன் வருகுது?

எப்பிடியோ காலம் பெய்த்து. இப்பெ விளஞ்ச வயல வெட்டனும். குழப்பம் தொடங்கினதிலிருந்து அரசாங்கம் கமக்காரரிட்ட நெல்ல வாங்கிதுமில்ல முதலாளிமாருக்குத்தான் நல்ல வேட்டை. அவனுகளுக்கிட்ட வெட்டுக்காசு கடன்வாங்கலாந்தான். தவிச்சமுசல அடிப்பான். அறாவில தருவான்.

மூத்தமகள்ற கழுத்தில கிடக்கும்ரெண்டு பவுண் சங்கிலி மனதிலே மின்னுது. அதக் கேட்டா "நான் தான் மூளியா நிக்கிறன். வாழும் வளரும் குமருமா அப்பி நிக்க வேணும்?" என்று அவள் நெருப் பெடுப்பாள்.

இத எண்ணிக்கிட்டே வயல் வரம்பு வழியாவாறன் பொழுது உச்சியிலிரிக்கி. வாய்க்காலத்தாண்டி – றோட்டில ஏறி ஊருக்க வந்திட்டன். தென்னமர நிழல் மதிய நேரத்தில சுகமாயிரிக்கி.

வயல் விதைப்புக்குக் காசு கடன் தந்த சங்கத்தில வெட்டுக்கடன் கேக்கவும் வெக்கமாயிரிக்கி. அவங்களாத் தந்தாத்தரட்டும். ஆனா அந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசுப்பு அங்கில்ல. நல்ல காலமா அந்தச் சங்கத்தில 'டெக்டர்'யிரிக்கி. அந்தச் சங்கத்துப் பெரியவர் சொன்னார். நீங்க எல்லாம் வயல வெட்டிச்சூடு வையுங்க. ஒரு நாளில வந்து நாலஞ்சு பேர்ர சூட்ட அடிக்கலாம். சூடடிக்கிற காசை நீங்க விதப்புக் கடனோட சேத்துத் தரலாம்.

அந்தப் பெரியையா எப்பிடிச் சொன்னாலும் 'டெக்டர்' றைவர் மனம் வைக்கோணும். புதன்கிழமை நவமி. அது கழிஞ்சா வெள்ளிக்கிழம வயலை வெட்டலாம். வெட்ட வேணும். அதுக்கு முதல் றைவரைப் பாக்கணும். அவன் இப்ப மத்தியானச் சாப்பாட்டிக்கு வீட்ட வந்திருப்பான். நான் அவன் வீட்டப் பாத்து நடக்கிறன். கச்சான் காத்தடிச்சாலும் வேர்த்துப் புழுங்குது.

வெட்டுக் காசுக்கு மகள்றகழுத்தில கிடக்கிற சங்கிலியிரிக்கி. நான் என்ன விக்கவா போறன். அடவு தானே வைப்பன். வெள்ளாம வெட்டினா எல்லா நகையையும் மூண்டு கொள்ளலாம்.

அவள் புறுபுறுப்பாள்தான். அதவிட வேற வழியுமில்ல...........

நான் டெக்டர் றைவர்ர வீட்டுக்கு நடக்கிறன்.

**களம் 1996**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணிச்சல்

நேத்து முழுக்க அடுப்பே மூட்டல்ல. 'மகரி' படக்குள்ளதான் என்ர மகன் நண்டு வித்தேன் என்று சொல்லி நாப்பது ரூபா கொண்டு வந்தான். கடையெல்லாம் பூட்டிற்றாங்க. என்ர மனுஷி பக்கத்து வீட்டில—ஒரு கொத்து அரிசி கடன் வாங்கினா. சோத்துக்குக் கறியும் இல்ல. வளவுக்க நிக்கிற முருங்கையில கீரை பிச்சா. ஊர் படுற பஞ்சத்தில ஒரு முருங்கையிலயும் எல இல்ல. ஏதோ சமாளிச்சம். கழனித்தண்ணியில் அவிச்ச முருங்கைக் கீரையோட சோத்தத் திண்டிற்றுப் படுத்தா நித்திரையா வருகுது? கொட்டுக் கொட்டென்று முழிச்சிக் கொண்டேயிருக்கன். இண்டையப்பாடு ஒருபடியா ஒப்பேறிற்று. நாளைக்கு என்ன செய்றது? ஒரே யோசன. பொறங்கடலுக்குத்தான் போக வேணும். அங்கு போற தெண்டாலும் குடாவத்தாண்டித்தானே போக வேணும். கடலில் எறங்கவே நேவிக்காரன் விடுறான் இல்ல.

யோசிச்சுக் கொண்டே படுக்கன். எப்ப நித்திரையாப் போனனோ தெரியாது. ஆனாலும் தலக்கோழி கூவக்க வழக்கம் போல முழிச்சிற்றன். மூணாஞ்சாமத்தில முழிச்சுத்தான் ஒவ்வொருநாளும் கடலுக்குப்போறது. முழிச்ச உடன, பெரியகுவாட்டி ஓடைக்க போய் தூண்டில் இரைக்கு றால் வடிப்பம். அத்தாங்கப் போட்டுத் தரையோட வழிச்சுப் பத்துப் பதினஞ்சு தரம் தூக்கினா இரைக்கு றால் பட்டிடும். பிறகு தலக்கோழி கூவக்க வள்ளத்தத்தள்ளிக்கொண்டு கடலுக்குப் போவம். எங்கட தோணி, ஆத்தக் கடந்து கடலில எறங்கினப் பொறகுதான் சுபஹூ தொழுறத்துக்கு வாங்குச் சத்தம் கேக்கும்.

இப்பவும் அப்படித்தான் தலக்கோழி கூவக்க முழிச்சிற்றன். மூத்த ரெண்டு பயல்களும் எனக்குப் பக்கத்திலதான் படுத்திருக்காங்க. அவங்களைப்பார்த்தாக் ('கல்பெல்லாம்') எரியுது. அவங்க நல்லா நலவாச் சாப்பிட்டு நாலுமாசமிருக்கும். மூத்த மகன் அபூபக்கர் பள்ளிக்குப் போகாம பெரியகுவாட்டி ஓடைக்க நண்டுக்கூடு போடுறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் காலத்தில நாங்க நண்டைக் கையாலே கூடத் தொட மாட்டம். அது 'ஹறாம்' இல்லாட்டியும் 'மக்கூறு' தூண்டிலில வலயில, நண்டு பட்டாக்கூடக் கழட்டி விட்டிருவம். இப்ப என்ர மகன் நண்டுக் கூடு போட்டு நண்டு பிடிக்கிறான். முஸ்லிம்க தான் மார்க்கெட்டில நண்டு யாபாரம் பண்றாங்க.

நண்டைக் கொழும்புக் கேத்திற யாபாரிக காட்டில நல்ல மழையாம். ஆனா என்ர மகன் கொண்டு போன ரெண்டு நண்டுக்கும் நாப்பது ரூபாதான் கொடுத்தானாம். அந்தக் காசில தான் நேத்தய ஓசீவனம்! அல்லா என்ர குழந்தய இந்தச் சின்னவயசில பாடுபட வெச்சிற்றியே என்று மனசு துடிக்குது. நான் பாயில குந்திக் கொண்டு குறைச் சுருட்டப்பத்த வெக்கிறன். விடியச்சாமக் கூதலுக்கு சுருட்டுப் புகை 'றாகத்தாத்' தான் இருக்கு.

நான் முழிச்சிக் கொண்ட சிலமனைக்கேட்டு ஊட்டுக்குள்ள படுத்திருந்த றாபியாவும் முழிச்சிக் கொண்டு கதவைத்திறக்கிறா. வெளியில வந்தவ கேக்கிறா "ஏன், இந்தச் சாமத்தில எழும்பிற்றீங்க?"

நான் பதில் சொல்லல்ல. இதுக்கு என்னத்தைத் தான் சொல்றது? றாபியா மறுபடியும் கேக்கிறா "என்னையும் எழுப்புறதுக்கென்ன?

நான் இதுக்கும் பதில் சொல்லல்ல. சுருட்டுப் புகையை இழுத்து மூக்காலயும் வாயாலயும் வெளிவிடுறன். றாபியா விறாந்தைத் தொங்கலில இருந்த ஒச்சாயப்புக் குசினியில அடுப்ப மூடித் தேயிலைக்குத் தண்ணி வைக்கிறா. தண்ணிய வைச்சிற்று வெளியில போய்க் கிணத்தடியில முகத்தைக் கழுவிற்று வாறா.

கேத்தல் தண்ணி கொதிச்சிற்றுது. கேத்தல் மூடியைத் தள்ளிக்கொண்டு கொதி தண்ணி வழிஞ்சு அடுப்பை நூக்குது. நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாத்துக் கொண்டு தான் இருக்கன். சுருட்டும் முடிஞ்சு போச்சு. இனி அதை உதட்டிலே கவ்விப் பிடிக்கேலா. சின்னி விரக்கிடை அளவுக்கும் இல்ல. நான் சுருட்ட வெளியிலே தூக்கி எறியுறன்.

அடுப்படிக்க வந்த றாபியா ஜொக்குக்க தேயிலையைப் போட்டுக் கொதி தண்ணிய ஊத்துறா. பொறகு, இளஞ்சிவப்பு நிறத் தேயிலைச் சாயத்தச் சுண்டுக் கோப்பையில ஊத்திவந்து என்னட்டத்தாறா.

"சீனி போடல்லியா?"

"பொழுதுபட்ட பொறதுதான் அபூபக்கர் காசு கொண்டு வந்து தந்தான். அதில நாளைக்குக் கடன் அரிசி வாங்கிக் கொடுக்க இருபத்தைஞ்சு ரூபா போனா, பதினஞ்சு ரூபா மிச்சந்தான். ஆனாக்கடையெல்லாம் பூட்டினதால சீனி வாங்க முடியல்ல முந்த நாள் வாங்கின சீனி ஒரு சொட்டுக்காணும் கிடக்கு. கையில வைக்கிறன். நக்கித் தேயிலையைக் குடியுங்க."

எனக்குப் பெருமூச்சுவருகுது. 'சுபானல்லா என்ன கக்கிசத்த எல்லாம் எங்களுக்கு உட்டிருக்கா." என்று படைச்சவன மௌனமாக் கேட்டுகொண்டே பீச்சாங்கையை நீட்டுறன். நீட்டிய உள்ளங்கையிலே றாபியா சின்னக் கரண்டியால சீனியை வைக்கிறா. நான் சீனிய நக்கிக் கொண்டு தேயிலையைக் குடிக்கிறன். அக்கரைச் சேனைப் பள்ளியில சுபஹு தொழுகைக்கு அழைக்கிற வாங்குச் சத்தம் கேக்குது. றாபியா என்னிட்டக் கேக்கிறா.

"நீங்க கடலுக்குப் போகக்குள்ள சுபஹு தொழுகைக்குப் போக நேரம் இல்ல. இப்பதான் கடலுக்குப் போறதில்லியே. பள்ளிக்கெண்டான போய் அல்லாக் கிட்டத் 'துஆ'க் கேளுங்களன். அந்த வல்ல றகுமான் நம்ம கக்கிசத்த எல்லாம் போக்கி நமக்கு நல்ல 'பரக் கத்தத்' தருவான்.

நான் இதுக்கும் ஒண்ணும் சொல்லல்ல. பள்ளிப்பக்கம் தல வச்சிப் படுக்காத எத்தன 'ஹராமி'கள் இந் ஊரில 'பரக்கத்' தோட இல்லியா? என்று எண்ணிக்கொண்டே கொடியிலிருந்த சட்டையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துப் போட்டுக்கொண்டு விறாந்தைப் பத்தியிற் கட்டியிருந்த ஓடுபன்னாங்கை இழுத்து வழி எடுத்துக்கொண்டு வெளியில போறன்.

அந்த விடியக் காலயில கச்சான் காத்து உசாரத்தான் வீசுது. ஆனாச்சாகப் போற கச்சான். மதியந்திரும்பினா அது செத்து வாடை பேந்து விடும். சில வேளை குன்னாவாடையாய்ப் பெலமாக வீசி, அந்தக் காத்தோட மழையும் வரும். இந்தக்காலத்தில, கெளிச்சல் மீன் நல்லாப்படும்.

நான் தெருப்படலயத் திறந்து 'கொண்டு வெளியில போறன். படம் புதைஞ்ச கடற்கரை மணலில் நடந்து லோஞ்சி கட்ற ஜெற்றிக்குப் போறன். எந்த ஊட்டிலயும் ஆள் புளங்கிற அசுமாத்து இல்ல. நான் நடக்கிறன். கடற்கரையிலே தோணிகளும் பைபர் கிளாஸ் போட்டுகளும் இழுத்து வைக்கப்பட்டிருக்கு. குடாக்கடலில் ரெண்டு என்ஜின் போட்டுகள் நங்கூரம் போட்டு நிக்கு. அவையெல்லாம் வளத்த நாய் முகத்தைப் பாக்கிறாப் போல என்னப்பாக்குது. 'எங்களைத்தள்ளிக்கொண்டு கடலுக்குப் போங்க' என்று அவையெல்லாம் சொல்றாப் போல இருக்கு. இந்த கச்சான் இறுக்கத்தில நெய்மலத்தீவுப் பாரில செம்மீன் நிக்கும். சம்பூர்க்குடாவுக்குள கறுப்புக் கட்டியாச் சூரைமீன் படர்ந்து வரும். கெங்க மோத்து வாரத்தில முள்ளுவாள் படும். சின்னங்க மலைப்பாரில துள்வண்டும் சீலாமீனும் படும். நான் பெருமூச்சு விடுறன்! இந்தக் கடல் மாதா எங்களுக்கு எப்பவும் வஞ்சகம் செய்றதில்ல. தைமாதத்தில கெங்கை ஆத்துவாயில கொடுவாயும் வெண்ணெய்ச் சுறாவும் படும். மடையில முள்ளுவாள படும். கரையிலே டிஸ்கோ வலயில போனா நெத்தலி பிடிப்பம். காத்து இறுக்கம் போட்டாச் சூரையும் கெளிச்சலும். நெய் மலத்தீவுப்பாரில எந்தக் காலத்திலயும் செம்மீனும் பாரையும் பிடிபடும். ஆடி ஆவணியில கணவாய் அத்தாங்கு அத்தாங்காய் அள்ளுவம். இந்தக் கடல் தாயின் மடியில அல்லாஹுத்தாலா எங்களுக்காகப் படைச்சிருக்கிற தெரவிசத்த மனுஷன் பிடிக்கவிடுறான் இல்ல. வள்ளத்தக் கடலில இறக்கினா, அதக் கண்ணாடியில பாத்திட்டு திருக்கிணாமலையிலிருந்து நேவிக்காரன் வெடி வைச்சிக்கொண்டே வருவான். போங்க போங்க எண்டு கடலில நிக்கிறவாங்களைக் கலைப்பான். அதுக்கும் மேல நிண்டாச்சுடுவான். அவனயார் கேக்கிறது? அதுக்குப் பயத்தில இப்ப எவருமே கடலுக்குப் போறல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன வருஷத்துக்கு முந்தின வருசம். தைமாசத்திலே நாட்டில சமாதானம் வந்திற்று என்று ஊரெல்லாங்கத. நாங்க எல்லோரும், சோனவன், தமிழன், சிங்களவன் எல்லோருமே சந்தோசப்பட்டம் அந்தச் சந்தோஷத்தில இந்த ஊர் வேதக்காரச் சனம் எல்லாம் கொழும்புக்கு வந்த தங்கட பாப்பாண்டவரப் பாக்க அள்ளுப்பட்டுப் போச்சுதுகள். போய் வந்த சனம் எல்லாம் புளுகிச்சு, "பாப்பாண்டவரைப் பார்க்கச் சகல வசதியையும் ஆமிக்காரனே செய்து தந்தான். 'வெடு சுடு' எண்டில்லாம எல்லாரோடயும் அன்பாப் பழகினான் எவ்வளவு சந்தோஷமாயிருந்துது".

இந்தச் சமாதானம் நெரந்தரமா நெலைக்கும் என்றுதான் எல்லாரும் நம்பினம். ஆனாமூணு மாசத்தில எல்லாமே போச்சு மறுபடியும் கொழும்பிற்று. சித்திரை மாதத்தில ஒரு இரவு. அன்றைக்குப் பெய்யாமழையும் பெருமழையும். சித்திரையிலயும் மழை பெய்றதா? ஆனா அன்று மின்னலோடயும் முழக்கத் தோடயும் பெருமழை. திடீரென ஒரு முழக்கம் கேட்டுது. எங்கேயோ இடி விழுந்திற்று என்று நினைச்சம். ஆனா விடிஞ்சப் பொறகுதான் கேள்விப் படுறம். 'திருக்கிணமலைத் துறை முகத்தில ரெண்டு சண்டைக் கப்பலப் புலிகள் வெடிவைச்சித்தாட்டுப் போட்டுதாம்!

அதோட சண்டை பிறகும் வந்திற்று. சண்டையெண்டா எவ்வளவு கக்கிசம்!

இப்படித்தான் தொண்ணூறாம் ஆண்டிலயும். இந்தியன் ஆமி மூட்டைக் கட்டிற்றுப் போயிற்று. பொடியன்கள் ஊருக்குள்ளே திரியிறாங்க. ஆமிக்காம்புக்குப் பக்கத்திலே சென்றி கட்டுனாங்க. திடீரென்று ஒரு இரவு இரண்டு பக்கத்தில இருந்தும் வெடிச்சத்தம் கேக்குது.

பொடியன்களைத் துரத்துறதுக்காகக் கடலில கண்போட்டில இருந்து செல்லடிக்கிறாங் நேவிக்காரன் ஷெல் அடிச்சதில அக்கரைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேனையிலயும் வேடங்கந்திலயும் பலருக்குக் காயம். ஆறு முஸ்லீம் ஆக்கள் செத்திற்றாங்க. கடற்கரையிலிருந்த நாங்க எல்லோரும் ஷெல்லடிக் குப் பயந்து ஊருக்கு ஓடுறம். பெரிய பாலப் பள்ளிவாசலில ஆகாயக் கப்பல் குண்டு போட்டதில ஒம்பது பேர் மவுத்தாயிற்றாங்க. அந்த ஜனாசாக்களையெல்லாம் அடக்கம் பண்ண நானும் போனன்! அந்தக் கோரத்த இப்ப நெனைச்சாலும் குல நடுங்குது. பொறகு பொறகு ஆமிக் காரன்ர கை ஓங்கிற்று. நாங்க எல்லாம் பழயபடி எங்க வீட்டுக்குத் திரும்பி வந்திற்றம்.

கடற்கரையோரமா நடந்து நான் ஜெற்றியடிக்கு வந்திற்றன். பலார்பற்றி விடியுது. நெலம் நல்லாத் தெளிஞ்சிற்று.

நான் வடக்க பாக்கிறன். பெரியங்க மலைத்தீவு வெளிச்ச வீட்டில இன்னமும் முணுமுணுக்கென்று பச்சையும் சிவப்புமா லைற் எரியுது. தீவுக்குப் பின்னால, துறைமுகத்துக்கு வெளியில வேப்பங்குடாவக்குள்ள நிக்கிற 'கொட்டக்கப்பல்' தெரியுது. அந்தக்கப்பல் இன்றைக்குப் 'பிறிமா'ப் பாலத்துக்குப் போய்க் கோதுமக் கொட்டய இறக்கும். கொட்டக்கப்பலுக்குப் பக்கத்தில இன்னொரு சரக்குக் கப்பலும் நிக்குது. துறைமுகத்துக்குள்ள எத்தன கப்பல் நிக்குதோ? இங்க நின்று பார்த்தா ஒண்ணும் தெரியாது. துறைமுகத்துக்குள்ள கிழக்குப் பக்கமாக நேவிக்கப்பல்களும், பீரங்கிப்படகு களும் அணி அணியா நிக்கும். அப்படி நிண்ட கப்பல்களில ரெண்டைத் தான் கடலால நீந்தி வந்து குண்டு வைச்சி ஒடைச்சானுகளாம். அந்தப் பயத்தில கொட்டியாரக் குடாவில எந்தத் தோணியையும் இறங்க விடுறான் இல்ல. அதுக்குக் கடல் வலயத்தடை என்று அழகான பெயர்.

ஜப்பான்காரன் திருக்கிணாமலயில குண்டு போட்ட உலகச் சண்டையிலயும் கடல் வலயத்தடை போடல்லியாம் என்று சின்னப்பா சொன்னார். அப்ப நான் பொறக்கல்லியாம். அந்தச் சண்டைக்க திருக்கிணாம லைத் துறைமுகம் முழுக்கச் சண்டைக்கப்பல் நெறைஞ்சிருந்ததாம். சிங்கப்பூர் பிடிபட்ட பொறகு திருக்கிணாமலைத் துறைமுகந்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளைக்காரனுக்குத் தஞ்சம் கொடுத்ததாம். அந்தக் கெடுபிடியிலயும் மீன் வள்ளங்கள் போக வெள்ளைக்காரன் தடை போடல்லியாம். சின்னப்பா தான் சொன்னார்.

கடலுக்குப் போகப்படாது என்று தடபோட்டதுக்குப் பொறகு கொஞ்சநாள் நிவாரணம் தந்தாங்க. எங்க வூட்டில நாங்க ஐஞ்சு பேர். ஒருமாசம் முன்னூாத்திச் சொச்ச ரூபாய்க்கு ரேசன் அரிசியும், சீனியும் பருப்பும் கிடைச்சிது. அது எந்த மூலைக்கு. ஆனாக் கொஞ்ச நாளில அந்த நிவாரணத்தையும் நிப்பாட்டிற்றாங்க. இப்ப அந்தப் பிச்சையும் இல்லாம அலக்கழியிறம். எம் பீற்றச் சொல்லிப்பாத்திற்றம். அம்மாவுக்கு எங்க மீன்பிடிச்சங்கம் தந்தியடிச்சுது. ஊர்வலமா ஏ.ஜி.ஏட்டப் போய்ப் பிட்டிசம் கொடுத்தம். எதுக்கும் ஒண்ணுமே நடக்கல்ல. இப்ப மீன் பிடிக்கிறசனம் எல்லாம் பட்டினிகிடக்கு!.

ஜெற்றியிலிருந்த கடையெல்லாத்தையும் திறக்கிறாங்க. ஏழரை மணிக்குத் திருக்கிணாமலைக்குப் போற லாஞ்சுக்கும் சனம் வரத் தொடங்கிற்று. வந்த சனம் ஐடின் காட்டைக் காட்டி, நெரையில நிண்டு பேர் பதியுது. கட்டியிருக்கிற லாஞ்சுக்குள்ள ஆமிக்காரன் ஏறிச் செக் பண்ணின பிறகுதான் சனத்தை லோஞ்சில் ஏறவிடுவான். அதுவரைக்கும் வந்த சனங்கள் ஏறுவெய்யிலில தேத்தண்ணிக்கடை ஒச்சாப்பில ஒதுங்க வேணும். சொணங்கச் சொணங்கத் தேத்தண்ணிக் கடைக்காரனுக்கு நல்ல யாபாரம். கடைகளில அலுமாரிக்க வணிஸ், இடியப்பம், புட்டு, கெழங்கு ரொட்டி, பயத்துருண்டை, பராட்டா எல்லாம் இருக்கு. பாத்தா நாவூறுது. ஆனா எதையும் வாங்க என்னட்டக் காசில்ல.

கடலுக்குப் போய் வந்து வாடியில மீனக் குடுத்திற்று மடி நிறையக் காசோட வீட்ட போகக்க மூணுபிள்ளைகளுக்கும் கிழங்கு ரொட்டியும் பயத்துருண்டையும் வாங்கிட்டுத் தான் போவன். என்ர சின்னமகள் கெழங்கு ரொட்டி தின்னமாட்டாள். உறைக்கும் என்று சொல்லுவாள். அது அந்தக் காலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பவும் இந்தக் கொட்டியாரக் குடாக்குள்ளயும் கோணேசர் மலையடியிலயுந்தான் தடை போட்டிருக்காம். வடக்கே நிலாவெளி, குச்சவெளிப் பகுதியில புறங்கடலில மீன்பிடிக்கத் தடையில்லியாம். துறைமுகத்துக்க நிக்கிற கப்பலக் காப்பாத்த வேணுமாம். கொட்டியாரக் குடாவில நின்று பார்த்தாத் திருக்கிணாமலைத் துறைமுகம் நேரதான் இருக்கு.

ஏறு வெய்யில் நெத்தியப் பொசுக்குது. எத்தன நாளைக்கு இப்படிக் கஸ்டப்படுகிறது? நாளைக்கு வள்ளத்தத்தள்ளிற்று நிலாவெளிப்பக்கம் போக எண்டுதான் இருக்கன். ஆனா அங்க போறதுக்கும் குடாவுக்குள்ளால தானே போக வேணும்.நேவிக்காரன் கண்டாச்சுடுவான்.

இந்தா, இப்பவும் நேவிக்காரன்ர போட்குடாவுக்குள்ள ஓடித்திரியுது. நெய்மலைத் தீவருகால சம்பூரைப் பாத்துப் போகுது. நாளைக்கும்போகும்.

போனால் என்ன? மிஞ்சிப் போனாச்சுடுவான். இப்படிச் சோறு கஞ்சியில்லாம நாளாந்தம் கொஞ்சம் கொஞ்சமாச் சாகிறதப்பாக்க ஒரேயடியாச் சாகிறதும் நல்லதுதான். ஆனா என்ர புள்ள குட்டி?

சுபானல்லாஹ்! என்ர குஞ்சுகள நீதான் காப்பாத்த வேணும். அதுகளுக்காகத்தான் நான் நாளைக்கு வள்ளத்ததத் தள்ளிக்கொண்டு போகப் போறன்.

எல்லாத்துக்கும் யாறப்பில் ஆலமின்! நீதான் இருக்கா.

**சரிநிகர் 1997**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகி

திருக்கொட்டியாரப்பற்று மூதூரைச் சேர்ந்த வேதநாயகம் அவர்கள் முப்பத்தைந்து ஆண்டுகளாக நாட்டின் பல்வேறிடங்களிலும் அரசாங்க சேவகம் பண்ணி, அறுபதாம் வயதில் ஓய்வு பெற்றபின்னர் இந்தநாட்டிலே 'இருண்ட ஜுலை' எனப்பின்னாற் குறிப்பிடப்பெற்ற ஆடிக்கலவரங்கள் வெடித்தன.

கலவரங்கள் வெடிக்க முன்னரே அவர் தன் சொந்த ஊருக்குப் பத்திரமாக வந்துவிட்டார். முழுநாட்டையுமே அல்லோலகல்லோலப் படுத்திய கலவரம் ஈழத்தின் கிழக்கு மூலையில் அமைந்துள்ள மூதூரை வந்தடையவில்லை.

தன் அறுபதாண்டு வாழ்வையும், தாம்பிறந்த சமூகத்தோடும் ஊரோடும் ஒட்டாமல் ஓடும் புளியம்பழமும் போல் வாழ்ந்த வேதநாயகத்தார் தன் மீதி வாழ்வையும் அப்படியே வாழ்ந்து விடுவது எனத் தீர்மானித்துக் கொண்டார்.

ஆனாலும் அவருக்குத் தேவைகள் இன்னும் அதிகமாகவே இருந்தன. கிடைத்து வந்த மாதச் சம்பளம் திடீரென நின்று விட்டதால் அவர் சற்று நிலைதளர்ந்துதான் போனார். குடியிருக்க அரசாங்கக் 'குவாட்டர்ஸும்' இனிக்கிடையாது!.

எனவே மூதூருக்கு மீண்ட வேதநாயகத்தார் தனக்குக் கிடைத்த கொம்பியூட்டர் பென்சன், தன் சேமிப்புத் தொகை ஆகியவற்றைக் கொண்டு தன் தாயதி வீட்டைத்திருத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அந்தவகையிற் கையிருப்பு முழுவதுமே செலவாகிவிட்டது. இனிமேல் மாதாமாதம் வரும் பென்சன் பணத்தைக் கொண்டுதான் குடும்பத்தை ஓட்ட வேண்டும்! இந்த நிலையிற் சர்வகலாசாலையிற் படித்துக் கொண்டிருக்கும் தன் இரண்டு இளைய புதல்வர்களுக்கும் மாதாமாதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிசமான தொகை வேண்டும். அதற்காகவாவது ஏதாவது வேறு தொழில் ஒன்றை அவர் செய்தே ஆகவேண்டும்!

கிராமத்தவர்கள் அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறினால் அவர்கள்செய்வதற்கு ஊரில் எத்தனையோ வேலைகள் இருந்தன. கையிலுள்ள முதலைக் கொண்டு விவசாயத்தில் ஈடுபடுவார்கள் பலர். வேதநாயகத்தார் கிராமத்திலே பிறந்தவரானாலும் எட்டாவது வயதிலேயே மட்டக்களப்புப் பட்டினத்து ஆங்கிலப்பாடசாலையில் விடுதி மாணவனாக இருந்து படித்தவர். படிப்பை முடித்து 'கிளறிக்கல்' பரீட்சையிற் சித்திய டைந்த பின்னர் கொழும்புப் பட்டினத்திலும் மாகாணத்தலை நகர்களிலும் அரசாங்க சேவை செய்தவர். 'நெல்லுக்காய்ச்சிமரம்' இருப்பதாக மட்டுமே அவரது விவசாய அறிவு இருந்தது. இந்த நிலையில் அவர் விவசாயி ஆவது எப்படி?

ஆனாலும் உத்தியோக 'பருவத்தில்' தட்டச்சுச் செய்தல், கணக்கெழுதுதல் ஆகியவற்றிற் 'புலி'யாகவே இருந்தார். பட்டினக்கரையாக இருந்தால் வியாபாரத் தலங்களிற் கணக்கெழுதி வருமானம் தேடலாம். வருமானவரி கட்டுபவர்களுக்குப் பொய்க்கணக்கு எழுதிக்கொடுத்து, அரசாங்கத்தை ஏமாற்றி, அப்படி ஏமாற்றியதற்குப் பிரதிபலனாக வருமான வரி கட்டுபவர்களிடமிருந்து கணிசமான தொகையைச் சன்மானமாகப் பெறலாம்!

ஆனால் கிராமத்திற் கணக்கெழுத வேண்டியதாகப் பெரிய வியாபார நிறுவனங்களுமில்லை, வருமானவரி கட்டுபவர்களுமில்லை.

நாட்டிலே கலவரங்கள் நடந்து கொண்டிருந்தமையினால் மீண்டும் பட்டினம் போய்ப் பிழைக்க அவர் குடும்பத்தினர் அவரை அனுமதிக்கவுமில்லை.

ஆங்கிலத் தட்டச்சு வகுப்பு நடத்தலாம் பிள்ளைகளுக்கு ஆங்கிலம் சொல்லிக் கொடுத்து வருமானம் தேடலாம் என்றெல்லாம் திட்டமிட்டார் வேதநாயகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாற் கிராமத்தில் இவை ஏதுமே சாத்தியப்படவில்லை.

இந்த நிலையிற்தான் இரண்டு வருடங்கள் கழிந்த சித்திரை மாதத்தில் விடுதலைப் போராளிகளின் முதற் கண்ணிவெடி மூதூரில் முழங்கியது. படையினர் சிலர் மரணமடைந்தனர். நாட்டிலே நடைபெற்றுக் கொண்டிருந்த உள்நாட்டுப்போர் அமைதியாகவிருந்த மூதூர்ப் பிராந்தியத் திற்கும் வந்து விட்டது.

அந்தக் கண்ணிவெடியைத் தொடர்ந்து கொட்டியாரப் பற்றுக் கிராமங்கள் எல்லாமே அரசாங்கத்தின் பயங்கரவாதத்திற்கு உள்ளாயின. கிராம மக்கள் எல்லாருமே அகதிகளாகி மூதூர் மாதா கோயிலடியிற் குவிந்தார்கள். பிராந்தியம் முழுமையுமே தேடுதல்கள், கைதுகள், காணமற்போதல், கொலை, தீவைப்பு.............

சிறுவர்களின் ஓலம்!

கைம் பெண்ணாகிவிட்டவர்களின் கதறல்!

எங்குமே அழுகையும் கூக்குரலும்!

இதுவரை ஊரிலே பெயர்ப்பலகையை மட்டும் மாட்டிக் கொண்டு அசமந்திருந்த தொண்டர் ஸ்தாபனம் ஒன்றுக்கு நித்திய வேலை கிடைத்தது.

அகதிகளுக்கு உணவுப்பொருட்கள், பால்மா, உடுதுணி, சமையற்பாத்திரங்கள், பாய் முதலான அத்தியாவசியப் பொருட்களை வெளிநாட்டுப் பண உதவியில் இயங்கும் அந்த ஸ்தாபனம் கொடுத்தது. விதவைத்தாய்மாருக்கும், தொழிலை இழந்தவர்களுக்கும் தொழில்வாய்ப்புத் தேடப் பண உதவியளித்தது. இந்த வேலைகளையெல்லாம் செய்றவதற்காக வேதநாயகத்தாரையும் வேலைக்கமர்த்திக் கொண்டது. 'தானும் தன் குடும்பமும்' என்று வாழ்ந்த வேதநாயகத்தாருக்குத் தன் குடும்பத்தை ஈடேற்றுவதற்கு வேண்டிய மேலதிக வேலை கிடைத்தே விட்டது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த ஸ்தாபனம் சாதாரண மக்களோடு பழக வேண்டியதாயிருந் தது. வேதநாயத்தார் எக்காலத்திலும் 'உலகத்தோடொட்டி' வாழ்ந்தவரல்ல. தனது உத்தியோக மிடுக்கைக் காட்டிக் கொண்டு நெருங்கிய உறவினர்க ளோடு கூட ஒட்டி வாழாதவர் அவர். உறவினர்களும் அவரைப் 'பெரு மைக்காரன்' என்று தள்ளியே வைத்திருந்தார்கள். கொலோனியல் காலத்து ஆங்கிலக்கல்வியும், விடுதிவாசமும் அவரைத் தனிமனிதனாக்கியிருந்தன. மக்களோடு தொடர்பு கொள்ள வேண்டிய ஸ்தாபனத்தில் வேலைகிடைத் தும் கூட அவர் முன்னைப் போல உத்தியோக மிடுக்குடனேயே வாழ்ந்தார்!

அவரது ஸ்தாபனம் வெளிநாட்டுப் பண உதவியிலிருந்து, உள்நாட்டு அகதிகளுக்குப் பொருளுதவியும் பணஉதவியும் செய்து கொண் டிருந்தது. எல்லா உதவிகளும் வேதநாயகத்தாரூடாகவே மக்களுக்குச் சென்றது. அது வேதநாயகத்தாருக்கு மிக்க மகிழ்ச்சியைக் கொடுத்தது.!

அனாதைகளும், ஏதிலிகளும் அவரிடம் வந்து தங்களுக்கு உதவி கிடைக்கும் படிச் சிபார்சு செய்யக் கோரும் போதெல்லாம் அவர் மனதிலே ஒரு குரூரமான மகிழ்ச்சி! எல்லா உதவிகளும் தன்னாற்தானே அகதி மக்களுக்குக் கிடைக்கிறது என்ற எண்ணம் அவரது பெருமித உணர்வை மேலும் வளர்த்தது!

ஒருதடவை அவரது நெருங்கிய உறவினர் தன் சுயதேவைக்கு அவரிடம் 'கைமாற்றுக் கடன்' கேட்டார். அதற்கு வேதநாயகத்தார்.

'இப்ப கொஞ்சத்துக்கு முன்னர்தான் இந்தக் கையால ஒண்ண ரைலட்சம் ரூபா எண்ணிக் கடன் குடுத்தன். ஆனா இப்ப என்ர கையில ஒரு சதமும் இல்ல'

ஆமாம், தெருத்தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைக்கும் கைங்கர்யத்தில் அவருக்கு உள்ளூரப் பெருமை!

காலம் ஓடிக் கொண்டேயிருந்தது. குரூரமாக நடந்து கொண்டி ருந்த உள்நாட்டு யுத்தம் 'சமாதானத்திற்காக யுத்தம்' என்ற புதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோஷத்தோடு மென்மேலும் மக்களை அகதிகளாக்கிக் கொண்டிருந்தது.

இரண்டாவது மகாயுத்தகாலத்திற் சிலர் திடீர்ப்பணக்காரர் ஆகியது போல, வேதநாயகத்தாரும் பணக்காரராகிக் கொண்டிருந்தார்! அவருக்கென்ன? கை நிறையக் கிடைக்கும் அரசாங்கப் பென்சன், தர்மஸ்தாபனம் அவருக்கு வழங்கும் மாதவேதனம், அந்தத் தாபனம் மூலம் நன்கொடைகளும், ஐந்து இலக்கத் தொகை கடனும் பெற்றவர்கள், தெரிந்தும் தெரியாமலும் அவருக்குக் கொடுத்த அன்பளிப்புகள், வீட்டுப் பாவனைப் பொருட்கள், உணவுப் பொருட்கள், குடிசைகள் அமைப்பதற் கான மரங்கள், சீமெந்து, கூரைத்தகடுகள் ஆகிய பொருட்களை மொத்த மாகக் கொள்வனவு செய்தபோது, அவற்றை விநியோகித்தவர்கள் தாராள மாகக் கொடுத்த 'கொமிசன்' என்ற சன்மானம்................

லஞ்சமா?

இல்லவே இல்லை. 'தேன் தொட்டவன் கை நக்குவான்' என்ற சம்பிரதாயச் சொற்சேர்க்கையில் எல்லாமே அடங்கி விட்டன. லஞ்சம் என்ற பேச்சுக்கே இடமில்லை!

வேத நாயகத்தாருக்கு ஊரிலே ஒரு மதிப்புக்கூட ஏற்பட்டது. ஊரோடு ஒட்டாதவன் என்ற அவச்சொல் கூட மறைந்து விட்டது. அவர் மூலம் அந்த ஸ்தாபனத்திற் சில உதவிகளைப் பெற வேண்டிய மக்கள் அவருக்குக் காட்டும் மரியாதையை மதிப்பு என்பதா? கூழைக்கும்பிடு என்பதா?

கோரமான உள்நாட்டு யுத்தம் இப்பிராந்தியத்தின் கடின உழைப்பாளிகளையும், தன்காலிலே நிற்க முடியாதவர்களாகப் பலவீனமாக்கி விட, வேண்டியவர்களுக்கும், வேண்டாதவர்களுக்கும் கூனிக் குறுகிக் கூழைக் கும்பிடு போடுவது எங்கும் சகஜமாகிவிட்டது. அக்கூழைக்கும் பிடுகளையும் கூளற்குறுகல்களையும் தனக்குக் கிடைத்த மரியாதையாக எண்ணிக் கொண்டு வேதநாயகத்தார் பூரித்துப்போனார். அந்தப் பூரிப்பில் ஊருக்குள் இறுமாப்போடு நடந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. அவர் ஊருக்குள் நடக்கவே தேவையில்லை. அவரை வீட்டிலிருந்து காரியாலயம் அழைத்துச் செல்ல ஸ்தாபனத்தின் கொடிகட்டிய வாகனம் வந்தது. அந்த வாகனத்திலேயே கொட்டியாரப் பற்று முழுதும் சென்று தம் வேலைகளைப் பார்வையிட்டார். அந்த வாகனத்திலேயே பொருட் கொள்வனவு செய்யக் கொழும்பிற்கும் சென்றார். பிறந்த ஊர் மக்களோடு அவர் ஒட்டாதது போலவே, அவர் பிறந்த மண்ணிலும் அவர் பாதங்கள் ஒட்டவில்லை. இதற்குட் சர்வகலாசாலைப் படிப்பை முடித்துக் கொண்ட பிள்ளைகள் இருவரும், ஐரோப்பிய நாட்டுக்கு 'அகதி'களாக அனுப்பப்பட்டும் விட்டார்கள்!

காலம் ஓடிக் கொண்டிருந்தது. ஒரு நாள் வேதநாயகத்தார் 'கதும'மெனக் காலமானார். ஊர் மக்கள் எண்ணியது போல அவர் இறப்பிற்குத் தேவர் சினமோ, தெய்வக்குறையோ காரணமல்ல! மாரடைப்புத் தான் காரணம் என்று ஆங்கில வைத்தியர்கள் அடித்துச் சொன்னார்கள்.!

என்னதான் ஊரோடு ஒட்டாதவராக வாழ்ந்தவர் என்றாலும் அவர் இறப்பைக் கேட்ட இனசனம் முழுவதும் அவர் வீட்டிற் குழுமிப் பிலாக்கணம் வைத்தது. பின் வெற்றிலையை அரைத்துக் கொண்டே 'ஊர் வலாய்களை' அலம்பியது.

பல்வேறிடங்களிலிருந்து மலர்வளையங்கள் வந்தன. அனுதாபச் செய்திகள் குவிந்தன. அந்தத் தாபனத்தோடு தொடர்புடைய மக்களும் அரசாங்க உத்தியோகத்தர்களும் அணி அணியாக வந்து பிரேதப் பெட்டிக்குட் கிடத்தப்பட்டிருந்த வேதநாயகத்தாருக்குச் சிரக்கம்பம் செய்து மரியாதை செலுத்தினர்.

பிரேத அடக்கத்திற்கு அந்தத் தர்மஸ்தாபனத்தின் தலைவரே கொழும்பிலிருந்து வருகை தந்திருந்தார். மேலை நாட்டுச் சம்பிரதாயப்படி அவர் இரங்கலுரை நிகழ்த்துகையில் 'காலஞ்சென்றவர் மக்களுக்குச் சேவை செய்வதற்காகவே, அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்றபின்னும் எமது ஸ்தாபனத்திற் சேர்ந்து அயராது உழைத்தார். அவர் மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவை செய்வதற்கென்றே பிறந்த மகத்தான மனிதர். பெரிய தியாகி' எனக்குறிப்பிட்டார்.

"ஆம், இந்த உள்நாட்டு யுத்தம் உற்ற இடத்தில் உயிர்வழங்கவும், பற்றலரைக் கண்டாற் பணியாதிருக்கவும் திராணிபடைத்த இலட்சிய நோக்குடைய இளைஞர்களை மட்டுமல்ல, வேதநாயகம், போன்ற சில 'தியாகி'களையும் கூடச் சிருட்டித்திருக்கிறது" என இரங்கலுரையைக் கேட்ட ஆசிரியர் ஒருவர் தனக்குட் சொல்லிக் கொண்டது எவருக்குமே கேட்கவில்லை!

**தினக்குரல் 1977**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆசிரியரின் பிறநூல்கள்

| | |
|---|---|
| நாவல்கள் | : கொழுகொம்பு |
| | கிரௌஞ்சப் பறவைகள் |
| | ஒரு வெண்மணற் கிராமம் காத்துக் கொண்டிருக்கிறது |
| | மண்ணிற் சமைந்த மனிதர்கள் • + |
| சிறுகதைத் தொகுதிகள் | : தோணி • |
| | ஒரு காவியம் நிறைவு பெறுகிறது |
| கட்டுரைகள் | : இலக்கிய நினைவுகள + |
| | பொச்சங்கள் |
| சரித்திரம் | : மூதூர் புனித அந்தோனியார் கோயிலின் பூர்வீக வரலாறு |
| | திருக்கரசைப்புராணம் (பதிப்பித்தது) |

• அகில இலங்கை ஸாகித்ய பரிசு பெற்றது.

+ வடக்கு கிழக்கு மாகாண ஸாகித்ய பரிசு பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

St. Joseph's Catholic Press, Batticaloa